303



வசந்தம்

விலை
8
அணா

சுபானு - பங்குனி

1944 - மார்ச்

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

வசந்தா மில்ஸ்

லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ஆ கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சி பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முருக்கு, காரம், சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்டிங்,
மல், சதர்,

தயாரிக்கிறோம்

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

வசந்தம் வருஷ மலர்

★

வரும் ஏப்ரல் இதழ் வசந்தம் வருஷ மலராக வெளி வருகிறது.

சித்திரையில் மலரும் இந்தச் சித்திரை மலர் கண்ணுக்கும் மனதுக்கும் ஒரு அரிய விருந்தாக அமைகிறது.

இலக்கிய உலகம் இது வரை கண்டிராத அதி அற்புதமான இலக்கியங்கள், சித்திர உலகம் இதுவரை பார்த்திராத மகோன்னதச் சித்திரங்கள் மலரை அலங்கரிக்கின்றன.

"வசந்தம்" சந்தாதாரர்களுக்கு மலர் வழக்கம் போல் வந்து சேரும். மற்றுள்ள அன்பர்கள் ரூபாய் ஒன்று செலுத்தி அந்தந்த ஊர் ஏஜண்டினிடம் பெற்றுக் கொள்ளலாம்.

MAY 1941 MADRAS

★

தாம்கோஸ் பாங்கி லிமிடெட், ஆலப்புழை

(திருவாங்கூர் சமஸ்தானத்தில் இணைக்கப்பட்டது. பங்குதாரர்களின் பொறுப்பு எல்லையுள்ளது.)

பங்குதாரர்களுக்கு டைரக்டர்களின் முதல் வருஷ அறிக்கை

(1) **1943** ம் வருஷம் டிசம்பர் மீ 31 உ யுடன் முடிவடையும் வருஷத்தில் பாங்கி யாதொரு குறைவுமின்றித் திருப்திகரமாக நடைபெற்றதென டைரக்டர்கள் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள். பாங்கியின் வெளியிடப்பட்ட மூலதனம் **5 லட்சம்.** வாக்களிக்கப் பட்டது **4 லட்சம்,** கேட்டு வசூலானது **2 லட்சம்.** வெளியிடப்பட்ட மூலதனம் **5 லட்சத்திற்கும்** இதற்குள் பங்குதாரர்கள் சேர்ந்திருப்பார்கள். ஆனால் சென்ற மே மாதத்தில் இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் **94** A விதியின்படி பிரிட்டிஷ் இந்தியாவில் பங்கு சேர்க்கக் கூடாதென்று சர்க்கார் தடை விதித்ததால் வாக்களிக்கப்பட்ட மூலதனம் **4 லட்சத்துடன்** நிற்கவேண்டியதாயிற்று.

(2) வருமானவரி, ஸூபர்வரி, பாங்கியின் சிப்பந்திகளுக்கு போனசு, ஆகிய இனங்களுக்கு ரூ. 14500 ஒதுக்கி வைத்தது போக, இந்த வருஷம் பாங்கியின் நிகர லாபம் ரூ. 32734—2—2 இதைப் பின்வருமாறு பங்கிட டைரக்டர்கள் உத்தேசித்துள்ளார்:-

ரிசர்வ் நிதி	...	25000	0	0
சமஸ்தான வருமான வரி நீங்கலாக 5 சத வீதம் பங்குதாரர்களுக்கு டிவிடெண்ட் அளிக்க	...	7194	10	6
மீதி: அடுத்த வருஷக் கணக்குக்குக் கொண்டுபோகப் பட்டது	...	539	7	8
ரூ	...	32734	2	2

(3) சென்ற வருஷம் பாங்கி வெற்றிகரமாக வேலை செய்ததற்கு உறுதுணையாய் நின்ற டிபாசிட்தாரர்களுக்கும் வாடிக்கைக் காரர்களுக்கும், பங்குதாரர்களுக்கும், டைரக்டர்கள் மனப்பூர்வமாக நன்றி செலுத்துகிறார்கள்

ஆலப்புழை
3—2—44

ஏ. வி. தாமஸ்
சேர்மன்.

1943 ஆம் டிசம்பர் மீ 31 உ யில் இருந்தபடி கணக்கு விவரம்.

பொறுப்புகள்		ரூ.	அ.	ப.
செலுத்தப்பட்ட மூலதனம்	...	2,00,000	0	0
முதலீடு ரிசர்வ் நிதி	...	135	0	0
வருமான வரி ரிசர்வ் நிதி	...	14,500	0	0
நிரந்தர, நடைமுதல், சேமிப்பு டிபாசிட்டுகள்	...	11,94,062	8	7
டிஸ்கவுண்ட் செய்த பில்கள் மீது ரிபேட்	...	49	13	5
சில்லரை செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்டது	...	2,588	9	5
லாபநஷ்டக் கணக்கு				
31—12—43 உடன் முடிவடைந்த வருஷத்தில் லாபம்	...	32,734	2	2
மொத்தம் ரூ.	...	14,44,070	1	7

ஐவேஜுகள்		ரூ.	அ.	ப.
கடன்கள். ஒவர் டிராப்டுகள், காஷ் கிரெடிட்டுகள், டிஸ்கவுண்ட் செய்த பில்கள், வாங்கின பில்கள், இதர கடன்கள்		9,46,449	1	10
இரும்பு பெட்டிகள், இதர சாமான்கள் தேய்மானம் நீங்க	...	11,065	7	9
புத்தகங்களும் ஸ்டேஷனரியும்	...	8,307	4	3
ஆரம்பச் செலவு: தள்ளுபடியான தொகை நீங்கலாக	...	700	0	0
சில்லரை இனங்கள்	...	634	0	1
கிளைகளுடன் வரவு செலவு வகையில்	...	16,118	8	0
சர்க்கார் பாண்டுகளில் முதலீடு	...	95,490	8	0
ஜாயிண்ட் ஸ்டாக்கு கம்பெனிகளில் பங்கு	...	2,500	0	0
முதலீடுகளின் மேல் வசூலாக வேண்டிய வட்டி	...	508	7	0
பாங்கிகளிலும் கைவசமும் ரொக்கம்	...	3,62,296	12	8
மொத்தம் ரூ	...	14,44,070	1	7

1943 ஹூ டிசம்பர் மீ 31 உ யுடன் முடிவடையும் காலத்துக்கு லாபநஷ்டக் கணக்கு

செலவு	ரூ.	அ.	ப.	வரவு	ரூ.	அ.	ப.
டிபாசிட்டர்கள், இதர வட்டி ...	5,870	14	4	வட்டி ...	53,365	8	3
சம்பளம், போனஸ் ...	17,022	12	6	பரிவர்த்தனையும் கமிஷனும் ...	33,629	15	7
டைரக்டர்களின் பீஸ் ...	300	0	0	டிஸ்கவுண்ட்டும் இதர வகைகளும் ...	652	2	8
ஆடிட்டிங், பைலிங் பீஸ் ...	930	14	1				
வாடகை, விளக்கு, இன்ஷியூரன்ஸ், வரி முதலியன ...	2,924	15	10				
புத்தகம், ஸ்டேஷனரி, அச்சுக்கூலி ...	7,791	0	9				
தபால் தந்தி டெலிபோன் வகையரு ...	472	5	8				
பிரயாணச் செலவு ...	1,990	9	4				
தேய்மானக் கணக்கு ...	1,249	6	8				
சாதல்வார் ...	1,073	14	5				
இன்வெஸ்ட் மெண்ட் ரிசர்வ் ...	135	0	0				
முதலீடு ரிசர்வ் முதலீட்டை மீட்டதில் நஷ்டம் ...	51	12	0				
தள்ளுபடி செய்த ஆரம்பச் செலவு ...	599	14	9				
வருமான வரிக்கு ஒதுக்கி வைத்தது ...	14,500	0	0				
நிகர லாபம் ...	32,734	2	2				
மொத்தம் ரூ. ...	87,647	10	6	மொத்தம் ரூ. ...	87,647	10	6

என். மார்த்தாண்டம் பிள்ளை
காரியதரிசி

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்
களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம்
செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்
பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய
பார்மசி

திருச்சி ரோடு கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக
அனுப்பி வைக்கப்படும்.

The Fashionable
Furnishing Fabrics

DRESS
TEXTILES

Ladies', Gents', Children's
Underwear Sport Shirts etc.

S. BEEMIAH
CHETTY,

"WHITE SHOP"
COIMBATORE.

THE VASANTHA DYEING WORKS.

181. Oppanakara Street
Coimbatore.

Phone No. 155. Estd., 1921.

Proprietor
C. M. Subramanya Chettiar

CONTRACTOR
To
THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colourguaranteed.

வசந்தம்

சென்னை ஏஜண்டு

"ஹிந்துஸ்தான் ஜெனரல்
நியூஸ் ஏஜன்ஸீஸ்"

சிந்தாதிரிப்பேட்டை
சென்னை.

★

PSG

மோட்டார்களை

ஸ்தாபனம் செய்து



செலவை

சிக்கனம் செய்யுங்கள்

PSG அண்டு சன்ஸ் தர்மஸ்தாபன இண்டஸ்டிரியல்
இன்ஸ்டிடியூட், பூளமேடு, கோயமுத்தூர்.

தந்திவிலாசம் : **FLOWER.** டெலிபோன் நெ. **175.**

சௌத் இந்தியா கார்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்.

இரும்பு, எலக்ட்ரிக், மில் ஸ்டோர்ஸ் வியாபாரிகள்,

அவனுசி ரோடு, கோயமுத்தூர்.

சேர்மன் போர்டு ஆப் டைரக்டர்ஸ்

டாக்டர். ராஜா. சர் அண்ணுமலை செட்டியார், KT. LL. D.

ஆப் செட்டிநாடு.

தலைமை ஆபீஸ் செட்டிநாடு.

எங்களிடம், எல்லாவிதமான டாட்டா இரும்புச் சாமான்களும், கலாய் குழாய்களும், நீலகிரி மார்க் சிமிண்டும், குட்லஸ் வால்வர்ணம் வகையருக்களும், சானிபட்டரிச் சாமான்களும், எலக்ட்ரிக் பல்புகள், வயர்கள், பங்காக்கள், மோட்டார், சுவிட்சுகள், முதலியவைகளும், மில் ஸ்டோர்ஸ், பாபின்ஸ், தோல் பெல்ட்டுகள், கிராப்ட் பேப்பர், ஊப் தகடுகள், கித்தான்கள் கிடைக்கும்.

★

பிராடியூஸ் டிபார்ட்மெண்டு,

21/138, 139, ரெங்கய்ய கவுடர் தெரு

நெல், அரிசி, கோதுமை, ரவை, மாவு தினுசுகள், சர்க்கரை நவதானியங்கள், மற்றுமுள்ள மளிகை சாமான்கள் எங்களிடம் மொத்தமாகக் கிடைக்கும்.

பீஸ் கூட்ஸ் டிபார்ட்மெண்டு ("கமர்ஷியல் எம்போரியம்")

21/138, 139 ரெங்கய்ய கவுடர் தெரு

பல மில்களில் தயாராகும் ஷர்ட்டிங், கோட்டிங், மல், லாங்க்ளாத், வாயில்ஸ், சீட்டி தினுசுகள், டிரில், டுவில், வேஷ்டிகள், துண்டுகள், இன்னும் பலவிதமான மில் ஜவுளி தினுசுகளும், எங்களிடம், மொத்தமாகவும், சில்லரையாகவும், சகாயமாகவும் கிடைக்கும்.

வசந்தா

தையல் நூல்

No. 600
ஆரம்பம் முதல் கடைசி வரையில் அருமையாக வருகிறது.

உங்களுக்கு பூரண திருப்தி தரும் என்பதற்கு உறுதி கூறுகிறேம்.

The Vasanta Sewing Thread Company
14/280. Oppanakara Street
COIMBATORE.

பொருளடக்கம்

மலர் 2] [இதழ் 12

அட்டைச் சித்திரம்
"கதிரவன்" ... 9
அழகின் விளையாட்டு
கு. விசுவநாதன் ... 10
ரிக்ஷா முனியன்
பாசரசு ... 13
கலைக்கோயில்
சுத்தானந்த பாரதி ... 16
மாங்கொத்து
ரா. வெங்கடாசலம் ... 26
சிலப்பதிகாரம்
சர். சண்முகம் செட்டியார் ... 33
மலை மகத்துவம்
தா. நா ... 42
சட்டைக்காரி
ரா. நா ... 46
சாட்டையில்லாப் பம்பரம்
விஜயராகவன் ... 48
பெண் கொலை
அ. கிருஷ்ணமூர்த்தி ... 52
புத்தக ஆராய்ச்சி
... ... 59
சாவித்திரி
ஆர். ஷண்முகசுந்தரம் ... 61
மனோதத்துவம்
வேணுபாய் பார்சி ... 73
நாவலாசிரியர்கள்
'ராஜ்யஸ்ரீ' ... 81
மலர் மணம்
... ... 84

எதிர்பாருங்கள்

பக்ஷிராஜா பிலிம்ஸ்

ஜகதலப்ரதாபன்

சின்னப்பா

ஸரோஜினி · ஜீவரத்தினம் · வரலக்ஷ்மி.

ஸந்தானலக்ஷ்மி · கிருஷ்ணன் · மதுரம்

Directed by S. M. SRIRAMULU NAIDU

a NARAYANAN Co. Release

P.S.M.Co.

JT2A

Nidu

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான்

கம்பர்

ஆற்றுப் பாட்டு

அட்டைச் சித்திரம் :

உச்சமா மலையினின்றே
ஊறி வந்தேனே ! — என்
பச்சைக் குழந்தை பால்குடிக்கப்
பாய்ந்து வந்தேனே !

மேடு பள்ளந்தாவிக் குதித்து
விரைந்து வந்தேனே ;
காடுங் கரையுங் கவலையின்றிக்
கடந்து வந்தேனே

வெள்ளமாகப் பெருகிப் பெருகி
வேட்கை தீரவே
உள்ள மட்டும் உலகிற்குதவ
உருகி வந்தேனே

பரம் பொருளைப் பண்ணுடனே
பாடி வந்தேனே !
பரந்த கடலிற் கலந்து மகிழப்
பணிந்து வந்தேனே !

— கதிரவன்

அழகின் விளையாட்டு

[கு. விசுவநாதன்]

அழகுக்கு உள்ள சக்தியே சக்தி. மனதைக் கவரும் அதன் சக்தி தனிப் பெருமையுடையது. சின்னவர், பெரியவர் என்றில்லை; அறிஞர், அறிஞரல்லாதார் என்றில்லை: வறிஞன், செல்வன் என்றில்லை, வேறு எவ்விதப் பாகுபாடுமில்லை அழகிற்கு. எப்படிப்பட்டவர்களாயினும் சரி, தன் வசப்படுத்தி விடும். வசப்படுத்தி ஒரு மகிழ்சியையும் அளித்து விடுகிறது. அடடா! அழகின் சக்தியே சக்தி!

வர்ணம் தீட்டப்பட்டும், பளபளப்பும் உடைய பொம்மை முதலிய விளையாட்டுப் பொருள்கள் குழந்தைகளின் மனதை இழுத்துக் கொண்டு விடுகின்றன. சிறுவர்களைக் கடைவீதிப் பக்கம் அழைத்துச் செல்ல நமக்குக் கொஞ்சம் பயம்தான். அப்பொருள்களைக் கண்டு அவர்கள் ஆசைப்படும் பொழுது சமாதானம் செய்வதே நமக்குப் பெரும் வேலை ஆகிவிடுகிறது. அழும் சிறுவர்களுடைய மனதை மாற்ற இப்பொருள்கள் பேருதவியாயிருக்கின்றன. அடமும் அழுகையும் அப்படியே அடங்கி விடுகின்றது.

நம்மையும் அழகுடைப் பொருள்கள் சும்மா விடுவதில்லை; ஒரு கை பார்த்துத் தான் விடுகின்றன. ஆனால் நாம் பொம்மை முதலிய விளையாட்டுச் சாமான்களை விரும்புகிறோமா? இல்லை, இல்லை, நம் கண்ணுக்கும் அழகாய்த்தான் காட்சி அளிக்கின்றன. ஆனால் குழந்தைகளுக்குத்தான் அவை மகிழ்ச்சி ஊட்டும். நமது மனம் நமக்குரிய பொருள்களிலே செல்லுகிறது. புதிய விதமான நாற்காலியோ சோபா முதலிய சாமான்களையோ கண்டு விட்டால் அதில் சிறிது நேரம் உட்காரத் தோன்றுகிறது. விரைவில் வாங்கும் தீர்மானமும் கொஞ்சம் போல உண்டாகிவிடுகிறது. கண்டதை விரும்பும் இதுவும் சிறுவர் குணத்தை ஒத்ததுதானே? நம் மனதைக் கவரும் பொருள்களில் இவை சாதாரண வகுப்பைச் சார்ந்தவை. உலகில் நமக்கு மகிழ்ச்சி அளிக்கவல்ல அழகுப் பொருள்கள் எத்தனையோ இருக்கின்றன.

கவிஞனுக்கு இது போன்ற பொருள் மீது நாட்டமில்லை. கலைதான் அவன் கனாக் காணும் பொருள். இயற்கை எழில் அவனை இன்பத்திலாழ்த்தும் பொருள். சூரியன், சூரியன்தான். சந்திரன் சந்திரன்தான். விண்மீன் விண்மீன்தான், நம் கண்களுக்கு. கவிஞன் கண்களுக்கு அவை வேறுவித காட்சி அளிக்கின்றன. அவைகளில் அவன் அழகைக் காண்கிறான். ஆனந்தம் கொள்கிறான். அதன் அறிகுறியாக அவன் வாயிலிருந்து மலரும் சொற்கள் நம்மையும் அவன் உலகிற்கு அழைத்துச் செல்லும் சக்தி வாய்ந்துள்ளவையா யிருக்கின்றன.

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பொருள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறுதான். சிறுவர்க்கு பொம்மை முதலிய விளையாட்டுச் சாமான்; ஏனையோருக்கு உலகில் மலிந்துள்ள எண்ணிறந்த அழகுடைய பொருள்; கவிஞனுக்குக் கலைப்பொருள் இயற்கைப் பொருள். ஒருவருக்கு இன்பமளிக்

கும் பொருள் மற்றவர்க்கு இன்ப மளிப்பதில்லை. ஆனால் அவர வர்க்கு இன்பமளிப்பது அவை களிலுள்ள அழகுதானே? அழகு கண்ணால் பார்க்கப்படும் பொருள் அல்ல. அழகுடைப் பொருள் களைக் கொண்டு அது உணர்வில் உணரக்கூடியது. ஆகையால் பொருள் வெவ்வேறாய் இருப்பி னும் நம் கவனத்திற் குரியது அழகு ஒன்றுதான்.

எல்லோரும் கண்டு களிக்கும் அழகுடைப் பொருள்களும், ஒன்று உண்டு. ஏனைய அழ குடைப் பொருள்கள் உயிரற் றவை. இப்பொருளுக்கு உயிர் உண்டு. உணர்ச்சி உண்டு. அதுதான் பெண். பெண் அழ கில் தலைசிறந்து விளங்குகிருள்.

பெண் அழகில் உள்ளந்தோயார் உலகில் இல்லை. ஐம்புலன்களையும் தன் வயப்படுத்தி உலக இன் பத்தை வெறுத்தவர்கள் துறவி கள். அவர்களுடைய மனதை யும் அசைக்கும் தன்மை வாய்ந் துளது அவள் அழகு. உயிரற்ற பொருள்களே மனிதன் மனதைக் கவரக்கூடிய தென்றால், உயிரும் உணர்வும் உள்ள பெண்ணின் அழகு என்னதான் செய்யாது.

அவள் அழகு அவன் கண் களுக்கு உணவு; அவள் இனிய சொற்கள் செவிக்குணவு; அவள் உள்ளத்திலெழும் அன்புடன் அவள் அழகும், தேன் மொழியும் அவன் உடலிலே இன்பமென் னும் மின்சாரத்தை ஓட்டிய வண் ணம் இலங்குகின்றன. அவன் வாழ்வில் ஒளிதோன்றிப் பிரகாசிக் கின்றது. பெண் இல்லையேல் வாழ்வில் சுவையேது? அவளுக் காக அவன் எதை வேண்டுமானு லும் செய்ய சம்மதிக்கிருன். உயி ரையே தியாகம் செய்யவும் துணிகின்ருன்.

உயிரற்ற அழகுப் பொருள்கள் நமக்கு மகிழ்ச்சி மட்டும் அளிக் கின்றன. உயிருள்ள பெண்ணின் அழகு நம் உள்ளத்தில் உறங்கும் அன்பையும் எழுப்பி விடுகின்றது.

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு"

நமக்கு நம் குழந்தை வேறு தான். பிறர் குழந்தை வேறு தான். பிறர் பொருளை, தம் பொருள் போல் கருதுவதில்லை மனித உள்ளம். ஆனால் அழகிய நங்கை ஒருத்தியைக் கண்ட ஒரு காளையின் உள்ளத்திலே அவள் அன்னிய பொருளல்ல, தன்னு டையவள் என்றது போன்ற தொரு உணர்ச்சி எழுகிறது, இது அழகின் குறும்புதானே? பண்டைத் தமிழ் இலக்கியத்தில் ஒரு சோலையில், முன்பின் அறி யாத ஒரு ஆணும் பெண்ணும் தனி யிடத்தே தற்செயலாய் எதிர்ப் பட்ட பொழுது அழகு அவர்க ளைப் படுத்தி வைத்த பாட்டைக் கவனிப்போம்.

சோலை ஒன்றிலே இளம் பெண் ணொருத்தி துள்ளிக் குதிக்கும் மான் போல ஆடியும் பாடியும் மலர் பறித்துக் கொண்டிருக்கி ருள். அவள் அழகோ சொல்ல முடியாத அழகு. அவள் செய் கையோ அதனிலும் அழகுடைய தாயிருந்தது. வேட்டையாட அவ்வழியே வந்த வேட்டுவச் சிறுவன் ஒருவன் அவளைப் பார்த்து விட்டான். அவ்வளவு தான். அப்படியே நின்று விட் டான் அசைவற்று, எதையோ பறிகொடுத்தவன் போல. அவன் உள்ளத்தில் என்னென்னவோ தோன்றிற்றும். அவள் பெண் தானு என்ற சந்தேகம் கூட வந்து விட்டதாம். இவள் இங்கு வசிக் கும் தேவதையோ? அல்லது இது வும் ஒரு மயில் வகுப்பைச் சேர்ந் ததுவோ? என்று நினைத்தானும்.

அப்படி இருந்ததாம் அவள் அழகு.

இவன்தான் இப்படிச் செய்தா னென்ருல் அவள் செய்வதைக் கேளுங்கள்.

பூப்பறித்துக் கொண்டிருந்த அவளும் அவனேப் பார்த்து விட்டாள். எதிரே நிற்பது ஆண் பிள்ளே. இடமோ, தனியிடம். உடனே போய்விட வேண்டாமா? போகவில்லே. தலே குனிந்தாள். பெருவிரல் நகத்தால் தரையைக் கீறினள். அடிக்கடி தலே நிமிர்ந்து அவனேப் பார்த்தும் பார்க்காதது போலும் அங்கேயே நின்று கொண்டிருந்தாள். என்ன அழுத்தம்.

அவள் அப்படிப் பார்த்த பார்வை இவனுக்கு எப்படி இருந்ததாம்? அவன் உயிரையே உண்டு விடும் போலிருந்ததாம். பாவம், நல்ல வேளே உயிர் மட்டும் போகவில்லே. அவளுக்குக் "காதல்" தோன்றிற்ரும். அவள் அதை வெளியே காட்டாமல் கண்ணுள்ளேயே வைத்துக் கொண்டு அக்கண்களேயே தூதாக அனுப்பி, தான் எண்ணியதை அவனுக்கு உணர்த்தினளாம். என்ன சமத்து.

"காதன்மை கண்ணுளே யடக்கிக்
கண்ணெனும் தூதினல் துணி
பொருள் உணர்த்தினள்."

பின் என்ன நடக்கும்? நாள் பல சென்றன. காதல் வளர்ந்தது. காதலர் கலந்தனர். காதல் மணம் புரிந்தனர். பெற்று வளர்த்த பெற்ருேர்களின் சம்மதத்தை நினேத்தார்களா...... நேரமேது.

பின்னர் அவ்வாண்மகன் தன் செய்கையை ஆராய்ந்தான். அவன் செய்கைக்குக் காரணம் அன்பு எனக் கண்டு கொண்டான். கண்டு கொண்டவன் அப்பெண்ணே நோக்கி :-

"நீ யாரோ நான் யாரோ, நம் பெற்ருேர் எவ்வெச்சாதியினரோ; நாமும் ஒருவரையொருவர் முன் பின் அறிந்திருக்கவுமில்லே. அப்படியிருந்தும் அன்பொழுகும் நம் இருவர் நெஞ்சமும், செம்மண் நிலத்தில் பெய்த மழை நீர் அம் மண்ணின் நிறத்தோடு ஒன்ருய்க் கலப்பது போல, ஒன்ருகக் கலந்தனவே" என்று ஆச்சரியத்தோடு கூறினனும்.

இப்பேர்ப்பட்ட அருமையான விஷயங்களே அனுபவிக்க வேண்டியது தான்.



ரிக்ஷா முனியன்

[பாசரசு]

ரிக்ஷா வண்டிக்காரர்களில் முனியன் தப்பிப் பிறந்தவன். வம்பு பேசாமல் கொடுத்த வாடகையை வாங்கிக் கொள்வான். அதோடு அவன் மற்றவர்களைப் போலக் குடிகாரன் அல்ல!

ஒரு காலில் கிழிந்த கான்வாஸ் ஷூசும் மற்றொரு காலில் ஒரு கருப்பு பூட்சும் மாட்டிக் கொண்டிருப்பான். இடுப்பில் நூறு ஒட்டுகள் போட்ட ஒரு நீல நிஜார். கையில்லாத ஒரு கருப்புக் 'கோட்டு' சதையில்லாத அவனுடைய எலும்புக் கூட்டை அதாவது அவனுடைய மார்பை அடிக்கடி திறந்து காட்டிக் கொண்டிருக்கும். தலையில் வெள்ளைப் பெண்கள் அணியும் ஒரு அழுக்கடைந்த பழைய பட்டுத் தொப்பி. இவைகளைக்கொண்டு முனியனைச் சுலபமாகக் கண்டு பிடித்து விடலாம்.

கடும் வெயிலில் பகலெல்லாம் வண்டி யிழுத்து விட்டு, இரவில் வண்டியின் சொந்தக்காரரிடம் வண்டியை ஒப்படைத்து விட்டுக் கூலி பெற்றுச் செல்வான். அவனுக்குக் கிடைக்கும் கூலி ஒரு நாளைக்கு ஆறணா, எட்டணாவுக்கு மேலிருக்காது.

அதைக் கொண்டு அவனும் அவன் மனைவியும் எட்டு வயதுள்ள மகனும் வயிறு வளர்த்தாக வேண்டும். அவர்களுடைய வீடு சாலை மரத்தடிதான். நாலைந்து சட்டிபானைகள். ஒரு அகப்பை, ஒரு பழைய தகரப் பெட்டி. ஒரு அழுக்குத் துணி மூட்டை இவ்வளவுதான் அவர்களுடைய சொத்து.

முனியனுடைய பையன் சுப்புக்குட்டி பகல் பூராவும் சைனாபஜாரில் கடைக்குக் கடை வேடிக்கை பார்த்துக் கொண்டே பொழுது போக்குவான். சில சமயங்களில் சுவரில் ஒட்டியிருக்கும் சினிமாப் போஸ்டர்களைக் கிழித்துக் கொண்டு வந்து தன் தாயாருக்கு அடுப்பு எரிக்கக் கொடுப்பான். பொம்மைகளைப் பார்ப்பதில் அவனுக்கு ஒரு அலாதியான ஆசை. நேரம் போவது தெரியாமல் அவைகளையே பார்த்துக் கொண்டிருப்பான். குழந்தைகளுக்கு விளையாட்டுச் சாமான்களின் மேல் தானே பிரியமிருக்கும். ஏழையானா

னும் அவனும் குழந்தை தானே. சென்னைப் பட்டினத்தில் ஏரோப்பிளான்கள் பறப்பதை அடிக்கடி பார்த்திருக்கிறான். அதே மாதிரி சாவி கொடுத்தால் ஓடும் ஏரோப்பிளான்கள் கடைகளில் வைத்திருப்பதைப் பார்க்கும் போதெல்லாம் அந்த மாதிரி தனக்கும் ஒன்று வேண்டுமென்று ஆசைப்படுவான். ஆனால் அவனுக்கு யார் கொடுப்பார்கள்.

ஒரு நாள் பொம்மைக் கடையின் முன் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு தனவந்தரும் இரண்டு சிறுவர்களும் இறங்கினார்கள். அவர்கள் கடையில் பலவிதமான பொம்மைகளும், திருகினால் ஓடும் மோட்டார் வண்டிகளும் ஏரோபிளான்களும் வாங்கினார்கள். சுப்புக்குட்டி அவர்களை அண்டித் தனக்கும் ஒரு ஏரோபிளான் தரும்படிக் கேட்டான். அந்தத் தனவந்தர் அவனைப் "போடா போ" என்று விரட்டினார். அந்தச் சிறுவர்கள் காரியுமிழ்ந்து கைகொட்டிச் சிரித்தார்கள். அவன் அழுது கொண்டே தன் தாயாரிடம் போனான். அவளிடம் ஏரோப்பிளான் வாங்கித் தரும்படி கேட்டுத் தொந்தரவு செய்தான். வறுமையால் நொந்த அவள் குழந்தையை நன்றாய் அடித்து விட்டாள். அவன் அழுகை நிற்கவில்லை. முனியன் வந்தான். மறுநாள் வாங்கித்தருவதாகச் சொல்லிச் சமாதானப் படுத்தினான். அன்றிரவே அவனுக்குக் கடுமையான ஜுரம் கண்டது. இரவெல்லாம் அவன் பொம்மைகள் ஏரோப்பிளான் இவைகளைப் பற்றியே பிதற்றிக் கொண்டிருந்தான்.

மறுநாள் முனியன் பல குப்பைத் தொட்டிகளில் தான் சிரமப்பட்டுத் தேடி எடுத்த ஒரு சிறு தகரப் பெட்டியும், கை கால் ஒடிந்த சில பொம்மைகளும் சிறகில்லாத ஏரோப்பிளான் ஒன்றும் கொண்டு வந்தான். இதைக் கண்ணுற்ற பையன் சுரத்தோடும் எழுந்து உட்கார்ந்து கொண்டு அவைகளைப் பார்த்தான். ஆனால் அந்த ஏரோப்பிளான், தான் கடையில் பார்த்த மாதிரி யில்லை. ஆகவே அந்த மாதிரி வேண்டும் என்று அழ ஆரம்பித்து விட்டான். ஜுரமும் அதிகமாகிக் கொண்டு வந்தது. முனியனுடைய வேதனை சொல்லி முடியாது. கடையில் சென்று பொம்மை வாங்கக் கூடிய நிலையில் இல்லை அவன்.

முனியனைத் திருப்தி செய்ய வேண்டுமென்று அவனுடைய மனச்சாட்சி வற்புறுத்தியது. அன்று பூராவும் குப்பைத் தொட்டிகளில் விளையாட்டுச் சாமான்கள் தேடுவதிலேயே பொழுது போக்கினான். ஏதாவது கிடைத்தால் தானே. சைனபஜாரில் சில கடைகளில் கடனாகக் கூடக் கேட்டுப் பார்த்தான். யாரும் கொடுப்பாரில்லை. தன் குழந்தையை அந்த ஒரு பொருளை வாங்கிக் கொடுத்து தன்னால் சமாதானப் படுத்த முடியவில்லையே என்று நினைத்த போது அவனுடைய நெஞ்சு கலங்கி விட்

டது. வெறுங்கையோடு போனால் குழந்தைக்கு என்ன பதில் சொல்வது எப்படிச் சமாதானப் படுத்துவது என்றே தெரியவில்லை, நேரம் போவது தெரியாமல் கடை வீதியில் சுற்றிக் கொண்டிருந்தான். கடைகளும் கூட மூடி வெகு நேரமாகி விட்டது.

திடீரென்று ஏதோ ஒரு முடிவுக்கு வந்தான். ஒரு கடையின் முன்னே சென்று பூட்டை உடைத்தான். உள்ளே நுழைந்து பல விதமான விளையாட்டுச் சாமான்களையும் ஒரு ஏரோப்பிளேனையும் எடுத்துக் கொண்டு தன் இருப்பிடத்தை நோக்கி ஓடினன். திறந்த கடையைக் கூட மூட மறந்து விட்டான். அவன் மரத்தடிக்குச் சமீபமாக போகும் போது இருட்டில் அவன் மனைவியின் அழு குரல் கேட்டது. தான் கொண்டு வந்த பொம்மைகளை அப்படியே வீசி விட்டு குழந்தையின் மேல் விழுந்து கதறினன்.

மறுநாள் எல்லா ரிக்ஷா வண்டிகளும் வழக்கம் போல் ஓடிக் கொண்டிருந்தன. முனியனைத்தான் காணவில்லை. அவன் தான் போலீஸ் லாக்கப்பில் இருக்கிறனே!

கலைக் கோயில்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

24. எனது தந்தை

“எனது தந்தை” என்ற கட்டுரை பர்மா பத்திரிகைகளில் வந்தது; அதைப் போற்றாதவர் இல்லை. கட்டுரைத் தலைவர், எழுத்தாளர் இருவரையும் தமிழரும் பிறரும் மெச்சினர்; இப்படிப்பட்ட சாதுவையா திருடர் மோசம் செய்தனர் என்று வருந்தினர். தமிழ் மணியின் பேனவுக்கு ஏகவிளம்பரமாய் விட்டது. இரங்கூன் தூதனில் வந்த “எனது தந்தை” யில் சில சுவையான பாகங்களை இங்கே தருகிறேன்.

எனது தந்தை

பொதுநலப் புண்ணியர்

சிவநேசர் வரலாறு

(தமிழ்மணி இராமநாதன் எழுதியது)

[சென்ற இருபது நாட்களாகச் சிவநேசத்தைப் பற்றிப் பத்திரிகைகள் பலவாறு செய்திகள் வெளியிட்டன. நமது சகோதரப் பத்திரிகையொன்று உளறிக் கொட்டிய அபத்தச் சரடுகளைக் கண்டு நமது நேயர் வெறுப்பும் சிரிப்பும் காட்டினர். சிவநேசத்தின் அருமைத் திருமகன் தமிழ்மணி இராமநாதன் மதுரையிலிருந்து நேற்று இங்கே வந்தார். அவர் பெரிய சங்கப் புலவர்; தமிழும் ஆங்கிலமும் அறிந்தவர்; தமிழிசைப் புலவர், அவர் தமது தந்தையைப் பற்றி எழுதிய அரிய கட்டுரையை இங்கே தருகிறோம். நேயர்கள் ஊன்றிப் படிப்பார்களாக.

ஆசிரியர்]

“ஈதல் இசைபட வாழ்தல் அது வல்ல
(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு”

(திருவள்ளுவர்)

ஈட்டல், ஈதல் — இதுவே எந்தையின் வாழ்க்கை. எந்தை காரைக்குடியிற் பிறந்தவர்; எட்டு வயதிலேயே பெட்டியடியில் அமர்ந்து, வட்டித் தொழிலும் வியாபாரமும் கற்றவர். அவர் இதே இரங்கூனிலேதான் தொழில் தொடங்கினார்; இளமையிலேயே பெற்றோரையிழந்து, தாயாதிகள் சூழ்ச்சியால் அவர் பட்ட இடர்கள் கொஞ்சமன்று. அவர் வஞ்சமற்ற குணசீலர்; எது வந்தாலும் பொறுமையாயிருந்து பிறருக்குத் தீங்கு நினைக்காமல் நன்மையே நினைப்பவர். அவர் பரம சிவபக்தர். இவரை ஏமாற்றித் தாயாதிகள் சொத்தைப் பறித்துக் கொண்டனர்; இவர் கலங்கவில்லை; வீட்டை விற்று, ஈப்போ

சென்று வியாபாரம் செய்து ஏராளமான பொருள் சேர்த்தார், வருடம் இலட்ச ரூபாய் வருமானம் வரும்; அதில் பாதி தருமத்திற்குச் செல்லும். இவர் எங்கே சென்றாலும் அன்னதானம் ஏராளமாகச் செய்தார். ஏழைகளின் முகம் பார்த்து வறுமை தீர உதவினர். இவர் விளம்பரமில்லாமல் எத்தனையோ நன்மைகளைச் செய்திருக்கிறார். ஒருதரம் தன் ரப்பர் தோட்டத்தில் வேலை செய்த தமிழ்க் கூலிகளுக் கெல்லாம் இவர் மனை கட்டித் தந்து, தினந் தினம் படியளந்தார். அவர்கள் பட்ட கடன்களையெல்லாம் தீர்த்தார். அவர்களுக்காக ஒரு பள்ளிக்கூடம் வைத்துதவினர்; ஒரு சிவன் கோயில் கட்டி எல்லோரும் கடவுளை வணங்கியே வேலை தொடங்கச் செய்தார். நல்ல தேவாரப் புலவரை வரவழைத்து, அவர்கள் அடிக்கடி தமிழிசை கேட்டு இன்புறச் செய்தார்.

சிவநேசர் இராமநாதபுரத்திலிருந்த தமது மாமாவுடன் கூட்டு வியாபாரஞ் செய்தார்; மாமா மகள் விசாலாட்சியை மணந்து இரண்டு மக்களுக்குத் தந்தையானர். முதல் மகன் என் அண்ணன் வெள்ளையன் — நான் இரண்டாவது பிள்ளை, என் அண்ணனைப் படிக்கவைத்து வியாபார முறையில் பழக்கி, ஈப்போவுக் கனுப்பினர். எனக்குத் தமிழும் ஆங்கிலமும் தக்க முறையில் பயிற்றினர். நான் கற்ற தமிழ்ச் சங்கத்திற்கு எந்தை ஏராளமான நன்கொடையளித்தார். தமிழ்ப் புலவர்களுக்கும் இசைவாணருக்கும் இவர் பதினயிரக் கணக்காகச் சன்மானம் அளித்தார். எந்தை தமிழ்ப்பற்றுடன் சைவசமயத்தில் மிக்க அன்புடையார். பிறசமயங்களையும் நன்குமதிக்கும் சமரஸர். கடுமையான வேலை யூடும் அவர் அடிக்கடி சிவநாமத்தை ஜபிப்பார். சிலசமயம் கண்ணை மூடிக் கொண்டு உள்ளே லயித்துத் தியானிப்பார். ஊருக்கு எந்த மகான் வந்தாலும் இவர் உபசரித்துப் பணிசெய்வார். சுவாமி விவேகானந்தர் பாம்பனில் பேசும் போது நானும் எந்தையும் கேட்டோம். இருவரும் விவேகானந்தரைப் பார்த்தோம். சுவாமிஜி தேவாரப் பாசுரத்தை நான் பாடக் கேட்டு உருகினர். எந்தை அவருக்குக் கைநிரம்பப் பொன்னள்ளிப் பாத காணிக்கை வைத்து வணங்கினர்.

கோடகநல்லூர் சுந்தரசுவாமிகளிடம் எந்தை ஸூதஸம்ஹிதை கேட்டார்! ஆறுமுக நாவலரிடம் சிவநாமம் அறிந்தார்; திருவாடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிகரிடம் பஞ்சாக்ஷர உபதேசம் பெற்றார்; சுப்பிரமணிய தேசிகரிடம் சிவஞானபோதம் கேட்டார்; மகா வித்வான் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் ஆவுடையார் கோவிலுக்கு வந்தபோது, சென்று கண்டு மரியாதை செய்தார்; அப்பெரியார் வாக்கினல் திருவாசகங் கேட்டார். யாழ்ப் பாணம் கதிரைவேற் பிள்ளையவர்களிடம் பெரிய புராணம் கேட்டார். எந்தை இராமநாதபுரம் அரசரான முத்துராமலிங்க சேதுபதிக்கும், பாஸ்கர சேதுபதிக்கும், பாண்டித்துரைத் தேவருக்கும் அரிய நண்பர். மூவரும் தமிழ் வளர்த்த வள்ளல்கள், பேரறிஞர்கள் — இவர்களைக் காணவரும் வித்துவான்கள் அனைவரையும் எந்தை கண்டு கேட்டிருக்கிறார். இக்கேள்வியினல் அவர் நல்ல தமிழறிவுடன், அறிவின்பயனையும் பெற்றார். திருவாசகத்தை எந்தை பாராயணம் செய்வார்; திருக்குறளை அனுட்டிப்பார். இந்த இரண்டு நூல்களே அவருக்கு வழி காட்டிகள். இவற்றை உள்ளத்திற் கொண்டு எந்தை தாளாண்மையும் வேளாண்மையும், வியா

பாரமும் செய்தார். வரவர அவருக்கு வட்டித் தொழில் கூடப் பிடிக்கவில்லை; பஞ்சு வாங்கிக் கிராம ஏழைகளைக் கொண்டு நூற்றுத்தறிபோட்டு, ஆடைகள் நெய்யச் சொல்லி விற்பது, நிலங்கள் வாங்கி விவசாயப் பண்ணை வைத்து ஏராளமான ஏழைகளுக்கு உழைப்பும் பிழைப்புந் தருவது—இவையே அவருக்குப் பிரியமான தொழில்கள். மலேயாவில் இவரது ரப்பர்த் தோட்டத்தில் சுமார் ஆயிரம் தமிழர் மகிழ்வுடன் பிழைக்கிறார்கள். இங்கே பர்மாவில் இவர் நிலங்களைச் சாகுபடி செய்து சுமார் 200 உழவர் பிழைக்கின்றனர். இவர் தமக்கென உடலைக் கூட அபிமானிப்பதில்லை. நாளைக் கவலை இவருக்கில்லை. இன்று இவர் கையிலிருப்பதைத் தானும் துய்த்து எளியவருக்குந் தருகிறார்.

இப்பரோபகாரத்தால் இவருக்கு எத்தனையோ இடர்கள் வந்தன. எனினும், இவர் தமது அறத்தை மறக்கவில்லை. இவரது மாசற்ற உள்ளத்தை விளக்கச் சில சம்பவங்களை இங்கே குறிக்கிறேன்!

(1) எந்தை நான் பிறந்ததுமே பிரமசரியம் பூண்டார்! எந்தாயும் விரதாதிகளை அனுட்டித்தாள். சில பொறுமைக் காரர், இவரது பிரமசரியத்தைக் கெடுக்க இவரை வஞ்சித்து ஒரு இரவில் வேசை மனைக்குள் சிறையிட்டனர். இவரை எவ்வளவோ வலைவீசிப் பார்த்தாள். "அம்மா, நீ வயிற்றுப் பிழைப்பிற்காகத்தானே இப்படி உடலை விற்கிறாய்! உனக்குப் பணந்தானே வேண்டும்; இந்தா ஆயிரம் ரூபாய்! என்னைக் கெடுக்காதே; அதைக் கொண்டு இசைப் பயிற்சி செய்து பாடிப் பிழை! கூடிப்பிழைக்காதே — என்றார். வேசை இவரை வணங்கி அவ்வாறே செய்தாள். அவள் இன்னும் மதுரை மீனாக்ஷி சுந்தரேசுரரைப்பாடி அன்பு செய்து தூய சைவ வாழ்க்கை வாழ்கிறாள். பாட்டுக் கச்சேரி செய்து பிழைக்கிறாள்.

(2) இவர் ஒரு நாள் போக்கு வண்டியில் சிவகங்கையிலிருந்து மதுரைக்கு வரும் வழியில், செம்பனூரில் திருடர் சுற்றிக் கொண்டனர். இவரிடம் இருந்தது ஒரு பணிகார மூட்டையும் பத்து ரூபாயும்தான். இவர் திருடரை அன்புரைபேசிப் பலகாரந்தந்து வசப்படுத்தி "தம்பிமார்களா, உங்கள் நன்மைக்கு ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள். நீங்கள் எதற்காக இப்பாபத் தொழில் செய்கிறீர்கள்? வயிற்றுப்பிழைப்புக்கு ஒரு நல்ல தொழில் தருகிறேன். செய்யுங்கள் — இந்த ஈனத்தொழிலை விட்டு மானமாகப் பிழையுங்கள். பிழைப்பிற்கு வழி காட்டுகிறேன்" என்றார் திருடர். இவர் அன்பைக் கண்டு வியந்தனர். அவர்களுக்கு வைகைப்பாசனத்தில் நிலம் வாங்கித் தந்து, பயிர் செய்து பிழைக்கச் செய்தார் எந்தை; கள்ளர் உழவரானார்கள்.

(4) தாது வருஷப் பஞ்சத்தில் எந்தை ஏராளமாகக் கேப்பையும் கம்பும் வாங்கிச் சேர்த்துப் பசித்த ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்தார்.

(5) மதுரையில் பல ஏழை மாணவருக்கு இவர் ஆடையும் உணவும், சம்பளமும் புத்தகங்களும் தந்து கவலையற்றுக் கல்வி கற்கச் செய்தார்.

இவ்வாறு இவர் எத்தனையோ தான தருமங்களுக்குத் தன் பொருளை அள்ளிவிட்டார். ஒரு நாள் இவர் கையில் ஐயாயிரம் ரூபாய் எடுத்துக் கொண்டு மதுரைக்குச் சென்றார். நச்சினார்க்கினியார் தமிழ்ச் சங்கத்திற்குள்

புகுந்தார். அங்கே புலவர் சங்க நூல்கள் வெளியிட ஓர் அச்சகம் வாங்க வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்தனர். எந்தை தமது கையிலுள்ள 5000 ரூபாயைத் தந்து, அச்சகம்வாங்கலாம் என்றார். "இன்று நல்லறம் புரிய இறைவன் வாய்ப் பளித்தான்." என்று மகிழ்ந்தார். எந்தை இவ்வாறு அறஞ்செய்து செய்தே இவர் தமது பொருளிற் பெரும் பகுதியைச் செலவிட்டார்.

இவர் பரம ஏழைத் தொழிலாளருக்கு மிகக் குறைந்த வட்டி போட்டுப் பணந் தந்தார். ஒரு சமயம் இவர் கடன் கொடுத்த கிராமத்தில் வெள்ளச் சேதம் மிகுதியாகிப் பல ஏழைகள் வீடில்லாமல் தவித்தனர். சுமார் ரூ 10000 பெறுமான அவர்கள் கடனை மன்னித்து விட்டு, சிவநேசர் தமக்குரிய பனைமரங்களையும், மூங்கில்களையுங் கொண்டு எல்லாருக்கும் ஓலைக்குடில் கட்டிக் கொடுத்தார். அந்த ஏழைகளில் நல்ல உழைப்பாளிகளைத் தமது பர்மா வயல்களிலும், மலாயா ரப்பர் தோட்டங்களிலும் வேலை செய்யச் சொல்லித் தகுந்த ஊதியம் அளித்தார்.

சமயப் பற்று தமிழ்ப் பற்றுடன் எந்தைக்கு நாட்டன்பும் மிகுதி; நமது நாடு கல்வியும் தொழிலும் செழித்து மற்ற நாடுகளைப்போலத் தலை நிமிர வேண்டும் என்று இவர் அடிக்கடி சொல்வார்; இவருக்கு ஆரவாரங்களிலும் மேடை அச்சு விளம்பரங்களிலும் நோக்கமில்லை. இவர் பலருக்குப் பயனாகும் நிலையான தொண்டுகளையே போற்றுவார். திலகரும், அரவிந்தரும், B. C. பாலும், சிதம்பரம் பிள்ளையும் சுதேசி இயக்கத்தை மும்முரமாக நடத்தும் போது எந்தை ஏராளமான தறிகாரர்களை ஆதரித்து, அசல் சுதேசித் துணி உற்பத்தி செய்து வீடு வீடாகச் சென்று விற்கவும் தொண்டர்களைத் தயாரித்தார். இத்தொண்டர் "எந்தாய் வாழ்க" என்று திண்ணையில் வந்து அமர்ந்ததுமே, வீட்டிலுள்ளவர்கள் சிவநேசம் சுதேசியா என்று தமக்கு வேண்டிய ஆடைகளை மகிழ்வுடன் வாங்கிக் கொள்வர். சிதம்பரம் பிள்ளை கப்பல் நடத்திய போது இவர் அந்தக்கப்பலிலேதான் இலங்கைக்குச் சரக்கனுப்பி வந்தார். ஒவ்வொரு மாதமும் ஆகும் கப்பல் கூலியை இவர் முன் பணமாகவே உதவி வந்தார். சிதம்பரம் பிள்ளை கோயமுத்தூர் சிறைக்குச் சென்றார். எந்தை அவர் குடும்பச் செலவுக்கு மாதம் ஒரு தொகை அனுப்பியுதவினர். இப்படி இவர் நல்ல வழிகளிலேயே பொருளை அள்ளி விட்டார். இவர் தமது வருவாயைச் சேர்த்துப் பூட்டியிருந்தால் இப்போது 50 லட்சத்திற்கு முதலாளியாயிருப்பார்.

ஆனால் இவருக்குச் சேர்ப்பதைவிட ஈவதே விருப்பம். இவர் வாழ்க்கை தேனீயைப் போன்றது. தேனீ பலமலர்களில் தேன் சேர்த்துக் கூடுகட்டி வைக்கும். முடிவில் தேன் முழுதும் பிறருக்கே பயனாகும். தமது செல்வமெல்லாம் அறவினைகளுக்கும் சீவனெல்லாம் சிவபக்திக்கும் பயனாக வேண்டும் என்பதே இவர் கொள்கை. இவர் அடிக்கடி முரலும் திருவாசகம் இதுவே.

நானும் என்சிந்தையும்
  நாயகனுக் கெவ்விடத்தோம்?
தானும் தன் தையலும்
  தாழ்சடையோன் ஆண்டிலனேல்
வானுந் திசைகளும்
  மாகடலும் ஆயபிரான்
தேனுந்து சேவடிக்கே
  சென்றூதாய் கோத்தும்பீ

இன்பமயமான சிவனின்றிச் சீவனில்லை, உலகில்லை, உயிர்ப்பில்லை, தொழிலில்லை, செல்வமில்லை; ஆதலால் எல்லாம் சிவமயம்; நல்லதும் பொல்லதும் அவனிச்சை; உலகில் எது வந்தாலும் பொறுத்துக் கொண்டு, சித்தத்தைச் சிவனில் வைத்து அன்பு செய்வதே மனிதன் கடமை. இந்த அன்புணர்வுடனேதான் பொதுநலமும் செய்யவேண்டும். நான் என்னும் ஆணவமின்றி, என்னில் உயிராகவும் உயிர்ப்பாகவும் இருக்கும் இறைவனே எல்லாம் செய்கிறன் என்பது இவர் கொள்கை.

குடும்பத்தில் இவருக்கு மனப்பற்றுதல் இல்லை. குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நல்ல கல்வி கற்று சன்மார்க்கிகளாக இவர் பாடுபட்டார். சிலர் இவரைப் போற்றினர். சிலர் இவரைத் தூற்றி எதிர் செய்தனர். பிறர் எவ்வளவு கடுமையாகப் பேசிப் பகை செய்தாலும், எந்தை அமைதியாகவே அன்புரை சொல்லுவார்; பதற்றமான வார்த்தை இவர் நாவினின்று வராது. இவரிடம் ஆணவச் செருக்கு துளியுங்கிடையாது, தம்மைப் புண்படுத்தியோரைக் கூட இவர் புண்படுத்த மாட்டார். கனவிலும் பிறருக்குத் தீமை நினைக்க மாட்டார். தீயாரும் திருந்தி நல்லாராகச் சிவனை வேண்டுவார். இவர் எப்போதும் உள்ளே மனதிற்கு உபதேசம் செய்து கொண்டிருப்பார்; "மனமே சிவனை மறவாதே, மறவா நினைவே பிறவா நெறி" என்பார். எப்படியாவது இப் பிறப்பின் சிவனருள் பெற்ற பிறகும் பிணிதீர வேண்டுவார். அதற்காக இவர் ஊரில் வரும் துறவிகளையெல்லாம் வணங்கி உபதேசம் கேட்பதுண்டு. போலித் துறவிகளானாலும் சரி! அவர்கள் சொல்லுவதில் உள்ள நன்மையை ஏற்றுத் தீமையை அடக்கமாக நீக்கி விடுவார்.

"நாம் நமது கடமையைச் செய்வோம்; பிறர் தீமை செய்தால், வினைப்பயனுள்ளது; வினை முதல்வன் இருக்கிறன்" என்பார்.

இந்த உணர்வுடனே தான் இரங்கூனிலும் இவர் ஏழை பரதேசிகளுக்கு அன்னதானம் செய்து வந்தார். அவரை ஏமாற்றக் காஷாயக் கள்ளர் வந்தனர். அவர்கள் இவரைக் கொலை செய்யக் கூடத் துணிந்தனர். சிவனருளால் எப்படியோ வந்த விபத்து விலகி, எந்தை பிழைத்தார். இப்போது அவர் உள்ளம் சிவ பக்தியிலேயே ஊன்றி நிற்கிறது.

"மற்றுப் பற்றெனக் கின்றி நின் திருப்
பாதமே மனம் பாவித்தேன்"

இதுதான் இன்று எந்தையின்
நிலைமை — நாளை எப்படியோ!

சிவமயம்

25. பல சிந்தனை

"அறநெறிச் செல்வர்; நல்ல மகராசன், புண்ணியவான், அறமும் பொருளும் செறிந்த துறவி, பொருளால் அருளைத் தேடிய புனிதன், இலட்சத்தில் ஒருவர், முகமறிந்து கொடுக்கும் வள்ளல், சித்தஞ் சிவனடி வைத்த பத்தர்" என்றெலாம் 'இரங்கூன்' சிவநேசத்தைப் புகழ்ந்தது. கூட்டம் கூட்டமாக நண்பர் காண வந்தனர். சிங்கத்தின் சிகிச்சைகளால் சிவநேசம் உடம்பு திடம் பெற்றெழுந்தார்; புண்ணுறிக் காயம் காய்ந்து போனது; பழைய தெம்பு மீண்டது! சிவம் தமது நெல்மண்டிக்கு மீண்டார். இருபது நாட்களுக்கு முன்னே இரண்டு தெருவிலேதான் சிவநேசம் பெயர் தெரியும். இன்று பர்மா முழுதும் அவரை அறியும். தமிழ் மணியின்

கட்டுரை சிவநேசத்தை அப்படி விளம்பரப்படுத்தி விட்டது.

தமிழ் மணிக்கு மகிழ்வுதான். ஆனால், சிவநேசம் "இராமனதன், உனது தமிழ் நன்றுயிருக்கிறது. ஆனல் நீ எழுதிய புகழ்ச்சிக்கு நான் அருகனு? ஒன்றுந் தெரியாத என்னை ஜனங்கள் பெரிதாக நினைக்கும்படி செய்து விட்டாயே? அப்பெருமைக்குத் தகுதியான கல்வி கேள்வி அனுபவ ஞானம் எனக்கில்லையே? என் மனம் முன்னே பொருளை நாடியது, பிறகு அறத்தை நாடியது, இப்போது அருளையே நாடிக் கூவுகிறது. நான் இப்போது வேண்டுவதெல்லாம் தனிமை, அமைதி, தியானம், சிவ பக்தி — இவையே. என்னைப் பிரமாதமாக நினைத்து ஜனக்கூட்டம் வருகிறது. என் மனம் கூட்டத்தை விரும்பவில்லை — அமைதி கெடுகிறதே இதுதான் புகழின் சாபம்" என்றார். "அப்பா தாங்கள் கவலைப்பட வேண்டா. வருகிறவர்களுக்கு நானே பதில் சொல்லுவேன்; நீர் நிம்மதியாகச் சிவத்தியானம் செய்யலாம்" என்றான் மணி.

தமிழ்மணி முதலில் தந்தையின் வேலையை ஒழுங்குபடுத்தினன். கந்தன் ஒட்டுறவாயிருந் துதவினன் நெல்மண்டி வேலை முழுதும் இப்போது தமிழ்மணியே கவனித்தான். கணக்கைக் கந்தன் வைத்துக் கொண்டான். கடப்பை, பல்லாரி, சேலம், கோயமுத்தூர், மதுரை இராமநாதபுரம் முதலிய ஜில்லா வியாபாரிகளைக் கொண்டு அரிசி மூட்டையை மொத்தமாக வாங்கிக் கொள்ளச் செய்தான். வேலை எளிதானது. பெக்கோ நிலத்திலிருந்து நெல்வருவதும் அரிசியாவதும் கப்பலேறுவதுமாயிருந்தது. நிகரலாபத்தில், பாதியை தமிழ்மணி பாங்கில் போட்டான். "இராமு, இவ்வளவு பணம் சேர்த்து என்ன செய்யப்போகிறோம்? தான தருமம்செய்வோமே' என்றார் தந்தை அப்போதுதான் தமிழ்மணி கலைக் கோயில் பேச்சை யெடுத்தான்.

தமிழ்: அப்பா! அம்மா எனக்கொரு பெரிய காரியத்தைக் கொடுத்திருக்கிருள். உனக்கும் பிடித்ததுதான் அது.

சிவ: என்ன காரியம்? விசாலாட்சி இறக்கும் போது ஏதாவது சொன்னளா? அவளுக்குக் கலை மோகம் உண்டு.

தமிழ்: "இராமநாதா நீ கலைக் கோவில் கட்டு" இது தான் அம்மாளின் கடைசி வார்த்தை. அப்பா தமிழ் இசையும் நாகரிகமும் இசையும் இலக்கியமும் பரவ நான் ஒரு பெரிய கலைக் கோயில் எழுப்பப் போகிறேன். என் உள்ளம் அதே நினைப்பா யிருக்கிறது.

சிவ: ஆம் அது குஞ்சரி பாரதியின் கட்டளைதான். எனக்கும் எண்ணந்தான். ஆனல் கலையென்பது வெறும் ஆடல் பாடலன்று; காது கண் களிக்கக் காட்டும் வித்தையன்று உள்ளத்தில் உள்ள அருளுணர்ச்சி தலைவிரித்தாடுவதே கலை; உள்ளத்தில் பொங்கும் ஓங்காரத்தில் ஊறி எழுந்ததே பாட்டு. மனக்கனவின் வடிவமே சிற்பமும் சித்திரமும். கலை கருத்தின் இன்ப விளக்கமே. ஆதலால் முதலில் உள்ளே ஆழச்சென்று அங்கே மெய்ப்பொருளை உணர வேண்டும். அவ்வுணர்ச்சி சிறகடித்து அழகின்ப வானில் கலை வடிவாகப் பறக்க வேண்டும்; ஆதலால் கோவில் கட்டுமுன் உன் உள்ளத்தைச் சிவாலய மாக்கவேண்டும்; உனக்கு நல்ல தமிழறிவும் இசைத்திறனும் உள்ளன. இரண்டாலும் உள்ளத்தானுகிய இறைவனை வழிபடு; அவன் வழி காட்டி உன்னைக் கலைக்

கோயிலுக்கு அழைத்துச் செல்வான்.

தமிழ்: அதுவே என் இன்பம். நன் கலை என்பதே அருட்கலைதான். எனது கலைக் கோயிலின் மூர்த்தி நடராஜப் பெருமானே. ஒரு வசதியான இடத்தில் கலைக் கோயில் எழுப்பி, அதில் ஆடலும் பாடலும், அழகும், அருளும், காவியமும் ஓவியமும் சிற்பச் செல்வமும் சன்மார்க்க ஒழுக்கமும் பொலிய வேண்டும்; ஆயிரம் பேர் அங்கே கலை வாழ்வு வாழவேண்டும்; ஆர்வம் உள்ளது; ஆனால் இன்னும் வழி தெரியவில்லை. எல்லாம் இருளாகவே யுள்ளது.

சிவ: மகனே, உன்னெண்ணம் உயர்ந்தது; திருவருளையே நம்பு; இருள்விலகும். கோயிலுக்கு வழி துலங்கும். நாம் அறியாமலே அவன் அதற்கேற்றதைச் செய்து கொண்டிருப்பான். உன் உள்ளத்தைக் கோயிலாக்கு.

முதலில்—சில நிமிஷங்கள் இருவரும் மௌனமா யிருந்தனர். இச் சமயம் சந்தைக்கு வந்த காடனும் வேலாயியும் சிவனைக் காண வந்தனர். சிவம் "வாருங்கள், சிவமயம்!" என்றுபசரித்து, அவர்களுக்கு இனிய பண்டங்களைத் தந்து நன்றி கூறினர்.

வேலாயி: ஐயாவுக்கு உடம்பு சௌக்கியமானது; மகிழ்ச்சி;

சிவம்: வேலாயி, நீ தாய்போல் இந்த உடலுக் குதவினய்; உன் கருணையும் திருவருளும் உடலை நலமாக்கின. உங்களுக்குப் பிழைப்பு நன்ருக நடக்கிறதா?

வேலாயி: உழைப் பிருக்கு மட்டும் பிழைப்பிற் கென்ன குறை? பாடுபட்டுச் சாப்பிடுகிருேம் பகவான் புண்ணியத்தில்.

சிவ: வேலாயி, நீ செய்த உதவிக்கு நான் நன்றி செய்ய வேண்டும். காடனையும் மக்களையும் கூட்டிக் கொண்டு இங்கே வந்திருக்க முடியுமா?

காட: ஐயா அடிக்கடி வந்து தங்களைக் கண்டு செல்வோம்; நிலைப்பாக இங்கிருப்பதானல், எங்கள் சமுதாயம் சம்மதிக்காது; அவர்களுக்கு நாங்கள் செய்ய வேண்டிய தொண்டு நாலும் உண்டு.

சிவ: காடா, நானும் உன் சமுதாயத்திற்குச் சிறிது தொண்டு செய்வேன். நீங்கள் எல்லாரும் என்ன வேலை செய்கிறீர்கள்?

காட: மரம் வெட்டுவது முதல் தேயிலைத் தோட்டம் வரையில் எல்லா வேலையுந்தான்.

சிவ: எல்லாருக்கும் பிழைப்பு சரியாக நடக்கிறதா? வீடிருக்கிறதா?

காட: ஏதோ நடக்கிறது; ஓலைக் குடிலில் ஒரு வாய்க் கஞ்சி குடித்திருக்கிருேம்.

சிவ: காடா, உங்களுக்குப் பள்ளிக்கூடம் இருக்கிறதா?

காட: இல்லை, ஒன்று வைக்க வேண்டும்; பணமில்லை.

சிவ: காடா, வேலாயி, உங்களுக்காகப் பதினயிரம் ரூபாய் வைத்திருக்கிறேன். அதிலிருந்து ஒருபள்ளிக்கூடமும், வேலைக்கூடமும் கட்டப் போகிறேன்.

காட: நல்ல புண்ணியவான்; உள்ள மட்டும் உங்களை வாழ்த்துவோம் நாலெழுத்துத் தெரிந்தால் நாகரிகமாகப் பிழைப்போம்; பிறரிடம் ஏமாற மாட்டோம்; நல்ல போதாகப் போகும்; வேலைக் கூடம் எதற்கு?

சிவ: காடா, உங்களுக்கு வேலை

யும் உண்டெனக் கூலியும் தர நினைக்கிறேன். எனது நெல் மூட்டைகள் அந்த வழியே தான் இங்கே வரும், அப்படியே அங்கே இறக்கி உங்களைக் கொண்டு தீட்டி அரிசியாக்க லாம்; தவிடு, குறுணை, உமியுடன் நாளைக்குக் கால் ரூபாய் கூலியும் தருகிறேன். தினம் இருபது, முப்பது பேர் பிழைக்க இடமுண்டு.

காட: நல்ல காரியம், செய்யுங்கள், நாங்கள் சக்கி வைத்திருக்கிறோம். நெல்லை அரைத்துத் தள்ளுவோம். மூட்டை கட்டி இங்கே கொண்டு வந்து நம்பிக்கையாகத் தருவோம்.

சிவ: இராமநாதா, என்ன உன் யோசனை?

இராம: இதுதான் அப்பா உண்மையான தருமம், வயிற்றுக்குக் கஞ்சி, மூளைக்குக் கல்வி இரண்டுந்தருவதே சிறந்த பொதுநலம். சும்மா சோறு போடும் சோம்பேறித்தனம் இனியில்லை. உழைப்பைத் தந்து உணவுந்தருவோம். நானும் கந்தனும் சென்று பள்ளிக்கூடத்திற்கும் வேலைக்கூடத்திற்கும் நாளையே தகுந்த இடத்தை அமைப்போம்.

சிவ: சரி காடா, நாளைக் காலை இவர்கள் வருவார்கள். உங்கள் மனதிற்குப் பிடித்த இடத்தைக் குறிப்பிடுங்கள்.

காட: ஐயா, இடமும் தயாராயுள்ளது. ஒரு தோட்ட முதலாளி இரண்டு பெரிய வீடுகளை விற்று விட்டுக் கப்பலேறப் போகிறார்.

சிவ: நல்ல வீடுகளானால் நாளையே வாங்குவோம். சரி உங்களுக்கு வைத்திய சாலை உள்ளதா?

காட: ஐயா நாங்கள் நோயைக் கண்டதில்லை. சூரிய பகவான் கருணையால், நன்றாக நூறாண்டு வாழ்ந்திருக்கிறோம். காயம் கீயம் பட்டால், தலைகால் வலித்தால் அரிய பச்சிலைகளால் குணப்படுத்த முடியும். புட்டி மருந்துகளை நாங்கள் தொடுவதில்லை.

சிவ: மெத்தச்சரி.

அத்துடன் காடனும் வேலாயியும் விடைபெற்றுச் சென்றனர்.

அடுத்த சிந்தனை பெக்கோ வயல்களைப்பற்றி எழுந்தது. பெக்கோ நிலங்களைச் சரியான படி வளமை செய்து, விவசாயப்பண்ணை வைத்து, நெல்முதல் புல்வரையில் புதிய முறையில் விளைவேற்ற இருவரும் முடிவு செய்தனர். இரங்கூன் நெல்மண்டியை மகன் நடத்துவான், சிவநேசம் பெக்கோவிலேயே அழகான இயற்கைக்காட்சியில் ஒரு குடிலெழுப்பிக் கொண்டிருக்க முடிவு செய்தார்.

இச்சமயம் சிங்கமும் பராங்குசமும் வந்தனர். இருவரும் சிவத்தை வஞ்சித்த போலித் துறவிகளைக் கண்டு பிடிப்பதிலேயே கண்ணுயிருந்தனர். சிவத்திடமும் கந்தனிடமும், காடனிடமும் இதற்குக் கிடைத்த அத்தாட்சிகளையெல்லாம் வைத்து இங்குமங்கும் அலசிப் பார்த்தனர்; பலிக்கவில்லை.

பரா: சிவநேசம், நேற்று அந்தப் புதரில் பிடித்து, அந்தப் பெரிய வீடு, காடுமலை எல்லாம் தேடிப் பார்த்தோம் துப்பறியமுடியவில்லை அவர்கள் வேடங் கட்டுவதாகச் சொன்னவீடு காலி; சம்பவம் நடந்த வீடும் பாழ்—டாக்டர் சிங்கத்திற்கு முத்தையா மேல் சந்தேகம். முத்தையாவை இந்த லோகத்திலேயே காணோம்.

டாக்டர்: பராங்குசம் கடைசியாக ஒரு இடந்தான் பாக்கி — உல்லாச மாளிகை.

பாரா : அதெப்படி? அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லையே, ஏதாவது குறிப்புக் கிடைத்தால் பார்க்கலாம். சம்பந்தமே இல்லாமல் உல்லாச மாளிகைப் பக்கம் போனால், பிஜிலியிடம் அவமானப்பட நேரிடும். அவள் கைகாரி—நாம் வருமுன்னே நம்மை மடக்க ஆள் வைத்திருப்பாள்—ஆகையால் நாம் சுடலையாடிச் சாமியைத்தான் இனித் தேடவேண்டும். இந்த நாடகத் தலைவர் அவரே.

சிவ : நண்பரே, உங்கள் முயற்சி வெல்க; ஆனால் சட்டிச்சாமி ஒன்று சொன்னார். அதையே திருப்பிச் சொல்லுகிறேன். கருமம் விடாது; உள்ளது தானே வெளிப்படும். கொஞ்ச நாள் இச்சம்பவத்தையே மறந்து விடுங்கள். பிறகு தானே இயல்பாக எல்லாம் வெளியாகும். எனக்கு எவர்மேலும் வருத்தமில்லை. அவர்கள் திருந்தி ஆளாக வேண்டுமென்றே கருதுகிறேன். முத்துவை ஒரு நாள் சந்திப்பேன். அவன் மூலம் பல விஷயங்களை அறியலாம். ஆள் முன்கோபியானாலும் அகம் வெள்ளை. பாருங்கள் ஒரு நாள் எல்லாம் வெளியாகும்.

பாரா : ஆகட்டும்; இடையே நாமும் ஆவன செய்வோம். அடுத்து முயல்வோம்......

இன்னும் சில நிமிஷங்கள் பேசிப் போலீஸ் அதிகாரியும் சிங்கமும் வீடு சென்றனர்.

"போதும் உலக விவகாரம். மகனே! ஒரு திருவாசகம் பாடு" என்றார் சிவநேசம். ராமநாதன் இனிமையாகக் காம்போதி ராகத்தில் திருவாசகம் பாடினான்.

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடமை யெல்லாம்
குன்றே யனையாய்! என்னையாட்
கொண்டபோதே கொண்டிலையோ?
இன்றோர் இடையூறு எனக்குண்டோ?
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானே இதற்கு நாயகமோ!

ஓம் சிவமயம்!

கண்ணீர்! மௌனம்!

26. பக்தி பரவசம்

நாட்கள் ஓடிச் சென்றன— கருதிய வினைகள் கைகூடின. சிவநேசம் பெக்கோ நிலங்களை வளஞ் செய்தார்; அங்கே அழகான வீடு கட்டி—அதில் பூஜை அறை அமைத்து, நடராஜா உருவை நாட்டி வழிபட்டார்— வயல்களை ஒரு சுற்றுச் சுற்றி வந்து கணக்குகளை மேற்பார்த்ததும் சிவம் உலக விவகாரங்களுக்கு முழுக்குப் போட்டு ஆசாரமாக நடனப் பெருமான் முன் அமர்ந்து, திருவாசகம் பாராயணம் செய்வதும், திருமுறை நூல்களைப் படிப்பதும் கண்ணீர் வடிப்பதுமாயிருந்தார். சில நாட்கள் அப்படியே உள்ளே லயித்து விடுவார்.

வேண்டும் நின்கழற்கண் அன்பு
பொய்மை தீர்த்து மெய்ம்மையே
ஆண்டு கொண்டு நாயினேனை
ஆளவென் றருளுநீ

என்று பெரு மூச்செறிவார்.

கண்ணப்பன் ஒப்பதோர்
அன்பின்மை கண்டபின்
என்னப்பன், என்னொப்பிலன்
என்னையாட் கொண்டருளி
வண்ணப் பணிந்தென்னை
வாவென்ற வான்கருணை
சுண்ணப் பொன்னீற்றற்கே
சென்றூதாய் கோத்தும்பீ—

என்று கண்ணீர் வடிப்பார்.

பேரருள் இன்பம் அளித்த
 பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே
 தென்பாண்டி நாடனைக் கூவாய்

என்று ஆர்வமுடன் கூவுவார்.

சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
 திருப்பெருந்துறையுறை சிவனே
ஆனந்தமாக்கு மென்சோதி !

என்று நடராஜாவின் முகத்தையும் அபயக் கரத்தையும் நோக்குவார், "நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க" என்று குஞ்சித பாதத்தை வணங்குவார் — அப்படியே தியானத்தில் ஆழ்ந்து விடுவார்—

மாலை ஐந்து மணிக்கெல்லாம் கையில் பணம் எடுத்துக் கொண்டு புறப்படுவார்— தன் பண்ணைத் தொழிலாளரை வீடு வீடாகச் சென்று பார்ப்பார். அப்பனே வீட்டில் எல்லாரும் நல்லாயிருக்கிறார்களா? நன்றாகச் சாப்பிட்டீர்களா, பஞ்சாட்சரி செய்தீர்களா?

அப்பனே சிவனை அன்பு செய்யுங்கள்— சிவ சிவ என்று தொழில் புரியுங்கள்" என்பார். பணமுடையானால் உடனே தீர்ப்பார்; நோயாளிகளுக்கு வைத்தியரைக் கொண்டு சிகிச்சை செய்வார். குறைகளையெல்லாம் கேட்டுத் தீர்ப்பார். எல்லாரும் சிவநாமம் சொல்லி அவரை மகிழ்விப்பார்கள்—

வாரம் ஒரு நாள் பண்ணையாட்களையெல்லாம் கூட்டித் தேவார பஜனை கேட்கச் செய்வார்.

நாளடைவில் சிவத்திற்குப் பண்ணை நிர்வாகங் கூடப் பாரமானது. அதற்கும் தக்க ஆளை வைத்துத் தாம் சிவபக்தியிலேயே ஆழ்ந்து சிவநேசர் திருக்கூட்டத்தில் வசிக்க நினைத்தார். மாணிக்க வாசகர் போலத் தன்னையும் ஆட்கொள்ளச் சிவகுரு வருவான் என்று கருதினார். கனவில் அடிக்கடி சிவதரிசனம் கண்டார்—

அன்னையே அப்பா அன்புடன் என்னை
 அழைத்து நீ அருள் புரிவாயே

என்று புலம்பினார்.

அழைப்பு வரும் மனமே—என்றார்.

இவ்வாறு சிவநேசர் சிவக் காதலில் வாழ்ந்தார்—

காடவருக்குத் தமிழ்மணி அழகான பள்ளிக்கூடமும் வேலைக்கூடமும் அமைத்துத் திறமையாக நடத்தினான்.

காடவர் குழந்தைகள் அனைவரும் இப்போது எண் எழுத்துக் கற்றனர். எல்லாருக்கும் தமிழ் வரும். வேலைச் சாலையில் தினம் 300 காடவர், அரிசி தீட்டினர். அவர்களுக்கு உயர்ந்த கருத்தமைந்த பாடல்களைப் பாடம்பண்ணி வைத்தான். மணி எல்லாரும் சிவ நாமம் பாடிக் கொண்டே நெல் குத்துதல் இன்பமான காட்சியாயிருந்தது.

காக்கும் சிவ நாமம்—நம்
 கவலைகள் அத்தனையும்
போக்கும் சிவ நாமம்—எப்
போதும் ஜபிப்ப மம்மா !
 கூற்றை யுதைத்த சிவன்—அன்பு
 கொண்டாரின் தொண்டனவன்
போற்றி பரமசிவன்—அவன்
 புண்ணிய நாமம் புகன்றிடுவோம்.

தட்தட் என்று நெல் தீட்டும் தாளத்துடன் பாட்டும் சேர்ந்துவிட்டால் நேரம் போவதே தெரியாது—

பள்ளிப் பிள்ளைகளுக் கெல்லாம் ஒரே மாதிரி நல்ல ஆடைகளும், அவரவர் தரத்திற் கேற்ற நூல்களும், ஒரு வேளை உணவும் தந்தான் தமிழ்மணி.

(தொடரும்)

மாங்கொத்து

[ரா. வெங்கடாசலம்]

"என்ன, நான் சொல்றேன், பயமவ, ஒத்தக் காலிலேயே நிக்கிறேயா?" எனக் கிழவன் ஆத்திரத்துடன் கேட்டான்.

அவள் ஒன்றும் பேசாமல் இரு கரங்களாலும் கண்ணைப் பொத்திக் கொண்டு விக்கி விக்கி அழுதாள்.

அவனைச் சொல்ல என்ன இருக்கிறது? ஊரார், உறவினர் எல்லோரும் 'இன்னம் உன் பேத்தியை கலியாணம் செஞ்சு கொடுக்காமல், வைத்திருக்கிறுயே! வயது போதலியா?" என அவனை மொய்த்தால் எத்தனை நாள் தான் அவன் சகித்திருக்க முடியும்?

தாய் தகப்பனில்லா அந்தப் பிள்ளையை குழந்தையிலிருந்து வளர்த்ததற்கு காலாகாலத்தில் கலியாணம் செய்து பார்க்கா விட்டால் அவனுக்கு நிம்மதிதானிருக்குமா? ஊராரின் பேச்சு ஒரு பக்கமிருக்கட்டும். மலர் நறுமணம் நிறைந்திருந்த அந்தப் பருவத்தைத் தவற விட்டால் காய்ந்து சருகாக உதிர்ந்தபின் என்ன இருக்கிறது? வயது நிறைந்து யௌவனத்தின் பொலிவு இப்படியே விருதாவாகப் போவதைப் பார்த்து அந்தக் கிழவன் எப்படிச் சகித்திருக்க முடியும்?

பாவம்! பேசியது என்னவோ பேசிவிட்டு இப்போது அவனுடைய படுக்கையருகில் உட்கார்ந்து கண்ணீர் வடிக்கிறுள்.

"என் பொம்மு! தாத்தா சொல்றேன்னுகூட கொஞ்சமாவது கேக்காமல் கோபத்தைக் கிழப்பி விட்டாயே!" என நடுக்க மெடுத்த அவனுடைய கைகளால் அவளுடைய தலையை நீவினன். பேத்தியும் தாத்தாவின் பரிதாப நிலையைப் பார்த்துத் தேம்பினுள்.

பொம்மக்காள் வெள்ளரிப் பிஞ்சுபோல இருப்பாள். அவிழ்த்து விட்டால் பாதத்தையும் எட்டிப் பிடிக்கும் அவளுடைய இருண்ட கேசமும், யௌவனத்தின் ரேகை படர்ந்திருக்கும் அவளுடைய முகமும் பார்த்தவர் யாரையும் மயக்கி விடும். நல்ல அழகி. அவளுடைய துடுக்குப் பேச்சும் குறும்புப் பார்வையும் சாமான்ய மானதல்ல. அவளுடைய மினுக்கு நடையில் யார்தான் விழாதிருக்க முடியும்? இல்லாவிட்டால் அந்த சுப்பன் அவளைச் சுற்றிக் கொண்டே ஒரே உறுதியாய் அவளைத்தான் மணக்க வேண்டுமென வேறு எத்தனையோ பெண்கள் வலிய வந்ததை எல்லாம் நிராகரிப்பானு?

கழுத்தில் பவளமாலைகளும் பாசி சரங்களும் நிறைந்து பின்னல் தொங்கும் தலைமயிர்க் கொத்துடன் அவளைப்பார்க்க எடுப்பாயிருக்கும். ஒரு வேளைச் சாப்பாடாவது இல்லாது இருந்து விடுவாள். ஆனல் அவள் வாய்மட்டும் அசைப் போடாமலிருக்க முடியாது. ஆலங்குளத்திலிருந்து மதுரை மூன்று மைல் தூரம்தான். அந்தக் கன்னி நாள் தவருமல் மதுரைக்கு வருவாள். வந்து ஊர் திரும்ப ஒவ்வொரு சமயம் சூரியனும் அஸ்தமித்து விடும்.

அதுவரை அந்த நாயக்கர் பேத்தி கக்கத்தில் பை ஒன்று தொங்க விட்டு ஒரு நீண்ட கோலேயும் அதற்கிடையில் வைத்துக்கொண்டு தெருவுக்குத் தெரு, வீட்டுக்கு வீடு நின்று பவள உதடுகளே அசைத்து 'ராமரீ — கிருஷ்ணரீ' பாடிவருவாள். அவளுடைய 'கணீர்' தொண்டைக்கும் பாடும் மிடுக்கிற்கும், கேட்டால் மெய்மறந்துவிட வேண்டியதுதான். அதுவும் கோபியர் 'ஜலக்கிரீடையை' கேட்க வேண்டுமே!

அடுக்கு மஞ்சளோடு கன்னிகள்
ஆயிரம் வகையுடனே,
பச்சை மஞ்சளோடே பெண்கள்
பனிரெண்டாயிரம்,
இடையில் குடத்துடனே இவர்கள்
அழகிய நடை நடந்து
சின்னச்சின்ன நடை நடந்தே
இவர்கள் சிரித்து மகிழ்ந்து பேசி

என, இப்படி விட்டுப்போன எதுகை மாத்திரைகளே எல்லாம் அவளுடைய குரலால் சரிபடுத்திக்கொண்டு பாடிவர ஆரம்பித்து விட்டால் யார்தான் ரஸிக்காமலிருக்கமுடியும்? சிறுவர் பெரியவர் எனும் வித்தியாசம் உண்டா? அந்த நிமிஷத்திலேயே அவர்களுடைய உள்ளத்தை கொள்ளே கொண்டு விடுவது மட்டுமல்ல அந்த இடத்திலேயே அவளுடைய தோள் பையும் நிறைந்து விடும்.

அவளுடன் சிறு வயதிலிருந்தே சக்கப்பன் ஒருவன்தான் நெருங்கிப் பழகினவன். இப்போது அவன் சிறைவாசம் அனுபவித்து வருகிறுன். அடுத்த ஊர் திருவிழாவிற்கு போயிருந்த இடத்தில் ஏதோ போலீஸார் சாட்டிய குற்றத்திற்காக ஐந்து வருஷ தண்டனே ஏற்கநேரிட்டு விட்டது. என்ருலும் அவர்கள் இருந்த மாதிரிக்கு அவளால் அவனே மறக்க முடியவில்லே. மிகவும் தத்தளித்தாள். இல்லாவிட்டால் அந்தக் கிழவனுடைய வார்த்தையை அப்படி எடுத்தெறிவாளா?

சக்கப்பனே அவள் மறக்க முடியாதுதான். அவனுடைய கூர்மையான மூக்கும் துடிக்கும் கண்களும் வரிசைப் பல்லும் பார்க்கப் பார்க்க அழகாயிருக்கும். நல்ல உடல் கட்டுள்ளவாலிபன். செக்கச் செவேலென நிறம். அவன் இடையில் வேஷ்டியைத் தார்பாய்ச்சி வைத்துக் கட்டியிருப்பான். அத்துடன் உள்ளே ஒரு சட்டை அதற்குமேல் ஒரு கருப்பு கோட்டு தலேமேலே சிவப்பு உருமால் அணிந்து அப்போதுதான் அரும்பி வந்த மீசையைப் பிறையைப் போல் வளேத்துக் கூர்மையாய் திருகிவிட்டு கம்பீரமாய் காணப்படுவான். குடுகுடுப்பை அடிப்பதில் மகா சமர்த்தன். இடது கக்கத்தில் ஒரு பை தொங்க, ஒரு நீண்ட கோலேயும் வைத்துக் கொண்டு வலது கையில் குடுகுடுப்பையை அடித்து விடிந்தும் விடியாமலுமிருக்கும் போது தெருவினுள் நுழைந்து விட்டால் வீடு தவருமல் எல்லோரும் வெளியேவந்து அவனுடைய வாயையே அசையாமல் பார்த்துக்கொண்டிருப்பார்கள். ஒன்பது கம்பளம் ஊர் தேவதைகளேயும் ஒன்று விடாமல் கூப்பிட்டு குறி சொல்ல ஆரம்பிப்பான். கொஞ்ச நேரத்தில் துட்டும், துணியும், அரிசியும் பருப்பும் அவனுடைய தோளும் பையும் கனத்து விடும். சுப்பன் அதைப் பார்த்துப் பார்த்துப் பொருமைப் படுவான்.

அப்போதெல்லாம் சக்கப்பனும் பொம்மக்காளும் இணே பிரியாமல் 'விளேயாடுவதும், வேடிக்கை பார்ப்பதும் எல்லாம் ஒன்று சேர்ந்தே திரிந்தார்கள். அவனுடைய வலது கை புஜத்திலும், அவளு

டைய இடது கை புஜத்திலும் ஒரே மாதிரியான கிளிப்பச்சைக் குத்தியிருந்ததிலிருந்து எவ்வளவு அன்யோன்யமாக இருந்தார்களென அறிந்துகொள்ளலாம். அவர்கள் நெருங்கி உட்கார்ந்தபோது அந்த கிளிகள் இரண்டும் பேசிக்கொள்வது போல் அமைந்திருந்ததைப் பார்த்துச் சிரித்து மகிழ்வார்கள்.

ஒரு நாள் அவனுக்கு பச்சைப் பட்டு ரவுக்கை ஒன்று கிடைத்தது. அவனுடைய நாவிலிருந்து தவறாமல் குறிவருவதற்கு உதவி செய்யும் அவனுடைய தேவதைக்கு அதை அணிவித்துப் பார்த்து மகிழ விரும்பினான். அதிக நேரம் மதுரையில் தங்காமல் ஊருக்குத் திரும்பினான். வரும்போதே அதைப் பையிலிருந்து எடுப்பதும் விரித்துப் பார்ப்பதுமாக ஏதோ பொக்கிஷம் கிடைத்ததுபோல் ஆனந்தப் பட்டான்.

ஆலங்குளம் கிராமம் முழுதும் சுற்றினான். கடைசியாகப் பனைக் கும்பல் கிணற்றில் அந்தத் தேவதை நீந்திக் கொண்டிருந்த போது காண முடிந்தது.

"ஏ, பொம்மு! என்ன, என்னிக்கும் இல்லாதே இன்னைக்கு மட்டும், உன்னை எங்கெல்லாம் தேடுறது!" என, அவன் புன்முறுவல் பூக்கச் சொன்னான். அலைந்து வந்த களைப்பையும் மீறி வந்த பூரிப்புடன் அவன் முகம் மலர்ந்து காணப்பட்டது.

"என்னசக்கு! இந்தாவந்துட்டேன்." என நடுத்தண்ணீரிலிருந்து கைகளை வீசி நீந்திப் படிக்கட்டை அவள் எட்டிப் பிடித்தாள்.

மாடுகளை அவரவர் வீடுகளுக்கு ஓட்டிவிட்டு மாடு மேய்த்த சிறுவர்கள் வைக்கோல் போருக்கு வைக்கோல் பிடுங்கிவரச் சென்றார்கள். பகல் முழுதும் தோட்டம் துறவுகளில் இயற்கையை வளம்படுத்தப் பாடுபட்டுத் திரும்பிய பெண்கள் வீட்டில்அடுப்பைப் பற்றவைத்தார்கள். கூறை மேலிருந்து புகை, மேகத்தை எட்டிப் பிடிக்க கிளம்பிக் கொண்டிருந்தது. மந்தைச்சாவடியில் கிராமக் கூட்டம் போட்டு மாரியம்மன் எப்போது சாட்டுவதெனப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஊர் ஓரத்தில் குடுகுடுப்பை நாயகர்மார்கள் ஆணும் பெண்ணும் அப்போது தான் மதுரைக்குப் போய் வயிற்றுக்கு இரைதேடி வந்திருந்தார்கள்.

பச்சைப்பசேரென நஞ்சை நாற்றுகள் அந்தக் கிராமத்தையே சூழ்ந்து கடல்போல் பரவி இருந்தது. காற்று வீசியதும் அதனுடன் அந்த நாற்றுகள் சரசமாடி அசைந்து நிமிர்ந்து சாய்ந்து கொண்டிருந்ததும் பார்க்க அழகாயிருந்தது. அந்த நேரம் வரை, தன் கொடிய வெயிலால் உலகத்தையே பதம்பார்த்துக் கொண்டிருந்த சூரியன், ஆக்ரோஷம் தீர்ந்து அணைத்துக் கொடுக்கும் அன்னை போல் உலகத்தை இன்பத்தில் மூழ்கடித்துக் கொண்டிருந்தது. பனைக்கும்பல்களின் பேரிரைச்சலிலும் அந்த வரவரக் காய்ச்சி ஒற்றை மரத்தின் நெற்றுகள் உரசி கிலுகிலுப்பை சப்தம் வந்துகொண்டிருந்தது தனியாகக் கேட்டது.

பொம்மக்காள் கிணற்று மேட்டுக்கு வந்து அவளுடைய வளர்ந்த கூந்தலை இறுக்கிச் சுருட்டி தண்ணீரைப் பிழிந்து விட்டாள், ஈரம் படிந்திருந்த அவளுடைய 'உறுவை உடலி'ல் ஏற்பட்ட மினுமினுப்புக்கு நெற்றியில்நேர்கோட்டுப் பச்சையும் கன்னங்களில், புள்ளிப்பச்சையும், கைகளிலும் விதவிதமாய் தீட்டியிருந்த அத்தனை பச்சைகளும் அவளுடைய

இயற்கைப் பொலிவை இன்னும் எடுத்துக் காட்டின.

"இந்தா பொம்மி, உம் இதைப் போட்டுக்க! என்னமாதிரி ரவுக்கை, பாத்தாயா?" என அவன் மிகவும் ஆர்வத்துடன் நீட்டினன்.

பொம்மக்காள் அந்த ரவுக்கையைத் தன் மார்போடு வைத்து அழகு பார்த்தாள். அவளுடைய வாலிப வதனத்தில் இன்ப ஒளி பிரகாசித்தது.

"உஸ், சீக்கிரமாய்த்தான் போட்டுப்பாரேன்!" என அதை அவன் 'வெடுக்'கெனப் பறித்தான். அவள் இன்னும் போட்டுக்கொள்ளாமல் தாமதப்படுத்தியதை அவனல் பொறுக்க முடியவில்லே. அவனுக்கல்லவா தெரியும் அந்த ஆத்திரம். பொம்மக்காளுடைய முகம் 'குப்'பென மாறி நாணத்தால் கன்றியது.

அவளும் சக்கப்பனும் கால்களே கிணற்றினுள் தொங்க விட்டுக்கொண்டு கிணற்று மேடைமேல் உட்கார்ந்திருந்தனர். அவளுடைய ஈரமுடியை உரசிப்போன மெல்லிய காற்று அவன் மேல் படவும் குறு குறுவென இருந்தது. "போடுனு!" என அவன் சொல்லிக்கொண்டே ரவுக்கையைச் சரியாக விரித்தான். பொம்மக்காள் தன் மயக்கும் இயற்கைப் பார்வையால் அவனுடைய கவர்ச்சியான முகத்தைப்பார்த்துகொஞ்ச நேரம் மௌனமாயிருந்தாள். அவளுடைய வலதுகை புற்களேக் கிள்ளிக் கிள்ளி கிணற்றுள் போட்டுக்கொண்டிருந்தது.

சக்கப்பன் ரவுக்கையின் கையை காட்டவும் அவள் வெட்கத்துடன் கையை நுழைத்தாள். அவள் அணிந்து கொண்டவுடன் பொலிந்த அந்த பொலிவைப் பார்த்ததும் அவனுக்கு ஆர்வம் சொல்லமுடியாது. "அடே, என்ன அழகாயிருக்கு!" என வியந்து கொஞ்ச நேரம் அவளே இன்னும் கூர்ந்து பார்த்தான். ஆனந்தம் பொறுக்க முடியவில்லே. அவளுடைய இரு கைகளேயும் பிடித்து அப்படியே ஒரு உலுப்பு உலுப்பி விட்டான்.

கேணிக்கரையில் அந்த ரவுக்கையை அணிந்து நல்ல சோபையுடன் காணப்பட்டாள். அவளுடைய உதடுகள் புன்னகை காட்டின. கண்கள் நாணத்தால் மருண்டு விழித்தன.

"உம், இப்ப புதுப்பொண்ணு மாதிரி இருக்கே பொம்மி!" என சக்கப்பன் மறுபடியும் சொல்லி உள்ளம் பூரித்தான். பொம்மக்காளுடைய வாய் அசையவில்லே. கண்களே அவனுக்குப் பதில் சொல்லித் தரையைப் பார்த்தன. கால்களே இன்னும் வேகமாய் ஆட்டினுள்.

அவர்கள் அந்தவிதமாக களங்கமற்ற இன்பம் அனுபவித்ததை மனிதர் யாரும் பார்க்கவில்லே என்றுலும், பனே ஓலேயில் நின்று கத்திக்கொண்டிருந்த மைனவும் கொஞ்சம் தள்ளி ஒரு மேடைமேல் கையில் அரிவாளே ஓங்கிய படி நின்ற கருப்பணசாமியின் கருஞ்சிலேயும்மாவது பார்க்கக் கொடுத்து வைத்ததே!

இப்படி இன்ப அலேகளில் அவர்கள் குதித்து விளேயாடியது மட்டுமல்ல. ரொம்ப பயங்கரமான ஆபத்துகளிலும் சிக்கி எப்படியோ தப்பியிருக்கிருர்கள் என்பதை அவர்கள் என்றென்றும் மறக்க முடியாதவை. இந்தமாதிரி நினேவுத் திரைகளெல்லாம் பொம்மக்காளே வதைத்தபோது அவளால் அவனே எப்படி மறக்க முடியும்? கடைசியாக அவன் பிரிந்தபோது அவளேச் சந்தித்து சொன்ன வார்த்தைகள் நேற்றுத்தான் சொன்னவைபோல் நன்ருக ஞாபகத்திலி

ருந்தன. அவள் என்ன செய்வாள்.

சுப்பன் எத்தனையோ தடவைகளில், தானே நேரில் சந்தித்துக் கெஞ்சியிருக்கிறான். சக்கப்பனைத் திருட்டுப் பயலென அவனை இனி நினையாதே எனச் சொல்லுவான். அப்போதெல்லாம் அவனுடைய மனம் ரொம்ப சங்கடப்படும். அவள் அவனையே விரும்பினாள். அவனைப்பற்றியே கனவு கண்டாள். எத்தனை நாள், மாதமானாலும் சரி. அவன் வரட்டும் வரட்டுமென எதிர்பார்த்திருந்தாள்.

இப்படி இருக்க அவள் வேறு ஒருவனை எப்படி ஒப்ப முடியும்? 'தாத்தா இன்னம் ஒரு மாசம் செல்லட்டும். அடுத்தமாசம் பார்க்கலாம்'' என அவள் முதன் முதல் அந்தக் கிழவனுக்குப் பதில் சொல்லி வந்தாள். கிழவனும் அவளுடைய நோக்கத்தை அனுசரித்து 'சரி, சரி' என்று பேசாமலிருந்தான். ஆனால் எத்தனை தடவைதான் அவளும் அப்படிச் சொல்லி வருவது? உம், இனி காலம் கடத்தலாகாதென கடைசியாகச் சுப்பனைப் பற்றிச் சொல்லி வற்புறுத்தலானார். இதனால் அவள் கலியாணமே வேண்டாமெனத் தலையை ஒரேயடியாக உலுப்ப ஆரம்பித்தாள்.

என்றாலும் விதி ஒன்றிருக்கிறதே! எல்லாம் தலை எழுத்துப்படி நடக்குமோ வெனப் பெருமூச்சு விட்டாள். அந்தக் கிழவனின் சுருங்கிய கண்களிலிருந்து கண்ணீர் துளிர்த்தபோது அவளால் தாங்கமுடியவில்லை. இனியும் அந்தத் தள்ளாத வயதில் அவர் அவஸ்தைப் படாமலிருக்க அவள் கடைசியாக அந்த விதியின்மேல் பாரத்தைப்போட்டு விட்டுச் 'சரி. உங்க பிரியம்' என்றாள்.

கிழவனுக்கு ஆனந்தம், தான் பிறந்த பயன் அப்போதுதான் கிட்டியது போல் குதித்து 'என் கண்ணு, நீ நல்லா இருப்பே!'' என மெய்மறந்து சொன்னார். பேத்தியினுடைய வழுவழுத்த கன்னத்தோடு அவருடைய சொர சொரத்த கன்னத்தை வைத்து அழுத்தி மெய்மறந்தார். ஆனந்தக்கண்ணீர் துளிர்த்தது.

என்றாலும் அவளுடைய மிருதுவான இதயம் என்னபாடு பட்டதென்பதை அவர் எப்படி அறிவார்? அவளுடைய மனம் வெதும்பி விட்டது. 'சக்கு, நான் என் செய்வேன்!'' என அவனே எதிரில் நிற்பதாகப் பாவித்து அவள் பேசிக் கொண்டபோது அவளால் நேராக நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. அப்படியே குனிந்து முழங்காலின் மேல் தண்ணீர் ததும்பிய கண்களை உரசித் தேம்பினாள்.

அவள் எதிர்பார்த்தபடி சக்கப்பன் விடுதலையாகி விட்டான். ஆனால் ஆலங்குளம் வந்தபோது அவர்களைக் காணவில்லை. ஊர் ஊராய்ப் போய்க் கொண்டிருப்பவர்கள்தானே! அப்போது எந்த ஊரில் திரிகிறார்களென்பது அந்தக் கிராமத்தாருக்கு என்ன தெரியும்! என்றாலும் விடாமல் அவளைத் தேடித் திரிந்தான்.

கடைசியாக அவள் இருந்த ஊரைத் தெரிந்து கொண்டான். அப்போது ஓட்டமும் நடையுமாக அவன் துரிதமாய் வந்தது அவனுடைய ஆசையை பிரதிபலித்தது. ஆனால் என்ன வேகமாக வந்தும் என்ன செய்வது? கொஞ்சம் முந்தி வந்திருந்தாலாவது அவள் அவனுக்குக் கிடைத்திருப்பாள். ஊருக்கப்பால் காட்டுக்குள் தனியாக ஆவரங் குலையால் குடில் கட்டி அதில் அவள் விரதம் இருந்த போதாவது அவன் வந்திருக்கப்படாதா? எத்தனை நிச்சயதார்த்தம் செய்திருந்தாலும் உதறி இருப்

பாளே! அந்தச்சமயம் குலதேவதையை நினைத்து வேண்டிக் கொண்டிருக்கவும் அவளால் முடியாமல் அவனையே நினைத்து நினைத்து அழுதாள். ஆனால் இப்போது, இந்த பின் இரவு நேரத்தில் தீப்பந்தங்கள் எரிய அவளுடைய கழுத்தில் தாலி விழுந்த பின் அவன் வந்து என்ன பலன்?

பாவம், அவனுடைய உள்ளம் தான் உடைந்து விட்டதுவோ! அந்த ஓடைப் படிக்கட்டில் உட்கார்ந்து சலசலத்து ஓடிய தண்ணீரையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய கை விரலில் பீங்கான் வளையல்களை கோர்த்து அதை ஆட்டிக் கொண்டிருந்தான். அவனுடைய மனதில் எத்தனை எண்ணங்கள் படல் போல எழுந்து வந்தன! அந்தப் பாம்பு அப்பொழுதே தன்னைக் கொத்தியிருக்கப் படாதா? சிறையில் காய்ச்சலில் படுத்த படுக்கையிலேயேதான் போயிருக்கலாகாதா? அந்த ஆபத்திலிருந்தெல்லாம் தப்பிவிட வேண்டுமென விரும்பியது அவளுக்காகத்தானே! ஆனால் அவள் இப்போது எங்கே? 'பொம்மி!' என அவன் நாவு குழறச் சொல்லியபோது தேம்பல் அவனுடைய தொண்டையை அடைத்தது.

குடத்துடன் போகும் அந்தப் பெண் பொம்மக்காள்தான் என அறிய எவ்வளவோ ஆனந்தமாயிருந்தது. ஆனால் முன்போல் தான் அவளிடம் அணுகலாமா? அவளிடம் ஏதேனும் பேச்சு? ஒன்றுமில்லாவிட்டாலாவது சிறையிலிருந்து வந்தவுடன் அவளுக்காக வாங்கிய அந்த வளையல்களையேனும் அவளிடம் கொடுத்தால் கொஞ்சம் நிம்மதியடையலாம். ஆனால் அவள் வாங்குவாளா? பார்க்கலாம்.

"பொம்மி, ஏ பொம்மி!" என அவன் தளதளத்த குரலில் கூப்பிட்டபோது அவள் அப்பால் நகர முடியவில்லை. அப்படியே நின்று விட்டாள். அவன் ஆவலாய் ஓடி வந்ததைக் காண அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் சொட்டியது.

"பொம்மி, என்னை மறந்துட்டேயா? இருந்தாலும் இந்த வளையல்களாவது உன் கைகளில் என்னை ஞாபகப்படுத்தட்டும்" என்றான். அவளுக்கு என்ன சொல்வதெனத் தெரியவில்லை. அவளால் அதை மறுக்கவும் முடியவில்லை. கையை நீட்டினாள்.

உம், முன்போலவா அவள் கட்டற்று இருக்கிறாள்! இப்போது அவள் நினைத்தபடி செய்யமுடியுமா? 'அடி பொம்மி என்ன அவனிடம் பேச்சு' என்று சுப்பன் சத்தம் கேட்ட உடனேயே திடுக்குற்று விட்டாள். நீட்டிய கைகள் பின்னடைந்து விட்டன.

அவள், இனி அந்த இடத்தில் தாமதிக்க முடியுமா? அந்தக் குடத்துடன் அவள் திரும்பிப்போன காக்ஷியைக்காண சக்கப்பன் அப்படியே ஸ்தம்பித்து விட்டான். கண்களிலிருந்து நீர் குமுறியது. அவனுடைய உள்ளம் எப்படி எல்லாம் வேதனைப் பட்டது! "இனி அந்த வளையல்களைக்கூட அவளுக்கு நான் கொடுக்கக் கூடாதா?" என்று நினைத்தபோது அவன் விம்மி அந்த வளையல்களை உள்ளங்கையில் வைத்துப் பார்த்தான். இனி அவை இருந்து என்ன பயன்? அவனுடைய முகத்தில் ரத்தம் கட்டியதுபோல் சிவப்பேறி காணப்பட்டது. கையை ஓங்கி அந்த வளையல்களை தரைமேல் அறைந்தான். அவைகள் எத்தனையோ ஆயிரம் சுக்கலாய் நொறுங்கி விட்டன.

மீண்டும் அந்தப் படிக்கட்டில் உட்கார்ந்து ஓடும் தண்ணீரில் தன் கண்ணீரையும் வடித்தான். ஒரு காலத்தில் அவனுடன் சிரித்துக் குதியாட்டம் போட்ட சூழ் நிலை எல்லாம் இப்போது சோகமாய் ஒடுங்கியிருந்தனவாய் அவனுக்கு காணப்பட்டது. அந்த வெளிச்சி மீன்கள்கூட 'பளிச்' சென வந்து மறைந்தபோது பொம்மக் காளுடைய முகத்தில் முன் கண்ட அந்தப் புன்னகையை ஞாபகப் படுத்தி விடுகின்றனவே! நீரின் மேல் தன்னுடைய சாயைக்குப் பதில் அவளுடைய வதனம், எப் படி அவனுடைய கண்களை கசக் கிப் பார்த்தாலும் மிதந்து வந்து அவனுடைய உள்ளத்தை வேத னைப் படுத்தியது. "ஐயோ !என் வந்து என்னை வேதனைப் படுத்து கிறாய்' என்று அவனுடைய கரத் தால் ஓங்கி அந்த தண்ணீரின்மேல் அடித்துப் பலமாய் கலக்கினன். அது கலங்கினாலும் அவனுடைய உள்ளத்திலிருந்த உருவம் மறைய வேண்டுமே!

வளையலைச் சிதறடித்தானே, அதோடு அவளுடைய உருவமும் ஓடியா விட்டது! அது அவனு டைய உள்ளத்திலிருந்து அசைய வில்லையே!

ஏங்கி ஏங்கி அவளுடைய குடி சையைத் திரும்பிப் பார்த்தான். பயன்?

தூரத்திலே ஒரு கிளையிலிருந்து ஒடித்த மாங்கொத்தை இவன் புறம் விசிறி எறிந்தாள். எதற் காக? நமது உள்ளங்கள் பசுமை யாக இருக்கிறது என்பதற் காகவா? இனிமேல் ஒடிந்த அந் தக் கொத்துப் போல பிரிந்துவிட வேணும் என்று?

சிலப்பதிகாரம்

சர்-ஆர்.கே.சண்முகம் செட்டியார்

5. இந்திரவிழவூரெடுத்த காதை

89—168

தொடர்ச்சி

(89—110) இதுவரையில் புகார் நகரத்தின் அழகையும் வாணிகச் சிறப்பையும் பார்த்தோம். பட்டினப் பாக்கத்தில் அரசனுடைய அரண்மனை இருக்கின்றது. அதன் பெருமையைக் கவனிப்போம். சோழன் கரிகாலனுடைய காலத்தில்தான், புகார்நகரம் இவ்வளவு சிறப்பையும் பெற்றது. சிறு வயதில் ஏற்பட்ட ஒரு விபத்தினால் இவனுடைய கால்கள் நெருப்பில் சுடுபட்டு இவனுக்குக் கரிகாலன் என்ற பெயர் வந்தது- வெண்ணி என்னுமிடத்தில் நடந்த பெரும்போரில், பாண்டிய சேர அரசர்களை வென்று, சோழ மன்னனின் புகழையும் வலிமையையும் கரிகாலன் நிலைநாட்டினான். அதற்குப் பின், தமிழ் நாட்டில், தனக்குச் சமானமான அரசர் ஒருவரும் இல்லையாகையால், வடநாட்டின் மேல் படை யெடுத்துச் சென்று, அநேகம் வெற்றிகளைப் பெற்று, இமயமலை வரையில் போனான். இமயமலையைத் தாண்ட முடிய வில்லையே என்று கோபம் கொண்டு, அதன்மேல், தன் புலிக் கொடியை நாட்டிவிட்டுத் திரும்பினான். திரும்பி வரும் வழியில், வச்சிர நாட்டு அரசன், கரிகாலனுக்கு ஒரு முத்துப் பந்தலைத் திறையாகக் கொடுத்தான். தன் பகைவனான மகத நாட்டு அரசன், ஒரு கொலு மண்டபத்தைத் திறையாகக் கொடுத்தான். கரிகாலனுடைய நண்பனான அவந்தி மன்னன் தன்னுடைய தோரணவாயிலைப் பரிசாகக் கொடுத்தான். இந்த முத்துப் பந்தரும், கொலு மண்டபமும், தோரண வாயிலும் பொன்னாலும் மணியாலும் செய்த அரிய வேலைப் பாடுகளை உடையவை. இவை சாமானிய தச்சர்களால் செய்யப் பட்டவை யல்ல. முன்னொரு காலத்தில், இம்மூன்று மன்னர்களின், மூதாதையர் செய்த உதவிக்காகத் தெய்வத் தச்சனாகிய மயனால் செய்து கொடுக்கப்பட்டவை. இவைகளை யெல்லாம், புகார் நகரத்திற்குக் கொண்டுவந்து, ஒன்று சேர்த்து, கண்ணைக் கவரும் ஒரு கொலு மண்டபத்தைக் கரிகாலன் அமைத்தான். இம்மண்டபத்தின் அழகையும். கம்பீரத்தையும் பல புலவர்கள் பாடியிருக்கின்றனர். இந்த மண்டபத்திற்குப் பட்டிமண்டபம் என்று பெயர்.

சோழன் கரிகாலன் வடநாட்டு அரசரை வென்று திரும்பி, இயற்றிய பட்டி மண்டபம்

இருநில மருங்கின் பொருநரைப் பெறூஅச்
செரு வெங் காதலின் திருமா வளவன்
வாளும் குடையும் மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுக, இம்
மண்ணக மருங்கின் வலிகெழு தோளெனப்
புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள்,
அசைவுஇல் ஊக்கத்து நசைபிறக்கு ஒழியப்
பகை விலக்கியது இப்பயங்கெழு மலைஎன,
இமையவர் உறையும் சிமயப் பிடர்த்தலைக்
கொடுவரி ஒற்றிக் கொள்கையின் பெயர்வோற்கு
மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும் ;
மகதநன் நாட்டு வாள்வாய் வேந்தன்,
பகைபுறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும் ;
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்து ஓங்கு மரபின் தோரண வாயிலும் ;
பொன்னினும் மணியினும் புனைந்தன வாயினும்,
நுண்வினைக் கம்மியர் காணாமரபின ;
துயர்நீங்கு சிறப்பின் அவர் தொல்லோர் உதவிக்கு,
மயன் விதித்துக் கொடுத்த மரபின ; இவைதாம்,
ஒருங்கு உடன் புணர்ந்து, ஆங்கு, உயர்ந்தோர் ஏத்தும்
அரும்பெறல் மரபின் மண்டபம் அன்றியும் ;

பதவுரை

இருநில மருங்கின் — பெரிய நிலப்பரப்பையுடைய தமிழ்நாட்டில்; பொருநரைப் பெறூஅ — எதிர்த்துப் போர் செய்வாரைப் பெறாது; செரு வெம் காதலின் — போர் மேல் எழுந்த மிக்க விருப்பத்தால்; திருமா வளவன் — கரிகால் வளவன் ; வாளும் குடையும் — தனது வாளையும் குடையையும் ; மயிர்க்கண் முரசும் — மயிரையும் கண்களையுமுடைய முரசத்தையும் ; நாளொடு பெயர்த்து — நல்ல நாளிலே போருக்குப் புறப்படச் செய்து ; இம் மண்ணக மருங்கின் — இந்நிலவுலகில் ; என் வலிகெடு தோள்—வலிமை நிறைந்த எனது தோள்கள் ; நண்ணார்ப் பெறுக என — பகைவர்களைப் பெறுவதாக என்று ; புண்ணியத் திசை முகம் போகிய அந்நாள் — புண்ணியத் திசை எனப்படும் வடதிசையில் படையெடுத்துப் போன அந்நாளில்; அசைவு இல் ஊக்கத்து — சோர்தல் இல்லாத நிறைந்த ஊக்கத்தையுடைய ; நசை பிறக்கு ஒழிய — போர் மேல் எழுந்த விருப்பம் மேற்போகாது பின்னிடும்படி ; பகை விலக்கியது — எனக்குப் பகையாய் நின்று என்னை விலக்கியது ; இப்பயம் கெழுமலை என — இந்தப் பல நலங்களும் நிறைந்த பெருமலை என்று ; இமயவர் உறையும் — தேவர்கள் வாழ்கின்ற ; சிமையப் பிடர்த்தலை — இமய மலையின் பிடரியில் ; கொடுவரி ஒற்றி — தனது புலிக்கொடியை நாட்டி ; கொள்கையின் பெயர்வோற்கு — தான் கொண்ட போர்க்கொள்கையோடு திரும்பிய அக்கரிகாலனுக்கு ;

மாநீர் வேலி வச்சிர நன்னாட்டு — கடலைக் காவலாகவுடைய வச்சிர நாட்டின் ; கோன் இறை கொடுத்த — அரசன் கப்பமாகக்

கொடுத்த ; கொற்றப் பந்தரும் — தனது வெற்றியால் வந்த முத்துப் பந்தரும் ;

மகத நன்னாட்டு — மகத நாட்டின் ; வாள்வாய் வேந்தன்—வாட்போர் செய்வதில் திறமை வாய்ந்த மன்னன் ; பகைப் புறத்துக் கொடுத்த — தோல்வி அடைந்து பின்னர்த் திறையாகக் கொடுத்த ; பட்டி பண்டபமும் — அரசன் கொலுவிருக்கும் பண்டபமும் ;

அவந்தி வேந்தன் — அவந்தி நாட்டு அரசன் ; உவந்தனன் கொடுத்த — மிக்க விருப்பத்தோடு தந்த ; நிவந்து ஓங்கு மரபின் — மிக உயர்ந்து விளங்கும் தொழிற்சிறப்பினையுடைய ; தோரண வாயிலும் தோரணத்தையுடைய வாயிலும் ; (ஆகிய எல்லாம்)

பொன்னினும் மணியினும் புனைந்தன வாயினும் — பொன்னாலும் மணியாலும் செய்யப் பட்டன ஆயினும் ; நுண்வினைக் கம்மியர் — நுட்பமான தொழில்களைச் செய்ய வல்ல தட்டாரால் ; காணா மரபின— செய்யப்படாத சிறப்பினையுடையவை ; (அவை) துயர் நீங்கு சிறப்பின் — துன்பங்கள் நீங்கிய சிறப்பினையுடைய ; அவர் தொல்லோர் உதவிக்கு — அவ்வரசர்களின் மூதாதையர் ஒரோர் காலத்தில் செய்த வுதவிக்குக் கைம்மாறாக ; மயன் விதித்துக் கொடுத்த — மயன் என்னும் தெய்வ தச்சனால் செய்து கொடுக்கப்பட்ட ; மரபின — சிறப்பினை உடையன ; இவைதாம்—; ஒருங்கு உடன் புணர்ந்து — ஒன்றாக ஓரிடத்தில் சேர்ந்து ; ஆங்கு —; உயர்ந்தோர் ஏத்தும் — பெரியோரால் புகழப்படுகின்ற ; அரும்பெறல் மரபின் — பெறுதற்கரிய சிறப்பினையுடையதாய்க்கட்டப்பட்ட ; மண்டபம் அன்றியும் — அப் பட்டி மண்டபத்தை யல்லாமலும் ;

★

(111—127) பட்டினப் பாக்கத்தில் வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூதசதுக்கம், பாவை மன்றம் — என்ற ஐந்து அற்புதமான தெய்வத் தன்மை பொருந்திய பொது இடங்கள் உண்டு. வெள்ளிடை மன்றம் வியாபாரச் சரக்குகளை அடுக்கி வைக்குமிடம். இம் மன்றத்தில் மூட்டை மூட்டையாகக் கட்டிய சரக்குகள் குவிந்திருக்கின்றன. ஒவ்வொரு மூட்டையின்மேலும் இன்ன சரக்கென்றும், அதன் எடை இன்னதென்றும், அதற்கு உரியவன் இன்னான் என்றும் காட்டக்கூடிய முத்திரைகள் இடப்பட்டிருக்கின்றன. இம் மன்றத்திற்குக் கதவும், தாழும், காவலுமில்லை. இப்படியிருந்தும், ஒரு மூட்டையாவது களவு போவதில்லை. எவனாவது ஒரு திருடன் இவ்விடத்திலிருந்து ஒரு மூட்டையைத் திருடினால், அதைத் தலைமேல் வைத்து, மன்றத்தைச் சுற்றிச் சுற்றி வருவதல்லாமல், அவன் வெளியில் போக முடியாது. இந்த மன்றத்தைக் காக்கும் தெய்வத்தின் சக்தி இது.

அடுத்தாற்போல், இலஞ்சி மண்டபம் இருக்கின்றது. இலஞ்சி என்றால் குளம்; இந்தக் குளத்தில், கூன், குறள், ஊமை, செவிடு, குட்டம் — இவைகளால், பிணிபட்டவர் மூழ்கி வணங்கினாரானால், இவர்களுடைய நோயெல்லாம் நீங்கி நலம்பெறுவார்கள்.

அதற்கு அப்பால், நெடுங்கல் மண்டபம் இருக்கின்றது. இந்த மண்டபத்தில் நீண்டு ஒளிவீசும் ஒரு கல் உண்டு, இந்தக் கல்லைச் சுற்றி வந்து தொழுதால், பைத்தியம் பிடித்தவர்களும், விஷத்தை உண்டவர்களும், பாம்புவாய்க் கடிப்பட்டோரும், பேய்பிடிக்கப்பட்டவரும் குணமடைவார்கள்.

வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம்.

வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதிக்
கடைமுக வாயிலும், கருந்தாழ்க் காவலும்,
உடையோர் காவலும் ஒரீஇய வாகிக்,
கட்போர் உளரெனின், கடுப்பத் தலையேற்றிக்,
கொட்பினல்லது, கொடுத்த லீயாது
உள்ளுநர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றமும் ;
கூனும் குறளும் ஊமும் செவிடும்
அழுகுமெய் யாளரும் முழுகினர் ஆடிப்,
பழுதுஇல் காட்சி நன்னிறம் பெற்று,
வலஞ்செயாக் கழியும் இலஞ்சி மன்றமும் ;
வஞ்ச முண்டு மயல் பகை உற்றோர்,
நஞ்ச முண்டு நடுங்கு துயர் உற்றோர்,
அழல்வாய் நாகத்து ஆர்எயிறு அழுந்தினர்,
கழல்கண் கூளிக் கடுநவைப் பட்டோர்,
சுழல வந்து தொழத்துயர் நீங்கும்
நிழல்கால் நெடுங்கல் நின்ற மன்றமும் ;

பதவுரை

[வம்ப மாக்கள் — பிறநாட்டிலிருந்து இந்நாட்டிற்குப் புதியவராய் வந்த மக்கள் ; தம்பெயர் பொறித்த — தங்கள் பெயர்களை எழுதிய ; கண்ணெழுத்துப் படுத்த — இன்ன சரக்கென்று எழுதியிடப்பட்ட ; எண்ணுப் பல்பொதி — எண்களும் குறிக்கப்பட்ட பல வகை மூட்டைகளையுடைய ; கடை முகவாயிலும் — பண்டசாலைகளின் கடை வாசற் காவலும் ; கருந்தாழ்க்காவலும் — வலிய தாழிட்ட காவலும் ; உடையோர் காவலும் — அம்மூட்டைகளுக்கு உரியவரின் காவலும் ; ஒரீஇய வாகி — ஆகிய எல்லாக் காவலும் நீங்கப் பெற்று ; கட்போர் உளரெனில் — களவு செய்வோர் உண்டானால் ; கடுப்பத்தலை ஏற்றி — கழுத்துக் கடுக்கும் படித் தங்கள் தலையிலே ஏற்றிக் கொண்டு ; கொட்பின் அல்லது அங்குமிங்கும் சுழன்று திரிவதல்லாமல் ; கொடுத்தல் இயாது — அக்கள்வர் அப்பொருட்களை வெளியில் கொண்டு போகும் படி விடாமல் ; உள்ளுநர்ப் பனிக்கும் — களவு செய்வோரை, நினைத்தாலும் நடுங்கச் செய்யும் ; வெள்ளிடை மன்றமும் — வெளியான இடத்தினையுடைய மன்றமும் ;

கூனும் குறளும் ஊமும் செவிடும் — கூனர்களும், குள்ளர்களும், ஊமைகளும், செவிடர்களும் ; அழுகு மெய்யாளரும் — தீராத நோயால் அழுகிய உடலை உடையோரும் (ஆகிய இவர்கள்) ; முழுகினர் ஆடி — நன்கு முழுகிக் குளித்து ; பழுது

இல் காட்சி — குற்றமில்லாத தோற்றத்தோடு ; நன்நிறம் பெற்று — அழகிய நிறத்தையும் பெற்று ; வலம் செயாக் கழியும் — அவ்விடத்தை வலப்புறமாகச் சுற்றி வந்து போகின்ற ; இலஞ்சி மன்றமும் — தெய்வத்தன்மை பொருந்திய பொய்கையாகிய இலஞ்சி மன்றம் என்னும் இடமும் ;

வஞ்சம் உண்டு — பகைவரால் கொடுக்கப் பட்ட மருந்தை உண்டு; மயல் பகை உற்றோர் — பித்தம் பிடித்தவர்கள் ; நஞ்சம் உண்டு — நஞ்சை அறியாமல் உண்டு ; நடுங்கு துயர் உற்றோர் — நடுக்கந்தரும் துன்பத்தை அடைந்தோர் ; அழல்வாய் நாகத்து — தீயைப் போன்ற நச்சுவாயையுடைய பாம்பினது ; ஆர் எயிறு அழுந்தினர் — கூரிய பற்களால் கடிக்கப் பட்டவர் ; கழல் கண் கூளிக் கடுநவைப் பட்டோர் — பிதுங்கிய கண்களையுடைய பேயினுல் கொடிய துன்பத்தை அடைந்தோர் ; (ஆகிய இவர்கள்) சுழல வந்து தொழ — சுற்றி வந்து வணங்கிய அளவிலே ; துயர் நீங்கும் — தமது துன்பங்கள் நீங்கப் பெறுகின்ற ; நிழல்கால் நெடுங்கல் — ஒளி வீசும் குத்துக்கல் ; நின்ற மன்றமும் — நிற்கின்ற மன்றமும் ;

★

(128—38) அதன் பிறகு, நான்கு பாதைகள் கூடும் சதுக்கத்தில் ஒரு பூதம் இருக்கின்றது. கொடிய பாவங்களைச் செய்யும் மக்களை இந்தப் பூதம் தன்னுடைய பாசக் கயிற்றில் கட்டி அடித்து உண்ணும். போலித் துறவியாக வேடம் போடுகிறவர்களையும், கற்பில்லாத பெண்களையும், அரசனுக்குக் கேடு விளைக்கும் அமைச்சர்களையும், பிறருடைய மனைவியரை விரும்புவோரையும், பொய்ச்சாட்சி சொல்லுவோரையும், புறங்கூறி நடப்போரையும் தன் பாசக்கயிற்றில் கட்டி விழுங்குவேன் என்று ஊரெங்கும் கேட்கும்படி இந்தப் பூதம் ஆரவாரம் செய்து கொண்டிருக்கும். புகார் நகரம் நான்கு காதப் பரப்பு உடையது. அதாவது, சுமார் 10 மைல் சுற்றளவு என்று சொல்லலாம். இந்த நகரத்தில் மேற்சொன்ன கொடிய பாவங்களைச் செய்வோர், பிழைத்திருக்கவே முடியாது.

இதற்கு அப்பால், ஒரு பாவை மன்றம் இருக்கின்றது. இந்த மன்றத்தில் ஒரு பொம்மை உண்டு. இந்தப் பதுமை, வாய்திறந்து பேசாது. ஆனல், அரசன் செங்கோல் முறை தவறி நடந்தாலும், நீதி மன்றத்தில் நீதி செலுத்துவோர் ஒருதலைச் சார்பாகத் தீர்ப்புச் சொன்னாலும், இந்தப் பதுமையினுடைய கண்களிலிருந்து கண்ணீர் வடியும். குற்றம் செய்பவர்களைத் தண்டிக்க அரசன் இருக்கின்றான். ஆனல், அரசனும், அவனைச் சேர்ந்த நியாயாதிபதிகளும் நீதி முறையிலிருந்து தவறினல், அவர்களைத் தண்டிப்பதற்கு எவருமில்லை. இருந்த போதிலும், இந்தப் பாவையின் அழுகையால், அரசன் நீதி தவறிவிட்டான் என்று எல்லோருக்கும் தெரிந்து விடும். இந்தப் பயத்தினலே அரசன் செங்கோல் முறை தவறாமல் ஆட்சி செய்தான்.

பூத சதுக்கமும், பாவை மன்றமும்

128 தவம் மறைந்து ஒழுகும் தன்மையிலாளர்,
அவம் மறைந்து ஒழுகும் அலவைப் பெண்டிர்,

அறைபோகு அமைச்சர் பிறர் மனை நயப்போர்,
பொய்க்கரி யாளர், புறங்கூற்றாளர் ‘என்
கைக்கொள் பாசத்துக் கைப்படுவோர்’ எனக்
காதம் நான்கும் கடுங்குரல் எடுப்பிப்,
பூதம் புடைத்துஉணும் பூத சதுக்கமும்;
அரைசுகோல் கோடினும் அறங்கூறு அவையத்து,
உரை நூல் கோடி ஒருதிறம் பற்றினும்,
நாவொடு நவிலாது, நவைநீர் உகுத்துப்,
பாவை நின்று அழூஉம் பாவை மன்றமும்;

பதவுரை

தவம் மறைந்து ஒழுகும் — தவவேடத்தில் மறைந்து தவமில்லாமல் பொய் ஒழுக்கத்தையுடைய; தன்மையிலாளர் — நல்ல தன்மையில்லாதவர்; அவம் மறைந்து ஒழுகும் அலவைப் பெண்டிர் — தீய ஒழுக்கத்தில் மறைந்து ஒழுகுகின்ற கற்பில்லாத பெண்களும்; அறை போகு அமைச்சர் — அரசனுக்குக் கேடு உண்டாக்குகின்ற அமைச்சர்களும்; பிறர்மனை நயப்போர் — பிறருடைய மனைவியரை விரும்புவோரும்; பொய்க்கரி யாளர் — பொய்ச் சாட்சிக் காரரும்; புறங்கூற்றாளர் — புறங்கூறித் திரிகிறவர்களும்; (ஆகிய இவர்கள்) என் கைக்கொள் பாசத்து — என் கையில் கொண்டிருக்கிற இப்பாசக் கயிற்றில்; கைப்படுவோர் என — அகப்படுவோராவர் என்று; காதம் நான்கும் — நான்கு காதமளவும்; கடுங்குரல் எழுப்பி — மிகுந்த முழக்கத்தை உண்டு பண்ணி; பூதம் புடைத்து உணும் — அத்தீயவர்களைப் பூதம் அடித்துத் தின்னுகின்ற; பூதசதுக்கமும் — பூதம் நிற்கின்ற நாற்சந்தியும்;

அரைசு கோல் கோடினும் — அரசன் செங்கோல் முறை தவறினும்; அறம்கூறு அவையத்து — வழக்கு முறைகளைக் கூறுகின்ற நீதிமன்றத்தில் உள்ளார்; உரை நூல் கோடி — பெரியோர் கூறிய நூல் முறைமையில் மாறுபட்டு; ஒரு திறம் பற்றினும் — ஒருதலைச் சார்பாகத் தீர்ப்புக்கூறினும்; நாவொடு நவிலாது — தன் நாவினால் வெளிப்படக் கூறாமல்; நவைநீர் உகுத்து — துன்பந்தரும் கண்ணீரைச் சிந்தி; பாவை நின்று அழூஉம் — பதுமை நின்று அழுகின்ற; பாவை மன்றமும் — பாவை மன்றம் எனப்படும் தெய்வ நிலையமும்;

★

(139—156) இந்திர விழாவைக் கொண்டாட வேண்டிய ஏற்பாடுகள் நடந்தன. இந்தவிழா, இருபத்தெட்டு தினங்கள் நடைபெறும். மேற்சொன்ன ஐந்து மன்றங்களிலும் பலிகளையிட்டுப் பூசை செய்தார்கள். வச்சிரக் கோட்டத்தில், இருந்த முரசை ஒரு யானையின் மேல் ஏற்றி, இந்திரனுடைய யானையாகிய ஐராவதத்திற்கு அமைந்த கோயிலுக்குக் கொண்டுபோய் முரசையடித்து, விழாத் தொடங்கிய செய்தியை ஊரெங்கும் தெரிவித்தார்கள். நகர வீதிகளெல்லாம், அலங்கரிக்கப்பட்டன, ஊரிலுள்ள பெரிய மாளிகைகளின் திண்ணைகளில், வயிரத்தாலும், பவளத்தாலும் செய்யப்பட்ட திரண்ட தூண்கள் விளங்கின. மாளிகைகளின் வாயில்களில், மகரதோரணங்கள் தொங்கின. வீதிகள் தோறும், தண்ணீர் நிறைந்த பொற்குடங்களும், பாலி

கைப் பொருள்களும், பதுமை விளக்குகளும், பொன்னால் செய்த கொடிகளும், வெண்சாமரையும், நிறைந்திருந்தன. வாசனைப் பொருள்களின் நறுமணம் எங்கும் வீசிற்று. இவ்விதமாகப் புகார் நகரத்தில் இந்திர விழாத் தொடங்கிற்று.

விழாவுக்கு, நகர் அலங்காரம்

மெய்வகை உணர்ந்த விழுமியோர் ஏத்தும்
ஐவகை மன்றத்தும் அரும்பலி உறீஇ ;
வச்சிரக் கோட்டத்து மணம் கெழு முரசம்,
கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி,
வால்வெண் களிற்றரசு வயங்கிய கோட்டத்துக்
கால்கோள் விழாவின் கடைநிலை சாற்றித்
தங்கிய கொள்கைத் தருநிலைக் கோட்டத்து
மங்கல நெடுங் கொடி வானுற எடுத்து,
மரகத மணியொடு, வயிரம் குயிற்றிய
பவளத் திரள்கால் பைம்பொன் வேதிகை
நெடுநிலை மாளிகைக் கடைநிலத்து யாங்கணும்,
கிம்புரிப் பகுவாய்க் கிளர்முத்து ஒழுக்கத்து,
மங்கலம் பொறித்த மகர வாசிகைத்
தோரணம் நிலைஇய, தோம்அறு பசும்பொன்
பூரண கும்பத்துப் பொலிந்த பாலிகை,
பாவை விளக்குப், பசும்பொன் படாகை,
தூமயிர்க் கவரி, சுந்தரச் சுண்ணத்து,
மேவிய கொள்கை வீதியில் செறிந்து, ஆங்கு—

பதவுரை

மெய்வகை உணர்ந்த — உண்மைப் பொருள்களை நன்கறிந்த; விழுமியோர் ஏத்தும் — பெரியோரால் புகழப்படுகின்ற; ஐவகை மன்றத்தும் — ஐந்து வகையான மன்றங்களிலும்; அரும்பலி உறீஇ— அரிய பூசைகளைச் செய்து; வச்சிரக் கோட்டத்து — இந்திரனுடைய வச்சிராயுதம் நிற்கும் வச்சிரக் கோட்டத்திலுள்ள; மணம் கெழு முரசம் — விழாவுக்குரிய முரசத்தை; கச்சையானைப் பிடர்த்தலை ஏற்றி — கச்சுக் கயிறு கட்டிய யானையின் பிடரியிலே ஏற்றி வைத்து; வால் வெண் களிற்றரசு — ஒளி பொருந்திய வெண்ணிறமான யானைகளின் அரசனாகிய ஐராவதம்; வயங்கிய — விளங்குகின்ற; கோட்டத்து — கோயிலில்; கால் கோள் விழாவின் கடைநிலை சாற்றி — தொடங்கப் பட்ட இந்திரவிழாவின் முடிவை முரசையடித்துச் சொல்லி; தங்கிய கொள்கை — நிலவுலகில் வந்து தங்கிய சிறப்பையுடைய; தருநிலைக் கோட்டத்து — கற்பகமரம் நிற்கும் கோயிலில்; மங்கல நெடும் கொடி — மங்கலச் சிறப்புடைய நீண்ட கொடியை; வான் உற எடுத்து — வானத்தை யளாவும்படி எடுத்துக் கட்டி;

மரகத மணியொடு — மரகத மணியுடன்; வயிரம் குயிற்றிய — வயிரத்தையும் பதித்த; பவளத்திரள்கால் — பவளத்தால் செய்யப் பட்ட திரண்ட தூண்களையுடைய; பைம் பொன் வேதிகை — பசுமையான பொன்னால் செய்யப்பட்ட திண்ணையையுடைய; நெடு நிலை மாளிகை — நீண்ட நிலைகளையுடைய மாளிகைகளின்;

கடை முகத்து யாங்கணும் — கடைவாசல்கள் தோறும்; சிரிப்பும் பகுவாய் கிளர் முத்து ஒழுக்கத்து — பூண் கட்டிய பிளந்த வாயிலிருந்தும் புறப்பட்டு வரும் முத்துக்களின் மாலைகளை யுடைய; மங்கலம் பொறித்த — எட்டுவகை மங்கலப் பொருள்களும் எழுதப்பட்ட; மகரவாசிகைத் தோரணம் — வாசிகை வடிவமாக வளைவுடன் செய்யப்பட்ட மகரதோரணங்கள்; நிலைஇய — நிலை பெற்ற; (அதாவது, வாயில்தோறும் இத்தகைய மகர தோரணங்கள் இருந்தன; அவற்றோடு) தோம் அறு பசும் பொன் — குற்றமில்லாத பசும் பொன்னால் ஆகிய; பூரண கும்பத்து — நிறை குடங்களுடன்; பொலிந்த பாலிகை — முளைத்து விளங்குகின்ற பாலிகைப் பொருள் களும்; பாவை விளக்கு — பொம்மைகள் தாங்கி நிற்கும் பாவை விளக்குகளும்; பசும் பொன் படாகை — பசிய பொன்னால் செய்யப் பட்ட கொடியும்; தூமயிர்க் கவரி — தூய்மையான கவரி மயிரால் செய்யப்பட்ட வெண்சாமரையும்: சுந்தரச் சுண்ணத்து — அழகிய வாசனைப் பொடிகளுடன்; மேவிய கொள்கை — பொருந்தியிருக்கும் சிறப்பினையுடைய; வீதியில் — பெருந்தெருவில்; செறிந்து — நிறைந்து; ஆங்கு — அவ்வாறு பலி இடப்பட்ட அப்பொழுதே;

★

(157—168) நகர் அலங்காரமானபின், இந்திரனுக்கு நீராட்டும் வைபவம் தொடங்கிற்று. அரசனுடைய அவைக்களத்தில், முதன்மையாக இருக்கும் 'ஐம்பெருங்குழு' என்று சொல்லப்பட்ட அமைச்சன், புரோகிதன், சேனாபதி, தூதுவன், ஒற்றன் ஆகிய இவர்களும் அரசனுடைய பரிவாரத்தைச் சேர்ந்த 'எண்பேராயம்' என்று சொல்லப்பட்ட கணக்கன், சர்வாதிகாரி, பொக்கிஷதாரி, வாயிற்காப்போன் ஜனப்பிரதிநிதி, படைத்தலைவன், யானைத்தலைவன், குதிரைத்தலைவன், ஆகிய இவர்களும்; இளவரசரும், வணிக மக்களும், குதிரைப் பாகரும், யானைப் பாகரும், தேர்ப்பாகரும் ஆகிய எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து, அரசனை வாழ்த்திக் காவிரி நதிக்குச் சென்றனர். பொன்னாலான குடங்களில், காவிரியின் சங்கமத்துறையிலிருந்து, புண்ணிய தீர்த்தத்தை எடுத்து, அந்நீரால் இந்திரனைக் குளிப்பாட்டினார்கள். உலக மக்கள் பார்த்து மயங்கும்படியாகவும், தேவர்கள் வியக்கும் படியாகவும் இருந்தது, இந்தக் காட்சி.

இந்திரனை நீராட்டுதல்

ஐம்பெருங் குழுவும், எண்பேராயமும்,
அரசகுமரரும், பரதகுமரரும்,
கவர் பரிப் புரவியர், களிற்றின் தொகுதியர்,
இவர் பரித் தேரினர், இயைந்து ஒருங்கு ஈண்டி,
"அரைசு மேம்படீஇய அகல்நிலை மருங்கின்,
உரைசால் மன்னன் கொற்றம் கொள்க," என,
மாஇரு ஞாலத்து, மன்னுயிர் காக்கும்,
ஆயிரத்தோரெட்டு அரசுதலைக் கொண்ட
தண் நறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப்
புண்ணிய நன்னீர்ப் பொன்குடத் தேந்தி,
மண்ணகம் மருள, வானகம் வியப்ப,
விண்ணவர் தலைவனை விழுநீர் ஆட்டி;

பதவுரை

ஐம்பெருங் குழுவும் — அரசன் அவைக்களத்தில் இருப்போராகிய பெரியோர் ஐவரும்; எண்பேர் ஆயமும் — அரசனுக்குத் துணைபுரியும் எட்டு வகையான பெரியோர் கூட்டமும்; அரச குமரரும் — இளவரசர்களும்; பரத குமரரும் — வணிகமாக்களும்; கவர் பரிப் புரவியர் — நிலத்தைக் கவர்ந்து செல்லும் குதிரைகளையுடையவராய்; இவர் பரித்தேரினர் — எழுந்து விரைந்து செல்லும் தேரினையுடையவராய்; இயைந்து ஒருங்கு இண்டி — தம்முள் சேர்ந்து ஒன்றாகத் திரண்டு;

அகன்நிலை மருங்கின் — அகன்று நிலைபெற்ற இவ்வுலகில்; அரைசு மேம்படீஇய — தமது அரசியல் மேம்பட வேண்டி; உரைசால் மன்னன் — புகழ் மிகுந்த வேந்தன்; கொற்றம் கொள்க என — வெற்றி பெறுவானாக என்று கூறி; மா இரு ஞாலத்து — மிகப்பெரிய இவ்வுலகத்து; மன் உயிர் காக்கும் — நிலைபெற்ற உயிர்களைக் காக்கின்ற; ஆயிரத்து ஓரெட்டு அரசுதலைக் கொண்ட — ஆயிரத்தெட்டு அரசர்கள் முன்னாளில் தம் தலையில் சுமந்து கொண்ட சிறப்பினையுடைய; தண் நறும் காவிரித் தாதுமலி பெருந்துறை — குளிர்ந்த மணமுடைய காவிரியாற்றின், பூந்தாது நிறைந்த பெரிய சங்கமத்துறையில்; புண்ணிய நன்னீர் — அப்புண்ணியத் தீர்த்தத்தை; பொன் குடத்து ஏந்தி — பொன்னாலான குடங்களில் எடுத்து; மண்ணகம் மருள — உலகில் உள்ளார் பார்த்து மயங்கும்படியாகவும்; வானகம் வியப்ப — வானத்திலுள்ளார் வியக்கவும்; விண்ணவர் தலைவனை — இந்திரனை; விழுநீர் ஆட்டி — அப்புண்ணிய நீரில் குளிப்பாட்டி;

படீஇய — படுவதற்காக.

(தொடரும்)

மலை மகத்துவம்

[தா. நாகலிங்கம்]

சூரியன் மறையும் வேளையில் கோவை நகரிலிருந்து மேற்கே பார்த்தால் ஒரு மனோகரக் காட்சியைக் காணலாம். அடுக்கடுக்காக சிகரங்களுள்ள மேற்கு மலைத் தொடர்ச்சி ஒரே கரு நீல வர்ணமாயிருக்கும். சிகரங்களின் விளிம்புகள் மாலைக் கதிரவனுடைய கிரணங்கள் பட்டுப் பொன்னால் மூலாம் பூசப்பெற்றது போல் 'தக தக' என்று பிரகாசிக்கும். சூரியனும் மலைச் சிகரமும் ஒன்றையொன்று தழுவி முத்தமிடும் காட்சியைக் காண, கண் கோடி வேண்டும்!

இந்த மலைத்தொடரில் ஒரு பாகம் தான் மருதமலை என்னும், முருகன் எழுந்தருளியுள்ள குன்றம். திருமால், பிரமன், இந்திரன் முதலான தேவர்களெல்லாம் இம்மருதமலையின் சிறப்பை நாரதர் வாயிலாக அறிந்து இந்த மருதமலைக்கு வந்து நியம நிஷ்டையுடன் நீராடி, அபிஷேக, அலங்கார, தீபாராதனைகளுடன் முருகப் பெருமானைத் தொழுத பயனாக, முருகன் பிரத்தியக்ஷமாகி தேவர்களுக்கு அருள் புரிந்தான் என்று புராணம் அறைவதிலிருந்து இம்மருதமலையின் சிறப்பை மானிடர்களாகிய நாம் ஓரளவு கற்பனை செய்து கொள்ள வேண்டியிருக்கிறது.

கோவையிலிருந்து விவசாயப் பண்ணை வழியாகச் சற்று வடமேற்காகச் செல்லும் பாதையில் ஏழு மைல் சென்றால் மருதமலைக்குச் செல்லலாம்.

மருதமலை அடிவாரத்திற்குச் சற்று முன்னால் ஒரு பெரிய பள்ளம் இருக்கிறது. இதை யானைப் பள்ளம் என்று சொல்வார்கள். இப்பள்ளம் நெருங்கியதும் வண்டியில் சுகமாய்ச் சவாரி செய்தவர்கள் மரியாதையாகக் கீழே இறங்கிக்கொள்ள வேண்டும். மறுபடி வண்டி மேலே ஏறும்போது முக்கி முனகிக்கொண்டு வண்டியையும், சக்கரங்களையும் பிடித்துத் தள்ளவேண்டியிருக்கும். ஆனால் தற்போது இந்நிலைமை வெகுவாக சீர்திருந்தி வருகிறது.

யானைப்பள்ளத்தைத் தாண்டினதும் அடிவாரம் வந்து விடுகிறது. அதாவது நாம் அடிவாரத்திற்கு வந்து விடுகிறோம். வந்த சிரமத்தைப் பரிகாரம் செய்து கொள்ள அங்கு மரநிழலும் உண்டு.

மலை அடிவாரத்திற்கு வந்ததும், கிரிப்பிரதட்சணம் செய்வது என்பது சில பக்தர்களின் சம்பிரதாயம். அந்த சம்பிரதாயம் மருதமலையைப் பொருத்த வரையில் செல்லுபடியாகாது. இதற்கு மருதமலையைச் சுற்றி கிரி வீதி கிடையாது என்பது முதல் காரணம். கிரிவீதி ஏற்படுத்தவும் முடியாது என்பது இரண்டாவது காரணம். ஆகவே எல்லோரையும் போல "மருதமலை ஆண்டவனுக்கு அரோஹரா" என்று சொல்லிக்கொண்டு மலை ஏறத் தொடங்க வேண்டியது தான்.

"என் பின்னவனைப்பார்" என்று

சொல்வது போல (எனக்குப் பின்னால் அவனை, அதாவது முருகனைப் பார் என்றோ, எனக்குப் பின்னவனை—முருகனை-ப்பார் என்றோ வைத்துக் கொள்ளலாம்) முதன் முதலில் தான் தோன்றிப் பிள்ளையார் பாதையின் இடது புறமாக இருந்து மேலேயுள்ள முருகன் ஆலயத்தைப் பார்த்தபடி காட்சியளிக்கிறார். இப்பிள்ளையார், தானே தோன்றிய (சுயம்பு) பிள்ளையாராதலின் இவருக்குத் தான் தோன்றிப் பிள்ளையாரென்றே பெயர் வழங்கி வருகிறது. மூர்த்தி சுயம்பானாலும் பிள்ளையார் போலவே யானை முகமும், துதிக்கையும், காதுகளும், கண்களும் இருப்பது அவசியம் குறிப்பிட்டாக வேண்டிய ஒரு விஷயம். தான் தோன்றிப் பிள்ளையாருக்கு ஒரு "அரஹரா" போட்டு விட்டுக் காவடிச் சிந்து, திருப்புகழ் இவற்றைப் பாடியபடியே மலையேறுவார்கள்.

பாதை முழுதும் பெரிய பெரிய பாறைகளைக் கொண்டு பாவியிருப்பதால் அதிக சிரமப்படாமல் சிறுவர் சிறுமியரும், முதியவர்களும் மலை ஏறமுடிகிறது.

பாதை வழியே சற்று தூரம் சென்று வடக்கே திரும்பிப் பார்த்தால் மலை உச்சியில் மூன்றுபேர் நிற்பதுபோல் ஒரு கற்பாறையைக் காணலாம். இதைப்பற்றி ஒரு 'கதை' சொல்கிறார்கள்.

ஏதோ ஒரு திருவிழாவின்போது மூன்றுபேர் உண்டியல் பெட்டியின் மீதும் சுவாமியின் நகைகளின் மீதும் கண் வைத்து இரவில் அவற்றைக் கைப் பற்றிக் கொண்டு பிறர் கண்ணில் படாது தப்பிச் செல்ல மலையின் வடக்கேயுள்ள பாதை வழியாகச் சென்றார்களாம். ஆனால் அவர்கள் சுவாமியினால் சபிக்கப்பட்டு கல்லாகி விட்டார்களாம்!

கதை நிஜமோ பொய்யோ நமக்குத் தெரியாது. ஆனால் சுவாமி சொத்தைத் திருடினால் இதுதான் கதி என்று காட்டுவதுபோல் இன்னும் அந்தக் கற்பாறை நிற்பதை இன்றும் நிதரிசனமாகக் காணலாம்.

அடிவாரத்திலிருந்து கோவிலுக்கு சுமார் முக்கால் மைல் தூரமிருக்கும். இதன் மத்தியில்தான் இடும்பன் கோவில் இருக்கிறது. மற்ற இடும்பன் கோவில்களைப் போலவே இங்கும் மண் குதிரைகள், உருவாரங்கள் ஆகியவை இருந்தாலும், மண்ணினாலான கைகளும், கால்களும் இங்கு காணப்படுவது ஒரு விசேஷம். கைக்குடைச்சல் கால்குடைச்சல் வந்து அவதிப் பட்டவர்களின் பிரார்த்தனையின் பலன்தான் இந்தக்கால் கைகள். (மண்ணினால் ஒரு வயிறு செய்து வைத்து அடிக்கடி எனக்கு வரும் வயிற்றுவலியை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்று இந்த இடும்பன் கோவிலைப் பார்க்கும்போதெல்லாம் என் நினைவுக்கு வரும். நாளது பரியந்தம் ஏனோ அந்த எண்ணம் நிறைவேறவில்லை.)

சுற்றிலும் உள்ள மரம், செடி, கொடிகளையும், வெண் முகில்களின் நிழல் மலைச் சரிவுகளில் படிவதையும் பார்த்துக்கொண்டே மலை ஏறினால் சற்று நேரத்தில் அரசமரம், கல்லினாலான கருடஸ்தம்பம், கோபுரம் முதலியவை காட்சியளிக்கின்றன. எல்லாவற்றிற்கும் சேர்த்து ஒரு கும்பிடு போட்டுவிட்டுப் பாதையின் இடது புறமாக நம் கவனத்தைக் கொஞ்சம் திருப்பினால் பத்துப் பன்னிரண்டு குடிசைகள் இருப்பதைப் பார்க்கலாம்.

இந்தக் குடிசைகளில் மருதமலையைச் சேர்ந்த மலசர்கள் சுதந்தி

ரர்களாகவும், அசுத்தர்களாகவும் வாழ்கிருர்கள். இந்த இனத்தைச் சேர்ந்த ஆண் பெண்கள், அழகர் என்ருே, அழகிகள் என்ருே சொல்வது மகாபாவம்! மலைக்கு வருபவர்கள் கொடுக்கும் சோற்றை வாங்கித் தண்ணீரில் போட்டு வைத்துக் கொண்டு வாரக் கணக்கில் சாப்பிடுவார்கள். பிறகு, கம்பளிப் பிசின் வேங்கைப்பால் முதலியவற்றை விற்று அவ்வப்பொழுது காசும் வாங்கிக் கொள்வார்கள். அடிவாரத்திலிருந்து சாமான், மூட்டை முடிச்சுகளை அனயசமாக மேலே கொண்டு வந்து விடுவார்கள். இவர்களுக்குப் பிடிக்காத விஷயம் ஒன்று உண்டு. அதுதான் படிப்பு. இவர்களுக்கு கல்வியறிவூட்ட முயற்சித்தவர்களெல்லாம் ஓரளவாவது வெற்றி பெற்ருர்களென்று சொல்ல முடியாது.

பழனியை நினைவூட்டும் இருபது முப்பது படிகளைத் தாண்டிஞல் (உண்மையில் தாண்டவேண்டியதில்லை; ஏறிஞல் போதும்) ஏறும் தொல்லை தொண்ணூற்ருென்பது சதவிகிதம் தீர்ந்து விட்டது என்று சொல்லலாம். இப் படிகளைத் தாண்டினதும் ஒரு பரந்த சமவெளியையும். அதில் சத்திரம், மண்டபம், கோயில், அரசமர மேடை முதலியவைகளையும் பார்க்கலாம்.

அரசமரமேடையில் பிள்ளையார் நாகர் முதலியவைகள் இருக்கின்றன. இம்மர நிழலில் அமர்ந்து மலைக்கு வருவோர் இளைப்பாறுவதுண்டு! 'குளு குளு' வென்று இங்கு வீசும் காற்றுக்கு நாலு மின்சார விசிறிகளும், ஏழு பங்காக்களும், ஒன்பது விசிறிகளும் சேர்ந்து வீசும் காற்றுக்கூட இணையாகாது. எத்தகைய வெய்யில் காலத்திலும் இந்த இன்பம் நமக்குக் குறைவறக் கிடைக்கும்.

கோவிலைச் சுற்றி ஒரு பிரகாரமும் (ரதவீதி என்றும் வைத்துக் கொள்ளலாம்) மூலஸ்தானத்தைச் சுற்றி ஒரு பிரகாரமும் இருக்கிறது. கோவிலைச் சுற்றியுள்ள பிரகாரத்தில்தான் அடுத்தடுத்துச் சத்திரங்களும் மடங்களும் இருக்கின்றன. கோவிலுக்கு இடது புறத்தில் ஒரு மேடையும், இரண்டு ரதங்களும் இருக்கின்றன. ரதோற்சவ காலத்தில் அதாவது தைப்பூசத்தின்போது விநாயகரும் சுப்ரமண்யரும் ரதத்திலமர்ந்து திரு வீதி வலம் வருவார்கள். கோவிலின் முன்புறமுள்ள கருட ஸ்தம்பத்தில் திருக்கார்த்திகையின் போது பெரியதீபமேற்றுவார்கள்.

கோவிலின் உட்பிரகாரத்தில் இடது புறமாக விஸ்வநாதர் ஆலயமும், வலது புறமாக விசாலாக்ஷி அம்மையார் ஆலயமும், மத்தியில் ஸ்ரீ சுப்ரமண்யஸ்வாமியின் சந்நிதியும் இருப்பதை விசேஷமாகச் சொல்வார்கள். இது சோமாஸ்கந்தரை நினைவூட்டும்.

மூலஸ்தான மூர்த்தியான முருகன் தன் பெயருக்கேற்ப இளமையும், அழகும் ததும்ப தண்டத்தைக் கையிலேந்தியவராய் அருள் பொங்க காண்கிருர். அன்று தேவர்முன் தோன்றிய கோலம் இது என்று புராணம் கூறுகிறது.

தைப் பூசத்தன்று ஆயிரக்கணக்கான மக்கள் ஆண்டவனைத் தரிசிக்க வருவார்கள். பௌர்ணமிச் சந்திரனின் ஒளி வெள்ளத்திலே இரவு பத்துப் பதிஞெரு மணிக்கு மேல் ரதோற்சவம் நடைபெறும். அன்றும், மறுநாளும் ஒரே கோலாகலக் காட்சி. பஜனைகளென்ன, கோலாட்ட மென்ன, கும்மியென்ன ஒரே கலகலப்பாய் இருக்கும். இந்த கலகலப்புடன் மூலைக்கு மூலை சூதாட்டக் கும்பல்களிலிருந்துவரும் "வெய் ராஜா வெய்" என்ற குரல்களும் சேர்ந்து கொள்ளும்.

பொது ஜனங்களின் சௌகரியத்திற்காக ஏராளமான பாத்திர பண்டங்களை வாங்கிப்போட்டுப் பேருதவி செய்யும் தர்மகர்த்தரைப் பார்த்து இது விஷயத்தில் "இன்னும் பாராமுகம் ஏனோ இது உமக்கு நீதிதானோ" என்று பாடத் தோன்றுகிறது, 'சூதும் வாதும் வேதனை செய்யும்' என்பது தெய்வத்திற்காவது தெரியவேண்டாமா!

கோவிலுக்குத் தென்புறமாகப் படிக்கட்டுகள் கீழ் நோக்கி இறங்குகின்றன. அதில் இறங்கினால் ஒரு பெரிய மருதமரமும், கல்லினால் கட்டப் பட்ட ஒரு பெரிய சதுரமான தொட்டியும் தெரியும். மருதமரம் ஸ்தலவிருக்ஷம். இதனாலேயே இம்மலைக்கு மருதமலை என்று பெயர் வந்ததாகக் கூறுகிறார்கள். இதன் அடியில் ஓர் சுனை இருக்கிறது. இதற்கு மருத தீர்த்தம் என்று பெயர். சுனையின் நீர் மருதமர வேரிலிருந்து ஊறுகிறது. 'வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி' போல் இதிலுள்ள தண்ணீரும் எத்தகைய கோடைக்கும் வற்றுவதில்லையாம். மருத தீர்த்தத்தின் தண்ணீரும் மதுரமாகத்தான் இருக்கிறது. இங்கு சமைத்துச் சாப்பிட்டவர்களுக்கு ஹோட்டல் சாப்பாடும் பிடிக்காது, வீட்டுச் சாப்பாடும் பிடிக்காது. ஒரு சாதம், ஒரு சாம்பார், ஒரு சட்னி போதும்; அந்தச் சாப்பாட்டை ஒன்பது நாளைக்கு மறப்பது கஷ்டம்!

இச்சுனை நீரையும், இதற்கு மேற்புறத்திலுள்ள மற்றோர் சுனை நீரையும் முன் கூறிய கல் தொட்டியில் தேக்கி, அதிலிருந்து ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனியாக மூன்று குழாய்கள் இணைத்து பொது மக்களின் தண்ணீர் சௌகர்யத்திற்குப் பெரிதும் உதவி செய்திருக்கிறார்கள்.

கோயிலுக்கு வடபுறத்துச் சாரலில் உள்ள பாதை வழியாக மேலே ஏறினால் மலை உச்சியை அடைவதுடன், அங்கும் ஒரு பிள்ளையார் உட்கார்ந்திருப்பதைக் காணலாம். இவருக்கு உச்சிப் பிள்ளையார் என்று பெயர். இவர் கீழ் நோக்கிக் கொண்டிருப்பதையும், தான் தோன்றிப் பிள்ளையார் மேல் நோக்கிப் பார்ப்பதையும் விசேஷமாகக் குறிப்பிடுவார்கள்.

இந்த உச்சிப்பிள்ளையார் கோவிலிலிருந்து கீழே செல்லும் சரிவுப் பாதையில் சுமார் அரைமைல் இறங்கினால் அங்கு அனுமக் குமாரரையும் அனுமத்தீர்த்தத்தையும் பார்க்கலாம். அனும குமாரருக்கும் கிருத்திகை முதலிய விசேஷ தினங்களில் விசேஷ பூஜை நடக்கும். அனும தீர்த்தத்தின் தண்ணீர் குடிக்கவும், குளிக்கவும் ஏற்ற முறையில் குழாய் மூலம் வர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த அனும தீர்த்தத்தைக் குழாய் மூலமாகப் பெரியதடாகம் என்னும் ஊருக்குக் கொண்டு சென்று உபயோகப் படுத்துகிறார்கள்.

மருதமலையிலிருந்து அனும தீர்த்தத்துக்குச் சென்று வருவது ரொம்ப சிரமம். அதனால் அதிகமாக ஜனங்கள் இப்படிப் போவதில்லை. ஆனால் கோவையிலிருந்து தடாகம், பெரியதடாகம் மார்க்கமாய் இந்த அனுமதீர்த்தத்திற்கு அநேகர் அதிக சிரமப்படாமல் வந்து, நீராடி, சுவாமி தரிசனம் செய்து செல்கின்றனர்.

சரி, இனி வந்த வழியே திரும்பி ஆண்டவன் கோவிலுக்குச் செல்வோம்! அதோ! சாயங்கால பூஜைக்கு ஆயத்தமாகி விட்டது என்பதற்கு அடையாளமாக மணியோசை "வா, வா" என்று அழைக்கிறது! சுவாமி தரிசனம் செய்து விட்டு ஊரை நோக்கிப் புறப்படுவோம்.

சட்டைக்காரியின் சரித்திரம்

[ரா. நா.]

[அவளுக்குத் தமிழ் தெரியாது. ஆங்கிலத்தில் என்னிடம் கூறியதை அப்படியே தமிழில் கொடுத்திருக்கிறேன். அவள் ஏன் என்னிடம் சொன்னாள் என்று கேட்டு விடாதீர்கள். வக்கீலாயிருந்தால் அவர்கள் உதவியை நாடி எல்லோரும் வருவார்கள். அப்படி வந்தவள். அவள் கதை என் உள்ளத்தைத் தொட்டது. எப்படியிருக்கிறது என்று பாருங்கள்.]

நான் பிறந்த ஜாதியை நினைத்தாலே வெட்கம் பிடுங்கித் தின்னுகிறது. ஆங்கிலோ-இந்தியரை ஆங்கிலேயரும் அலட்சியம் செய்வார்கள்; இந்தியரும் கண்ணெடுத்துப் பார்க்க மாட்டார்கள். ஆனல் அதற்கு நான் பொறுப்பாளி யல்ல. அதனல் அந்த ஜாதி இழுக்கை நினைத்துக் கவலைப்படுவதை விட்டு விட்டேன். அப்படி என் வாழ்க்கையிலே ஏற்பட்ட துயரத்தை எப்படி நான் மறந்து விட்டு இருக்க முடியும்?

நான் சந்தோஷமா யிருக்க வேண்டு மென்றிருந்தால் நான் பிறந்தவுடனேயே என் தாயாரை நான் ஏன் இழக்க வேண்டும்? அவள் போன பின் என் அக்காவிடம் நான் வளர்ந்தேன். என் அக்காவென்ருல் சொந்த அக்கா வல்ல. என் தகப்பனரின் முதல் மனைவியின் பெண். ஆனல் என்னைத் தன் சொந்தத் தங்கையைப் போலவே நடத்தி வந்தாள். வீட்டில் நான், என் அப்பா, அக்கா, அவள் புருஷன், அவள் மைத்துனர் இவ்வளவு பேரும் இருந்தோம். என் அக்காவின் மைத்துனர் என்னைவிட நாலுவயது பெரியவர். வீட்டிலே நாங்கள் இருவரும் விளையாடி வருவோம். என் பேரில் அவர் தனி வாஞ்சை காட்டி வந்தார். நானும் அவரும் வெளியிலே உலாவப் போவோம். ஒருயிரும் ஈருடலுமாய் வாழ்ந்து வந்தோம். குடும்பம் ஒன்றுயிருக்க வேண்டும் என்று என்னை அவருக்குக் கலியாணம் செய்து வைப்பது என்று என் அக்கா ஏற்பாடு செய்தாள். அப்பாவும் ஒப்புக் கொண்டார். எங்களுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது மாதிரி இருந்தது. கலியாண ஏற்பாடு திட்டமான பிறகு அவர் முன்பை விட மிகவும் ஸ்வாதீனமாக என்னிடம் நடந்து வந்தார். ஆனல் அவர் மிகவும் சத்திய வந்தர். சமூகத்தால் தவருக நினைக்கும்படி என்னிடம் நடந்து கொள்வதில்லை.

இந்தச் சமயத்தில்தான் என் துயரம் ஆரம்பித்தது. அவருக்குக் கல்கத்தாவிற் கருகில் ரயிலில் உத்தியோகம் ஆயிற்று. அவர் புறப்பட வேண்டிய சமயம். என் மேல் இடி விழுந்ததுபோலிருந்தது அவர் பிரிந்த போது. அவர் போன பிறகு வாழ்வே சூன்யமாயிருந்தது எனக்கு.

ஆனல் இரண்டு நாளைக்கொருதரம் அவரிடமிருந்து கடிதம் வரும். அதைப் படித்துப் படித்து என் மனதைத் தேற்றிக் கொள்வேன்.

* * *

இதைத் தான் விதியென்று சொல்வது. இந்தச் சமயத்தில்

என் அப்பாவுக்கு உத்தியோக மில்லாமல் ஏன் போக வேண்டும். அவருக்குக் கண்களில் ஏதோ கெடுதல் என்று உத்தியோகத்தி லிருந்து விலக்கி விட்டார்கள். அவர் வேறு உத்தியோகத்திற் காக வடக்கேயுள்ள தனது நண் பர்களுக்கு எழுதியிருந்தார். ஒரு இடத்தில் வேலை கிடைப்பதாகக் கடிதம் வந்தது. ஆகையால் என் னையும் கூட்டிக் கொண்டு அந்த ஊருக்குப் புறப்பட்டார். என க்கு என்னமோ அவருடன் போகப் பிடிக்கவில்லை. ஏதோ கெடுதல் நேரப் போவதாக மன தில் திகில் ஏற்பட்டது.

கடைசியில் போன இடத்தில் அப்பாவுக்கு வேலை ஆயிற்று. எங்கள் ஜாதிக்காரர்தான் இவ் விஷயத்தில் உபகாரமாயிருந்தார். முதலில் அவர் வீட்டில் தான் தங்கினேம். அவருக்கு ஒரு பிள்ளை. தந்தி ஆபீசில் வேலையா யிருந்தார். கண்ணுக்கு அழகா யிருப்பார். நான் அவருடன் நெருங்கிப்பழக விரும்ப வில்லை.

போய்ச் சில நாட்களுக் கெல் லாம் எனக்கு நடந்த சூது தெரிந் தது. என்னை அந்தத் தந்தி ஆபீஸ் பிள்ளைக்கு விவாகம் செய்து கொடுப்பது என்ற நிபந்தனையின் பேரில் தான் அப்பாவுக்கு வேலை கிடைத்தது என்று தெரிந்தது. இதை அப்பா என்னிடம் சொன்ன பொழுது தூக்கி வாரிப் போட்டது.

"அவருக்குக் கொடுத்த வாக்கு என்ன ஆவது" என்று கேட் டேன். "உன் அப்பா பிழைத்தி ருக்க வேண்டுமா என்ன" என்று கேட்டார். நான் என்ன செய் வது. என் ஜாதிப் பெண்கள் போல் ஓடிப் போகும் தைரி யம் கிடையாது. அழுது ஆசாத்தி யம் செய்யவும் தெரியாது.

கடைசியில் தந்தி ஆபீஸ் பிள் ளைக்கு வாழ்க்கைப் பட்டேன். இவரும் என் மீது பிரியமாகத் தான் இருக்கிறார். ஆனல் அவர் என்னைத் தொடும் பொழுது ஏதோ மனம் சங்கடப் படுகிறது. சிறு வயதில் என்னுடன் கூடி விளை யாடி, கொஞ்சிக் குலாவி எனக்கு உள்ளத்தில் இடம் தந்த அவரை நினைக்கையில் என் உயிர் என் பறந்தோடிப் போகலாகாது என்று தோன்றுகிறது.

சிலசில சமயம் அவரை ஒரு தரம் பார்த்து பார்வையின்பத்தை யடைய வேண்டும் என்று தோன்றுகிறது. ஆனல் என்னை யார் கூட்டிக் கொண்டு போவார் கள்? போனல் அக்கா என்னு டன் முகம் கொடுத்துப் பேசு வாளா? மேலும் அவரைப் பார்த் தால் என் மனம் உடைந்து போகாமல் இருக்குமா? அவ ரைப் பார்த்தால் இவர் என்ன நினைப்பார். இப்படியே எண் ணுத எண்ண மெல்லாம் எண்ணி என் நெஞ்சம் புண்ணுகி வரு கிறது. உலகத்தில் எவ்வளவோ பேர் தங்கள் ஆசைகளைப் பூர்த்தி செய்து கொண்டு ஆனந்தமாய் வாழ வில்லையா? நான் மட்டுமா இப்படி அவலமாய் இருந்து அவ திப்பட வேண்டும். அதுவும் அவர் கலியாணமே செய்து கொள்ளா மல் தனியாய் இருக்கிறர் என்று கேட்டவுடன் என் உயிர் என் உடலை விட்டு விடவில்லை என்று ஏக்கமாயிருக்கிறது. என்றுமில் லாத ஏதோ ஒரு ஊரில் கடைசி யில் எல்லோரும் சந்திக்கிறர் களாமே! அங்கேயாவது நான் அவருடைய ஆவியுடன் கலந்து உத்சாகமா யிருக்கக் கொடுத்து வைத்திருக்கிறேனே?

சாட்டையில்லாப் பம்பரம்

[கே. விஜயராகவன்]

இந்தக் காலத்திலே படித்த ஆண்களும் பெண்களும் கலியாணமான கொஞ்ச நாளுக்கெல்லாம் விவாக ரத்துச் செய்து கொள்ளத் தயங்குவதில்லை. மேல் நாட்டில் தான் புருஷன் சினிமாவுக்கு கூட்டிப் போகா விட்டாலும், வீட்டுக்கு நேரங்கழித்து வந்தாலும், சிரித்துப் பேசா விட்டாலும் உடனே விவாக ரத்துக் கோருவார்கள். ஆண்களும் அப்படித்தான். மனைவி முத்தம் கொடுக்கா விட்டாலும், தான் விரும்பும்பொது டான்ஸ் ஆடா விட்டாலும் விவாக ரத்து செய்து கொள்கிறான். நம்முடைய நாட்டிலும் சிலர் மேல்நாட்டு நாகரிகத்தை அப்படியே காப்பியடிப்பவர்கள், விவாக ரத்து செய்து அதில் பிரமாதமான வெற்றியையும் பெற்றிருக்கிறார்கள் என்று பத்திரிகைகளில் காண்கிறோம். சமீப காலத்தில் கூட தன் புருஷன் மதம் மாறவில்லை என்ற காரணத்துக்காக விவாகரத்து செய்து கொண்டு வெற்றியும் அடைந்தாளாம் ஒரு பெண் மணி.

நம்முடைய சமூகத்தில் சாதாரண வாழ்க்கை நடத்துபவர்கள் விவாக ரத்துச் செய்வது என்று ஏற்பட்டால் அதன் பலனை நினைக்கும் போதே நடுக்கம் எடுக்கிறது. அகாரணமாக மனைவியோடு தினசரி எத்தனை சண்டைகள் போட்டுக் கொள்கிறோம். இல்லை சகதர்மிணிகள் தான் சும்மா இருக்கிறார்களா? வாயைக் கிளறிவிட்டு அற்ப விஷயங்களுக்குக் கூட நம்மை ஆட்டி வைத்து விடுகிறார்களே? விவாகரத்து உரிமை என்னும் ஆயுதம் அவர்கள் கையில் இருந்து விட்டால் ஆஹா! சொல்ல வேண்டியதே இல்லை. நம்முடைய பாடு அதோகதிதான்.

இந்த யுத்தகாலத்திலே அந்த ஆயுதம் மட்டும் நம்முடைய பெண்களிடம் இருந்து விட்டால் இன்னும் ரொம்ப வேடிக்கையாக இருக்கும். ரேஷன் கார்டை எடுத்துக் கொண்டு அரிசிக்கும், விறகுக்கும், ராந்தல் எண்ணைக்கும் தலைகீழாக தெருத் தெருவாக நடக்க வேண்டி இருக்காதா? இல்லை. நம்முடைய கஷ்டத்தைத்தான் அவர்கள் உணர்வார்களா? இன்னும் அவர்கள் விரும்பிய பொருள்கள் வாங்கிக் கொடுக்கா விட்டால் திண்டாடித் திணறிப் போக வேண்டாமா? இந்த உலகமே ஒரு நாடக அரங்கு. அதில் நாமெல்லோரும் நடிகர்கள்.

வாழ்க்கை என்ற பேரால் அதில் பலவிதமான காட்சிகள். மற்றவருடைய வாழ்க்கையின் காட்சிகள் நமக்குப் படிப்பினையாகவும், நம்முடைய வாழ்க்கை பிறருக்குப் படிப்பினையாகவும் அமைகிறது. வாழ்க்கையில் சுகத்தையும் துக்கத்தையும் சமமாகத்தான் அநுபவிக்கிறோம். ஆனல் அதைக் கூட்டவும் குறைக்கவும் வேண்டிய சக்தி நம்மிடம் தான் இருக்கிறது.

எங்கள் கிராமத்தில் ஒரு சாதாரணக் குடும்பம். புருஷன் மனைவி இரண்டு பேர்தான். வயிறு வளர்க்கப் போதுமான நிலம் உண்டு. ஆனல் இரண்டு பேரும் கீரியும் பாம்புமாக இருந்தார்கள். கலியாணமாகி இரண்டு வருஷம்கூட பூர்த்தியாக வில்லை. சுப்பு பிள்ளை ரொம்ப சாது. நல்ல காளைப் பருவம். கோபமே சீக்கிரம் வராது. எப்போதும் சிரித்த முகத்தோடு தான் இருப்பான். குப்பம்மாள் உலகப் பிரசித்தி பெற்றவர்களைப் போல அவள் எங்கள் ஊருக்குப் பிரசித்தி பெற்றவள். அக்கம் பக்கத்து கிராமங்களிலும் பிரசித்தி என்பதாகக் கேள்வி. 'அடங்காப் பிடாரி' என்ற கௌரவமான பட்டம் அவளுக்கு. யாராவது எதிரில் அப்படிச் சொல்லி விட்டால் போச்சு. வந்தது வம்பு.

அவள் சிறுவயதிலிருந்தே பயமறியாது வளர்ந்தவள். கட்டான உடலும், கண்டோரை மயக்கும் கண்களையும் உடையவள். அவளுடைய அழகுக்கு இணை அந்த ஊரிலே இல்லை. அழகுக்கு மட்டுமென்ன, வாய்ப் பேச்சிலும் கூடத் தான். ஆண் பிள்ளைகள் கூட அவளிடம் பேசி வெல்ல முடியாது. வாய்த் துடுக்குக் காரி. வெட்டொன்று துண்டிரண்டுமாகப் பேசுவாள். அவளுடைய சுபாவம் அது என்று சுப்பு பிள்ளை சொல்வான். அவனுக்கு அவளிடம் ரொம்பப் பிரியம். அவளுக்கும் ரொம்ப ஆசைதான். ஆசை இருக்கிறது என்று சும்மா இருப்பாளா? ஓயாமல் அவனோடும் வம்பு பண்ணிக் கொண்டேயிருப்பாள். இல்லாவிட்டால் ஊர்ச் சண்டைகளையாவது விலைக்கு வாங்கிக் கொண்டு வருவாள்.

ஊரிலே எல்லோரும் "அடே சுப்பு பிள்ளை, உம் பொஞ்சாதியை கொஞ்சம் அடக்கி வெக்கிறது தானே? நீ ஆம்பிளே இல்லே?" என்று கேட்பார்கள்.

சுப்பு பிள்ளை சிரித்துக் கொண்டே போய் விடுவான்.

ஒரு சமயம் இந்தக் குடும்பச் சண்டை பிரமாதமாகப் போய் விட்டது. சுப்பு பிள்ளைக்கே அன்று கோபம் வந்து அவளை அடித்துவிட்டான். அவளோடு வாழ்வதில்லை என்று ஒரு பந்துவுடைய வீட்டில் போய் இருந்து கொண்டான். அவளும் இரண்டு நாள் பிகுவாய் இருந்தாள். பிறகு அவளால் சும்மா இருக்க முடியவில்லை. ஊர்ப் பெரியவர்களையெல்லாம் கூட்டி வைத்து பஞ்சாயத்து நடந்தது. கடைசியில்

அவளே வெற்றி பெற்ருள். சுப்பு பிள்ளையை வீட்டில் கொண்டு வந்து உட்கார வைத்து விட்டாள். வழக்கம் போல் குடித்தனம் நடந்து வந்தது.

இன்னெரு சமயம் சுப்பு பிள்ளைக்கு அபாரமான கோபம் வந்து விட்டது. சண்டை வீட்டோடு இருந்தால் சும்மா இருப்பான். வெளியிலிருந்து தினம் இரண்டு மூன்று சண்டைகளை விலைக்கு வாங்கிஞல் அதற்கு யார் சமாதானப்படுத்துவது?

"சுப்பு, நீ கொடுக்கற எடம். உன்னேட தைரியத்திலே தாண்டா அவ ஆட்டம் போடரா? சாட்டை இல்லாமே பம்பரம் ஆடுமா? சொல்லு" என்று கிளப்பி விட்டார்கள். வழக்கத்தை விட அன்று வீட்டுச் சண்டை பலமாகத்தான் இருந்தது. பேச்சுக்களும் கொஞ்சம் காரசாரமாகப் போய் விட்டது. சுப்பு பிள்ளைக்கு என்றுமில்லாத கோபம் அன்று வந்து விட்டது. அவ்வளவு கோபத்திலும் அவளைத் தொட்டு அடிக்கவில்லை.

"என்னடி சிறுக்கி! என்னைக் கண்டுதானே இந்த ஆட்டம் போடறே. உன்னேட சொக்கையெல்லாம் அடக்கிப் பிடறேன் பாரு" என்பதுதான் அவன் கடைசியாகச் சொன்ன வார்த்தை.

இன்ரேடு இரண்டு மாதங்கள் ஆகிறது. சுப்பு பிள்ளை விலாசம் தெரியவில்லை. சிலர் அவன் பட்டாளத்தில் சேர்ந்து கொண்டதாகச் சொல்லுகிருர்கள். இல்லை, அவன் சன்யாசியாகப் போய் விட்டான் இனித் திரும்பி வரமாட்டான் என்றும் சொல்லுகிருர்கள். ஆனல் இனி அவன் திரும்பி வந்தால் கண்டிப்பாக அவளை விட்டுப் போக மாட்டான். உண்மையாகவே இந்தத் தடவை அவள் 'சொக்கு' அடங்கி விட்டது. காரணம் என்ன? அவளைச் சுற்றி இருந்த ஒரு அரண் (பாதுகாப்பு) இப்போது அற்றுப் போனதை உணர்ந்தாள். ஊராருடைய ஏசுதலை அவளால் தடுக்கவும் முடியவில்லை. சகிக்கவும் முடியவில்லை.

இப்போது அவள் யாரோடும் வம்பு பேசுவது கிடையாது. சாந்த சொரூபியாகி விட்டாள். 'சாட்டையில்லாப் பம்பரம்' என்று சொல்வார்களே அந்த மாதிரி அவளுடைய துடுக்கும், வெடுவெடுப்பான பேச்சும், ஆட்டமும் மறைந்து விட்டது. அவளுடைய போக்கைக் கண்டு ஊரே அதிசயப் படுகிறது. காலை நேரத்தில் குளத்தில் நீராடி விட்டு, அவள் ஈரப் புடவையோடு வருங் கோலத்தைக் கண்டால், 'ஒரு பால சன்யாசினி' அல்லது எங்கள் கிராமத் தேவதை என்றே சொல்லத் தோன்றும். சுப்பு பிள்ளை என்றைக்காவது திரும்பி வருவான் என்ற நம்பிக்கையோடு தான் அவள் தினந்தோறும் அதிகாலையில் பிள்ளையாரைப் பூஜிக்கிருள். பிள்ளையார்

சத்தியுள்ள சாமிதான்! எனக்குக் கூட தெய்வங்களிடம் நம்பிக்கை யில்லாமல் இருந்தது. ஆனால் பிள்ளையார்கண் திறந்ததைக் காண இப்போது கொஞ்சம் நம்பிக்கை ஏற்படுகிறது!

போன ஆசாமி நேற்றுத் திரும்பி வந்து விட்டான். குற்றாலத்திற்குத்தான் போனான். அருவியின் சுகத்தை அனுபவிப்பதற்கல்ல. பெரிய முழுக்காக போட்டு விடலாம் என்பதே அவன் முதல் முடிவு. ஆனால் எண்ணத்தை மாற்றிக் கொள்ளும்படி ஒரு காரியம் நடந்தது. அருவியில் குளித்து விட்டு ஒரு பக்தர்,

சாட்டி நிற்கும் அண்டமெலாம்
சாட்டை யில்லாப் பம்பரம் போல்
ஆட்டி வைக்கும் குற்றாலத்து
அண்ணலார்

என்று உள்ளமுருகப் பாடிக் கொண்டு போனார். பாட்டு இவனைப் பரவசப் படுத்தி விட்டது. எப்படியோ தேடிப் பிடித்து அந்தப் பாட்டுள்ள புத்தகத்தை வாங்கிக் கொண்டு ஊருக்குத் திரும்பினான். ஆனால் ஊரிலே அவன் கண்ட காட்சி என்ன? மனைவியின் மனசை மாற்ற வேறு மருந்தே தேவையாக இருக்கவில்லையா? பழைய வம்பு தும்பு எங்கே? இப்போதைய அடக்க ஒடுக்கம் என்ன?

பழையபடி தன் மனைவி சண்டை போட்டால் தான் வாழ்வில் ருசி ஏற்படும் போல் இருந்தது. பிள்ளையார் அருள் புரிய மாட்டாரா என்று ஏங்கினான். மனைவியிடமே, "போடு, நீ எத்தனை சண்டைப் போட்டாலும் அதுவே எனக்கு ஆனந்தம்!" என்றான்.

மீண்டும் அவர்கள் வாழ்க்கை வண்டி பழைய பாதையிலே ஓடத் தலைப்பட்டது!

பெண் கொலை!

(அ. கிருஷ்ணமூர்த்தி)

பெண்! — இது மனதிற்குக் கனிவைத் தருகிற ஒரு சொல் — ஒரு ஓசை. கொலை! — இது நெஞ்சுக்கு நடுக்கந் தருகிறது. பெண் கொலை! — கனிவுக்கு இருப்பிடமான பெண்ணைக், கொடுமைக்கு இருப்பிடமான வாளால் கொலை செய்வதா? வெட்டுவதா? ஆ! இது என்ன கொடுமை!! என்ன துணிகரம்? யார் இதைச் செய்வது? மனிதன் தானா? அல்லது விலங்கின் பிறவியா? என்று யாரும் கேட்பார்கள்.

திடுமென்று பொங்கிவருகிற கோப வெறியில் இது நடந்ததா? இல்லை. ஒரு நாடோடி, ஒரு முரடன், ஒரு குடியன், ஒரு வெறியன், ஒரு கள்ளன் — இதைச் செய்தால், நமக்கு அதில் வியப்பு கிடையாது, அச்சந் தவிர! ஆனால், நன்கு ஆராய்ந்த பிறகு, வாதாடிய பிறகு, ஒரு பெரிய காரியத்திற்காகவல்ல — ஒரு சிறிய செய்திக்காக; ஒரு வெறியனல்ல — ஒரு அரசன்; இதை — இந்தக் கொலையைச் செய்திருந்தால், அதைக் கட்டாயமாக மற்றவர் அறிய விரும்புவது இயற்கை தானே? சரித்திரச் சான்றுகளை நம்பினால், நான் சொல்லுவது கதையுமல்ல, உண்மையில் நடந்த நிகழ்ச்சி (கற்பனை நீங்கலாக)

ஒரு சிறிய மலைநாடு; தமிழகத்தின் வடமேற்கில்; பெயர் கொண்கானம் என்பது. அந்நாட்டைப் பலநல்ல அரசர்கள் ஆண்டிருக்கின்றனர். ஆனாலும் ஒரு அரசன் கொடியவனாக இருப்பது நடக்காத காரியமா? நல்ல பூஞ்செடிக்குப் பக்கமாகச் சில புல்லுருவி முளைப்பது வழக்கந்தானே! குமணன் ஒரு வள்ளல், அவனுக்கு வாய்த்தானே ஒரு தம்பி, (அயலான் கூட அல்ல) கூடப் பிறந்தவன், இளங் குமணன் — பெயர் அழகாக இருக்கிறது, இல்லை? — அம்மாதிரி, கொண்கானத்து அரச குடியிலே தோன்றினான் ஒருவன். பெயர் நன்னன்.

நன்னன் — நன்றாகத்தான் இருக்கிறது! கடிக்காத பாம்பு தண்ணீர்ப் பாம்பு, கடிப்பதற்குப் பெயர் நல்ல பாம்பு — உலகம் பெயர் வைக்கிற முறை என்ன பொருத்தமாக இருக்கிறது!

அந்த நாளைய வழக்கம் ஒன்று உண்டு. ஒவ்வொரு அரசனும் தன் உயிர் போல ஒவ்வொரு மரத்தை வைத்துப் பாதுகாப்பது வழக்கம். பாண்டியனுக்கு வேம்பு, சோழனுக்கு ஆத்தி, சிலருக்குக் கடம்பு; அம்மாதிரி நன்னனுக்கு மாமரம், முன்னோர் வழிவழியாக வைத்து வளர்த்து வரும் மரமாக இருந்தது. இதன் காவல் எப்படி? கோட்டையை விடக் கடுமையாக இருக்கும். இதற்குப் பெயரே "காவல் மரம்" என்பது. அதன் பூக்களை மாலையாகத் தொடுத்து மன்னன் அணிந்து கொள்வான். பகை வேந்தர் படையெடுத்து வந்து, நாட்டில் புகுந்து, மதிலை யிடித்து, நகரில் நுழைந்து காவலைக் கடந்து இம்மரத்தை வெட்டினால், அதற்குரிய அரசன், தோற்றான் அல்லது ஒழிந்தான், என்பதே பொருள். வெற்றியடைந்த மன்னன், அதைத் துண்டு துண்டாக வெட்டி, வெற்றி முரசம் செய்து, வீர விழாக் கொண்டாடுவது வழக்கம்.

இவ்வளவு சிறப்பிருக்குமானல், இம்மரத்தை எவ்வளவு கடுமை யாகக் காவல் செய்திருக்க வேண்டும்?

அந்த மாமரம் இருந்த தோட்டம் ஆற்றங் கரையோரம். மல்லிகை, முல்லை, மயிலை, செண்பகம்; இன்னும் மாதவி, இருவாட்சி, மருக்கொழுந்து முதலிய செடி கொடிகளும் அங்கே உண்டு. இவை மட்டுமா? தழையும் பூவும் காயும் கனியுமாக இனிமையே குடிகொண்ட ஒரு தோட்டம் அது. இருந்தாலும் அரசனுடைய ஆணை என்ன தெரியுமா? தோட்டத்துக் காயை — கனியை, யாரேனும் எடுத்தால், கொடுத்துவிட வேண்டும் உடனே; தின்றால், அவர்கள் உயிரைத் தின்று விடும், அவன் ஆணை — ஆணையின் வாள்!

இளவேனிற் காலம், தென்றல் வீசி, இனிமையாக விளங்குகிற காலம். ஒரு நாள் காலை நேரம். சூரிய ஒளியில், மலைகள், அடுக்கடுக்காக — மேடும் பள்ளமுமாக — வரிசை வரிசையாக, அழகை அள்ளி வீசிக் கொண்டிருக்கின்றன. அவற்றின் மேல், பஞ்சு பரப்பியது போல், படிந்திருக்கிற பனியும், மேகமும் சிறிது சிறிதாகக் கலைகின்றன. பல திசையிலும் சிறிய சிறிய அருவிகள் சலசல வென்று ஓடி வளைந்து விழுகின்றன. ஒரு சிறிய ஆறு, தத்தி விழுந்து, அலைகளை மோதி, ஓடி வருகிறது. மலையிலே ஓடி வருகின்ற ஆற்றின் அழகை எழுத்தால் எழுத முடியுமா? இன்னும், சூரிய ஒளி, தென்றல் மணம், அருவியின் அழகு, ஆற்றின் காட்சி, காலை நேரம் — எல்லாம், ஒரு மலை நாட்டிலே, அதுவும், நாட்டின் தலைநகரத்தில் — இளவேனிற் காலத்தில் ஒன்றாகக் கலந்து கொண்டால், அந்த அழகின் அருமையை, இன்பத்தின் பெருமையை நான் இச்சிறிய கட்டுரையில் எப்படி வருணிப்பேன்?

வழக்கம் போல, ஒரு நாள் காலையில் ஆற்றிலே நகரத்து மகளிர் நீராட வருகின்றனர், தண்ணீர்க் குடமும் கையுமாக நடந்து செல்லும் மகளிர் சிலர். சிலர், சந்தனம், அகில், வகை வகையான பூக்கள், தைலம், வாசனைப் பொடி முதலான நறுமணங் கமழும் வாசனைப் பொருள்களை ஏந்திச் செல்லுகின்றனர். தங்கள் தங்கள் காதலரோடு, காதலியரும் நீராடப் போகிறார்கள். மற்றும், இளைஞர்களும், பரத்தையரும் ஒரு பக்கம் போகிறார்கள். இவை, அக்காலத்து வழக்கம்.

ஆறு, காலை நேரத்தில் ஓடிவரும் அழகைப் பார்க்கப் பார்க்க அவர்கள் உள்ளத்திலும் அந்த ஆறு போலவே பெருகி வருகின்றது, அடங்காத மகிழ்ச்சி. பக்கத்துச் சோலைகளிலிருந்து தேனும் பூவும் சிந்திச் சிந்தி ஆற்றிலே மிதந்து வருகின்றன. தண்ணீர் நன்கு தெளிந்து நறுமணம் வீசுகிறது. கரையோரமெல்லாம், சோலையின் நிழல், பளிங்கு போல் தெரிகிறது. அந்த ஆற்றை வரவேற்பது போல இரண்டு கையாலும் தாவிப் பாய்கிறார்கள் ஆற்று நீரில். காதலர் நீராடுகின்ற காட்சி ஒரு பக்கம். மங்கையர்கள் தமது தோழிமாரோடு ஆங்காங்கு விளையாடும் அழகு ஒரு பக்கம். தண்ணீருக்குள் மூழ்கினர், எழுந்தனர், ஒருவர் கையை ஒருவர் பிடித்து இழுத்தனர். தண்ணீரை வாரி இறைத்தனர். ஆடையைத் திருத்தினர். மிதந்து வரும் பூக்களை ஒருவருக் கொருவர் சூட்டினர். தவ்வினர், தாவினர், நீந்தினர். கூந்தல் விரிந்து தண்ணீரோடு தவழ்ந்து மிதந்தது, தோகை விரித்து மயில்கள் கிடந்து மிதப்பது போல் இருந்தது. 'ஐயோ!'

தண்ணீர் இழுக்கிறது, அடீ! என் கையைப் பிடி! என்று ஏமாற்று வர் சிலர். நீ முந்தியா, இல்லே, நான் தான் முந்தி என்று நீந்துவர் சிலர். எவ்வளவு நாழியடி குளிப் பது? அம்மா அதட்டுவாள் என்று அழைப்பார் சிலர். கண் சிவந்து விட்டது என்று 'கரையேறுவார் சிலர். வெள்ளத்தில் ஓடியாடி விளையாடியதால், அவர் உடம் பிலே ஒரு தனியழகு. இவர்கள் ஆடுவதோ, அந்த ஆற்றின் இயற் கை அழகுக்குமேல், ஒரு புது அழ கைக் கொடுத்தது.

மங்கை ஒருத்தி, அடியே, ஒரு பெரிய காய் வருகிறதடி ; அதைப் பிடி! பிடி !! என்று தண்ணீரை விலக்கிப் பிளந்து கொண்டு முந்தி முந்தி ஓடினள். அலேமோதிய வேகத்தில், அந்தக் காயும் அவள் கையில் அகப்பட்டது. யாருடை யது அது? எங்கிருந்து வருகிறது? அதை என்ன செய்ய வேண்டும்? என்பதை அவள் அறியாள். காயைக் கடித்துக் கடித்துத் தின் பாள் ; தண்ணீரையும் சிறிது குடித்துக் கொள்வாள் ; தோழிக் கும் கொடுப்பாள் ; கொடுப்பது போல் பாவனே பண்ணி ஏமாற்ற வும் செய்வாள். பரிகாசம் வேறு; எப்படியோ தின்ருகி விட்டது. அது அவள் உயிரைத் தின்று விடும் என்பதை அவள் அறியவில்லே. பாவம்! சிறுமி; பெண்; இளம் பெண்! பேதை !!

தோழிமாரும் தானுமாகத் தண் ணீரிலிருந்து கரையேறினள். கூந் தலே முறுக்கிப் பிழிந்துப் பூமுடித் துப், பாட்டும் விளையாட்டுமாக வந்து சேர்ந்தாள் வீட்டிற்கு. பட்டாடை உடுத்தி, அணிகளேத் திருத்திப், பொட்டிட்டு, உணவும் சிறிது உண்டு, வேடிக்கை விளே யாட்டாக இருக்கின்றவளேத் தாய் தன் அருகே அழைத்து, "நீராடப் போனல், இவ்வளவு நாழியா?" என்று சொல்லிக் கொண்டே, அவள் கூந்தலே அவிழ்த்துத் தட்டி உதறிச் சிக்கல் போக்கினள். தோழி ஒருத்தி அவள் கூந்தலுக்கு அகிற் புகை யூட்டினள். இன் னெருத்தி மயிர்ச் சாந்து பூசினள் ; அணிகளேப் பூட்டினள். ஒருத்தி, அவளுக்குச் சடை போட்டாள் ; பூ வைத்தாள். இன்னெருத்தி சந்தனம் பூசினள். இவ்வளவு நகையும் பூவும் நான் எப்படிச் சுமப்பது? எனக்கு அழகு பண்ண இவ்வளவு பேரா? என்று விரும் பாதவள் போல் சிறிது கோணல் மாணல் செய்தாள்.

"நாங்கள் அழகு செய்தால், அது உனக்குப் பிடிக்குமா?" என்ருள் ஒருத்தி, பரிகாசமாக! "உன் அழகுக்கு விலேயுண்டா? போய்ப் பார்! அதோ, கண்ணு டியில்" என்ருள் வேருெருத்தி. "போடி, பைத்தியம்! உனக்கு என்னடி வேறுவேலே" என்று அவள் வாயை அடக்க முயன் ருள் இவள்.

அதற்குள் ஒருத்தி, "ஆமாம்! அவள் அழகை அவளே பார்த்துக் கொள்வதா? மல்லிகை மணத்தை மல்லிகையே நுகருமா?" என்ருள் வேடிக்கையாக.

"அது சரிதான், அவள் மட்டும் பார்த்துக் கொண்டால், அது நன் ருகவா யிருக்கும்? நாளைக்கு......" என்று குத்தலாகத் தொடங் கினள், பக்கத்தி லிருந்தவள். "போடி! என்னடி நாளைக்கு? என்ன சொன்னலும் என் வாயைப் பிடுங்குவதுதான் இவள் வேலே" என்று இவள் இடை மறித்தாள். பிறகு, சரி, பேசியது போதும்; வாருங்கடி, அம்மானே யாடலாம் என்ருள்.

"இல்லே, வேறு ஏதாவது விளே யாடுவோம் ; பந்தடிப் போமா?"

"பாடிக் கொண்டே ஊஞ்ச

லாடுவோம், இல்லா விட்டால், பல்லாங்குழி!''

“சரி, ஒவ்வொன்றும் கொஞ்சங் கொஞ்சம் விளையாடுவோம். ஆனால் பந்தடிக்க நான் வரமாட்டேன். உடம்பு ஒரு விதமாக இருக்கிறது. முதலில், அம்மானை; பிறகு, பல்லாங்குழி; பிறகு, ஊஞ்சல்,...........ஆடலாமா?''

'வாருங்கள்; போவோம்.'

சிறிது நேரத்தில், பெண்ணின் தந்தை ஓடோடியும் வருகிறார். அவர் சுற்றத்தாரும், மற்றவரும் வருகிறார்கள். அவர்களுக்கு ஒன்றும் புரிய வில்லை. வீட்டு வாயிலில் காவலர். அரசன் கட்டளை. பெண், கொலை! செய்தி இவ்வளவு தான்! பெண்ணின் தாயிடம் போனார்கள். அரசன் "நீதியை" அவளுக்கு எப்படிச் சொல்லுவது? நாக்குத் தடுமாறுகிறது. பெண்ணுக்குத் தெரிந்தால்.........என்று, ஒரு ஆழமான ஏக்கம்! ஒரே பெரு மூச்சு!! செய்தியும் அரை குறையாக வெளியாயிற்று.

இது கேட்டதும், பெண்ணின் தாய் வயிறு எப்படிப் பதறியதோ, எனக்குத் தெரியாது. அவர்கள் என்ன நினைத்தார்களோ, அரசனிடம் ஓடினார்கள்.

இது வரையில் பெண்ணுக்குத் தெரியாமல் இருக்குமா? அவளிடம் பறந்தனர், தோழிமார் நெஞ்சு படக் படக் என்றது. அவர்கள் முகம் செத்து விட்டது. அவர்கள் கண்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாகப் பேசுகிறது. அடியற்ற மரம் போல விழுந்தனர் சிலர். எல்லாம் துக்கமயம்! பெண்ணிற்கு ஒன்றும் புரிய வில்லை. என்ன? என்ன? என்று பதைபதைப்போடு கேட்கிறாள். இந்தச் செய்தியை, அதுவும், அவளிடம், யார் வாய் விட்டுச் சொல்வது? அவள் அழுகையே பார்க்கிறார்கள்! ஒரே பரிதாபமாக இருக்கிறது; ஏதோ தன்னைப் பற்றிய ஒரு செய்திதான்! அதை அவள் அறிந்து கொண்டாள். செய்தியின் கொடுமையை விட, அதுவும் தன்னைப் பற்றி என்று தெரிந்து கொண்டு, மற்றவை புரியாமல், அவள் தவிக்கிற துயரம் பார்க்கப் பொறுக்க முடியவில்லை. ஒருத்தி, "அரசன்" என்று தொடங்கினாள்; அதற்குள் அவள் தொண்டை அடைத்தது. இன்னொருத்தி "காயை" நினைப்பூட்டிக் கொலை என்று சொல்லிக் கொண்டே, அலறி வீழ்ந்தாள். பிறகு ஒருத்தி தட்டுத் தடுமாறி முழுச் செய்தியும் கக்கி விட்டாள்.

இது கேட்டாள்; தன் தாயிடம் ஓட அடி எடுத்தாள். எதற்காகவோ தெரியாது. அதற்குள் நெஞ்சு பகீர் என்றது. இங்கே புலம்பலுக்கு எது இடம்? இது பிறரைப் பற்றியதல்ல; தப்ப வழியில்லை; இயற்கைச் சாவுமல்ல கிறுகிறுப்பு; என்ன நினைத்ததோ! இருட்டாகவே தெரிந்தது எங்கும்; ஒரே மூர்ச்சை. கிளி ஒன்று கீழே விழுந்தது, சிறகு அறுந்து.

இரண்டொரு தோழியர் அவளைத் தாங்கிப் பிடித்தனர். தோழியர் புலம்பல், தாயின் பதறல், வீடெங்கும் அழுகைமயம்! ஊரார் பலர் வீட்டிற்கு வருவதும் போவதுமாக இருக்கிறார்.

அரசனிடம் ஓடியவர்கள், (அழுகை ஒரு பக்கம்; அச்சம் ஒரு பக்கம்) "அரசே! மன்னித்தருள வேண்டுமென்று மன்றாடினர். பெண்ணைக் காப்பாற்ற வேண்டுமென்று கெஞ்சினர். அவர்கள் நெஞ்சு படபடத்தது. அவள் உயிரை மீட்டுத்தர, உன்னை விட்டால், வேறு யார் இருக்கிறார்கள்? குடிகள் உயிரெல்லாம் உன்னுடையது. அவள் உயிர் உனக்கு

அடைக்கலம். அரசே! அவள் உயிருக்கு இடாக, நான் அறுபது எழுபது—இல்லே, இன்னும் மேலாக எண்பத்தொரு யானே களேத் தருகிறேன். மன்னவனே, அவள் எடைக்குக் குறையாமல், உயர்ந்த தங்கத்திஞல் செய்து, தங்கப் பதுமை — பெண் பாவையை உனக்குத் தருகிறேன்; நீ அருள வேண்டும். வேந்தே, இது உயிர்ப் பிச்சை; என் கண்ணுள்; என் ஒரே பெண்; கன்னியின் உயிர்; கன்னியின் உயிர்'' என்று கெஞ்சி முறையிட்டு, வணங்கினன்; எல்லோரும் வணங்கினர்கள்.

அரசனிடமிருந்து பிறந்தது ஒரு குரல்; ஓங்கிய முறையில், "அவளுடைய அறியாமை; அது ஒரு காரணமல்ல; மன்னிப்பா, அது கிடையாது; அவள் பண்ணிய குற்றத்திற்கு! — குற்றத்திற்கு ஆணென்ன? பெண்ணென்ன? எனது ஆணை, அவள் கொலேக்குரியவள். என் வாளுக்கு அவள் இரைதான். சொன்ன சொல் — அதற்கு மாற்று கிடையாது. விரைந்து நடக்கட்டும் கொலே!''

அவைக்களம் முன்பே அரசனுக்கு எடுத்துச் சொல்லாத சேதி கிடையாது. அவன் காது கேட்கவில்லே. கொலே! மறுபடியும் அதே முடிவு! அவன் மீது ஆத்திரம் பொங்கிற்று; ஆனல் அடங்கியிருந்தனர். சிலர் அஞ்சினர், கோழைகள்! சிலர் காலம் பார்த்தனர்; ஏன்? அரசனுக்குப் பகையாகவா? ஆம்! இந்த முறையீடு எப்படி அவர்கள் நெஞ்சை உருக்காமல் இருக்க முடியும்? ஒரு வாதத்தின் சக்தி, அதன் உண்மையைப் பொறுத்தது தானே? எந்தப் புறம் இருக்கிறது, உண்மை, நியாயம், அதன் வலிமை? .... நினேயுங்கள்!

வழக்காடியவர் கதி என்ன? முடிவு கேட்டதும், இடிமேல் இடி விழுந்தது போல் ஆயிற்று. திடுக்கிட்டுத் திகைத்தனர். பேசுவதற்கு என்ன இருக்கிறது? ஒரே நெஞ்சடைப்பு! அவர்கள் வெளி வந்ததும் தெரியாது; வீடு வந்ததும் தெரியாது; அவர்கள் ஆவிதான் அவர்களேத் தள்ளிக் கொண்டு வந்தது.

பெண்ணே எப்படி வீரரிடம் ஒப்படைப்பது? ஊர்ப் பெண்கள், தோழிமார், தாய், உறவினர் அடித்து மோதி அலறுகிருர்கள், இறந்த உடலுக்காக அல்ல; இருக்கிற உயிருக்காக! அது பறக்கப் போகிறதே என்று. பாவம்! அவர்கள் நெஞ்சு சிறியது தானே! அது எதைத்தான் நினேக்கும்! எவ்வளவு நினேக்கும்? அவ்ள் அருமையை நினேக்குமா? அழகை நினேக்குமா? அல்ல, அல்ல; அவள் கன்னி, மங்கை — மணமாகாதவள்! —இதை நினேக்குமா? ஆ! அவள் உயிர் என்ன தவிதவிக்கும்? என்று ஒரு நினேப்பு; "ஐயோ! அவள் ஒரே பெண் ஒரு தாய்க்கு'' — எதை நினேப்பது? "கொடுங்கோல் — கொலே'' — இந்த ஓசை அடி பட்டுக் கொண்டே யிருக்கிறது காதில், தாளுக! இந்தப் புலம்பலே — கண்ணீரால் எழுத வேண்டுவதை, எப்படி எழுத்தால் எழுதுவது? பதறுகின்ற நெஞ்சுக்கு, அடைத்து அடைத்து வருகிற அழுகைக்குச் சொல்லும் உண்டோ எழுதுவதற்கு? பார்க்கவே கண்ணிருக்காதே!

கொலே தானே? ஏற்றுக் கொள்வோம்; என்ன உயிர்! என்றைக்கும் ஓடப் போகிறது! இவன் மன்னவனு? பேடி! "பெண் கொலே!'' இதற்காகவா அவன் வாள்? நாடறியட்டும் அவனே! இந்தக் கொடுங் கோல் என்னேடு ஒழிவதாக! என்ன இது பெரிது; ஏற்கிறேன் இந்தச்

சாவை! என்று அவள் நினைக்க முடியுமா? அவள் ஒரு இளம் பெண். ஆண் மகனா, வீரனா? அல்ல. சாவை அவள் எதிர்பார்த்தாளா? இல்லை; வேண்டுமென்றே செய்த குற்றமா? அதுவுமில்லை; துணிவு எப்படி உண்டாகும் பின்னே!

அவள் ஆவி உள்ளே இருக்கிறதா? வெளியில் போய்விட்டதா? அது அவளுக்கே தெரியாது. காலையில் ஆற்று வெள்ளத்தில் ஆடினாள். இப்பொழுது இரத்த வெள்ளத்தில் ஆடப் போகிறாள். அவள் காலையில் செய்துகொண்ட அழகெல்லாம் என்னாயிற்று? சிவந்த இரத்தத்தில் சிந்தப் போகிறது. வீட்டில் ஓடியாடிய கால், கொலைக் களத்திற்கு நடக்கிறது. வீட்டை விட்டு எப்படி வெளியேறுவது? மணமாகாத ஒரு பெண்ணிற்கு அதிக ஆசை வீட்டைவிட வேறு எங்கிருக்க முடியும்? அவள் நிலை அவளுக்கே புரியவில்லை. இன்பமும் துன்பமும் ஒரு அளவில் இருந்தால் தானே அறிவும் வேலை செய்யும்; தலைக்கு மேல் போனயிறகு? பாவம்! திரும்புகிறாள்; தாயைப் பார்க்கிறாள்; தந்தையைப் பார்க்கிறாள்; தோழியரைப் பார்க்கிறாள்; பார்த்துச் செய்வதென்ன? தப்ப முடியுமா? அவள் உயிர் சிறிது சிறிதாகத் தேய்கிறது. அவள் ஆவி வீட்டிலேயே தங்கி விட்டது. திரும்பி வராத இடத்திற்குப் போகிறாள், நடக்கக் கால் வருமா? மெல்ல மெல்ல நடந்தாள். அவள் நடக்கவில்லை; அவள் கூடுதான் நகர்ந்தது. அவளும் நகர்ந்தாள், அந்த நகரமே நகர்ந்தது. கண் அங்குமிங்கும் பார்க்கிறது, ஆனால் எதைப் பார்க்கிறது என்பதை நான் எப்படிச் சொல்வேன். எதையோ பார்க்கிறது? எங்கே போகிறாள்? தெரியாது.

எண்பத்தொரு யானையும் த... பதுமையையும் பெறக்கூட ... த்து விட்டானா மன்னன்? என... மமதை! என்ன கொடுமை... என்று நடுங்குவார் சிலர்.

வீட்டில் செல்லமாக வளர்... தவள்; அழகி; மங்கை; அரசன் அவளை ம...னப்பதற்குக் கூடத் தகுதியுண்டே! மணந்தால் அரசனுக்கு அவள் அரசியல்லவா? அது மட்டுமா? அவன் மன்னர் மன்னனா இருந்தாலென்ன? அந்தப்புரத்தில் அவ்ள் காலில் இவனல்லவா விழ வேண்டும்! என்பார் சிலர்.

என்ன ஒரு மாங்காய்க்கு ஒரு மங்கை பலியா? நீதியில்லையா இந்நாட்டில்? அரசனுக்கு இனி, அழிவுதான்! பாவி! என்பார் சிலர்.

இவளை வெட்டப் போகிறார்களே, நம்மகளை. வெட்டினால் நமக்கு எப்படியிருக்கும்? என்று திகைப்போர் சிலர்.

"சொல்லாதே அந்தக் கதையை, எனக்கு அழுகை வருகிறது."

"அந்தக் காட்சியை நான் பார்க்க மாட்டேன், கண் கூசுகிறது; அட! பகீர் என்கிறது நினைத்தால்."

"இந்தக் கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டில் கடும் புலி வாழும் காடு நல்லதாயிற்றே"

"இந்த மதிகெட்ட மந்திரிமார் என்ன செய்கின்றனர்? அரண்மனை என்ன எமனுலகமா? அறிவு சொல்ல அங்கு ஆருமில்லையா? ஐயையோ!"

"என்ன அழகு! இளமை திரண்ட உருவம்!! இவள் துயரம் பார்க்கப் பொறுக்கவில்லை; அரசன் அறிவு அரசனுக்கு இருக்கிறதா? இல்லை, பித்தனாகிவிட்டானா?

அடை கினும் கடையன், மடை உயிரு; இவன் மன்னவனும், இருக் எ பூடும் என்று நெஞ்சு எரிகின் மே னர் சில இளைஞர்."

கலே தாய் தந்தையரோ குற்றுயி ஆாகச் சோர்ந்து விழுந்தனர்.

இப்படி நகரமெங்கும் பலப்பல விதமாகப் பரபரப்பு, துக்கம், கொந்தளிப்பு! எல்லோரும் கும் பல் கும்பலாக அங்கங்கே நின்று விட்டனர், சிலர் தவிர.

கொலைக்களத்திற்கு வந்து சேர்ந் தாள்; வீரர்களுக்கோ மனமில்லை; அவளை மறுபடி மறுபடிப் பார்க் கிருர்கள். அவளோ, ஒன்றுமறி யாத ஆடுபோல, ஒரு கிளிபோல, ஒரு பசுங்கன்று போல நிற்கிருள். கண்ணீர் மாலை மாலையாக வழி கிறது. அம்மா அப்பா என்று அவள் வாய் முணவுகிறது. இவை அவளுக்குத்தான் காதில் விழும். இந்த வார்த்தைகள் என்ன செய்யும்? இனி அவளுக்கு இந்த உலகமில்லை. கம்பலை, மயக்கம், கிறுகிறுப்பு, சோர்வு — எல்லா வற்றையும் அவள் முகம் காட்டு கிறது. கண்ணைச் சிறிது தேய்த் துப் பலி பீடத்தையும், வாளையும் பார்க்கிருள். "ஐயோ, நான் மாட்டேன்" என்பது போல அவள் உதடு அசைகிறது; இல்லை, துடிக்கிறது. செருமுகிருள். நெஞ்சு விம்முகிறது. அவள் கூந் தலை அள்ளி முடிப்பதற்கு யாரு மில்லை. எல்லோரும் பின் தாங்கி விட்டனர்; பார்க்கப் பயந்து கொண்டு. காலோ தளர்ந்து விட் டது. திடுமென்று சாய்ந்தாள் பலி பீடத்தில். குற்றுயிர் மட்டும் இருந்திருக்கக் கூடும். பனையின் நுங்கு — வாளையின் குருத்து, பலி பீடத்தில் வைத்தது போல் இருந்தது.

அசரீரி தோன்றுமோ என்று நினைத்தேன்; வாளுக்குப் பதி லாகக் கழுத்தில் மாலை விழுமோ என்று கருதினேன். கடவுளே தோன்றுவார் என்றும் எண்ணி னேன். சூரியன் நன்கு காய்ந் தான். என் மனம் ஒரு நிலையில் இல்லை; ஆனாலும், அறிவு நன்ரு கத்தான் இருந்தது. பழைய பிறப்பில் பெரிய தீவினையைச் செய்தவளோ, என்னவோ, அங்கு கடவுள், மாலை, கிலை ஒன்றும் வரவில்லை! காது தெளிவாகத்தான் இருந்தது; அசரீரி கேட்க வில்லை! ஒருகால் இவளுக்கு நளாயினி, சந்திரமதி, தமயந்தி மாதிரி ஒரு பேர் இல்லாத காரணமோ என்றும் நினைத்தேன். நான் மட்டுமா? எவ்வளவோ பேர், "அரசனுக்குத்தான் கண்ணில்லை; கடவுளுக்குமா கண்ணில்லை?" என்று எம்பெருமானைக் கண்டித் தனர். எனக்கும் அவர்மீது கோ பந் தான்! வயது முதிர்ந்தவரும், சில கையாலாகாதவரும் சொல் வது போலக், "கடவுளுக்குக் கண்ணிருந்தால், இதைப் பார்க்கப் படாதா?" என்று நான் நடுங்கி எண்ணுகிற நேரம்.........,

வாளை ஓங்கினர் வீரர். அவள் "தலை குனிந்தாள் கத்தியின் கீழ்!" என் கண் கூசிற்று; கண் சிம் புளித்து விட்டது.

[நமது நாட்டில் இம்மாதிரி கொடுங்கோல் மன்னரும் இருந் தார்களா என்று நண்பர்கள் வியப்படையலாம். ஆனல், இதை விடப் பெரிய கொடுங்கோலை யையும் சரித்திரத்தில் படித்திருக் கிருேம். காய் ஒன்றுக்காக ஒரு பெண்ணை மன்னன் கொலை செய் தான என்று சந்தேகப் படலாம். எனக்கும் அதுதான் புதிராக இருக்கிறது. ஆனாலும், நான் சொன்ன கதையின் முக்கிய குறிப்புகள் மட்டும், மிகத் தெளி வாகச் சங்க நூலில் இருக் கின்றன.]

புத்தக ஆராய்ச்சி

•

[அற்புத ரசம்: ஆசிரியர்: டி. கே. சிதம்பரநாத முதலியார். பிரசுரம்; புதுமலர் நிலையம், கோயமுத்தூர். விலை அணு 6. விற்பனை உரிமையாளர்: கிராம ஊழியன் பிரஸ் லிமிடெட், துறையூர், திருச்சி.]

எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் தமக்கே அமைந்த சொந்தமான இனிய தேன் ததும்பும் நடையில் டி. கே. சி அவர்கள் துப்புறவாக விளக்கி ரசிகர்களை ஆனந்தமாக அனுபவிக்கச் செய்வது வழக்கம். அதே மாதிரி அற்புத ரசம் இன்னது என்பதை அருமையாக உணரும்படி செய்திருக்கிருர்கள். அது மட்டுமா? மற்ற கலைகளிலும் திருத்தமான ஈடுபாடு உண்டாவதற்கு ஏற்ப அற்புதமான வழியையும் காட்டி இருக்கிருர்கள். புத்தகம் கண்ணைக் கருத்தைக் கவருகிறது. தமிழ் இலக்கியத்தின் பாக்கியம் என்றே புத்தகம் போற்றும்படி வாய்த் திருக்கிறது.

•

[ஜமீந்தாரணி: ஆசிரியர்: சரத் சந்திரசட்டர்ஜி. மொழி பெயர்ப்பு: ஆர். ஷண்முகசுந்தரம். பிரசுரம்: புதுமலர் நிலையம், கோயமுத்தூர். விலை அணு 12. விற்பனை யாளர்: கிராம ஊழியன் பிரஸ், லிமிடெட், துறையூர், திருச்சி].

ஜமீந்தாரிணி இரண்டாம் பதிப்பாக வெளி வந்திருப்பதிலிருந்தே இந்த நவீனத்தின் சிறப்பு புலனுகிறது. கதையின் ஓட்டமோ நம்மை மெய்மறக்கச் செய்கிறது. ஜமீந்தாரிணியின் போக்கும், கிளர்ச்சியும் உள்ளத்தை என்ன வெல்லாமோ செய்து விடுகிறது. முதலிலிருந்து முடிவு வரை சரத்தின் சிந்தனு சக்தியும், கற்பனு சக்தியும் வியக்கும்படி செய்கிறது. மற்றப்படி வேறு ஒன்றுமே சொல்ல வேண்டியதில்லை.

•

[கர்வபங்கம்: ஆசிரியர்: சரத் சந்திரர். மொழிபெயர்ப்பு: ஆர். ஷண்முகசுந்தரம். பிரசுரம்: புதுமலர் நிலையம், கோயமுத்தூர். விலை அணு 12. விற்பனை உரிமையாளர்: கிராம ஊழியன் பிரஸ் லிமிடெட், துறையூர், திருச்சி]

சரத்சந்திரர், நாவல் உலகில் ஒரு புதுமையைத்தான் செய்து விட்டுப் போயிருக்கிருர். ஆம், அது புதுமையேதான். பெண் உள்ளத்தை வர்ணிப்பதென்றுல், அதுவும் கதைக் கவர்ச்சியோடு கொண்டு செல்வதென்றுல் அதற்குத் தனியான திறமை வேண்டும். அந்தத் திறமை சரத்திடம் பரிபூரணமாக நிரம்பி இருக்கிறது. "கர்வபங்கம்" இனிமையின் சிகரத்தை அற்புதமாகக் காட்டுகிறது. உணர்ச்சிகள் அலை அலையாக மோதுவதைக் காணலாம். 'படித்தால் இப்படிப் புத்தகம் தான் படிக்க வேண்டும்' என்ற எண்ணத்தை நிரப்பவல்ல அருமையான நவீனம் இது.

[நந்தா விளக்கு : (சிறுகதைகள்) ஆசிரியர் : ஆர். ஷண்முகசுந்தரம். பிரசுரம் : புதுமலர் நிலையம், கோயமுத்தூர். விலை ரூ. 2. விற்பனை உரிமையாளர்: கிராம ஊழியன் பிரஸ் லிமிடெட், துறையூர், திருச்சி]

சிறு கதை இலக்கியத்திலே ஆர். ஷண்முகசுந்தரம் இயற்றும் கதைகளுக்குத் தனியான இடமுண்டு. அவருடைய நடையும் போக்கும் அலாதியானது. வனப்பும் வசீகரமும், இனிமையும், இங்கிதமும் கலந்து ஒரு அற்புத உலகை சிருஷ்டித்து விடுகிறார். வாழ்வைப் பல நோக்குடனும் பார்க்கிறார். கலையும் வாழ்வும் ஒன்றுடன் ஒன்று பின்னிக் கொண்டிருக்கிறது. அதை எப்படி, எந்த விதம் காட்ட வேண்டும் என்பதில் கை தேர்ந்திருக்கிறார். அசல் தமிழ் நாவலான நாகம்மாளில் என்னென்ன புதுமையையும் அழகையும் அள்ளித் தந்தாரோ, அந்த ஆனந்தம், அற்புதம் எல்லாம் அவருடைய சிறுகதைத் தொகுதியிலும் நிறைத்திருக்கிறார். கதைகள் பேசுகின்றன. உயிரும் உணர்ச்சியும் கொண்ட இந்தப் பாத்திரங்களை என்றும் மறக்க இயலாது. தோற்றம் அலாதி அழகுடன் திகழ்கிறது.

●

[ஆர். ஷண்முகசுந்தரம் எழுதிய பூவும் பிஞ்சும் என்னும் சொந்தத் தமிழ் நாவலைப் பற்றிய விரிவான விமர்சனம் பின்னர் வரும். அல்லயன்ஸ் கம்பெனி மூன்றும் தொகுதி கதைக் கோவை விமர்சனமும் வருகிற இதழ்களில் வரும்].

●

[சந்திரா : (மாதம் ஒரு புத்தகம்) பதிப்பாசிரியர்: தி. நா. சுப்ரமணியம். ஆலோசனையாளர்கள் : வெங்கட்டராஜுலு நாயுடு, ரா. நாராயணன். விலை ரூ. 1. பிரசுரம்: சந்திரா பப்ளிகேஷன்ஸ் லிமிடெட், திருவல்லிக்கேணி, சென்னை]

சந்திரா : ஆகா! என்ன அழகான பெயர். எவ்வளவு ஆனந்தமாகவும், குளிர்ச்சியாகவும் இருக்கிறது உச்சரிப்பதற்கு! மாதம் ஒரு புத்தகமாக மலரும் 'சந்திரா' வில் முதல் புத்தகத்தின் தோற்றமே நம்மை ஆனந்தக் கடலில் ஆழ்த்துகிறது. உள்ளே பக்கங்களைத் திறந்தால், "சபாஷ், இப்படியல்லவா இருக்க வேண்டும்!" என்று இன்பமடையும்படியான அரிய விஷயங்கள். அருமையான கதைகள். அற்புதமான கட்டுரைகள். சிறந்த ஞான மொழிகள். உயர்ந்த கருத்தமைந்த கட்டுரைகளும் ஆராய்ச்சிகளும். எதுதான் இல்லை இம்மலரில்? நிறை குடம் போல் பொங்கி வழிகிறது மலர். அதாவது அழகிலும் அருமையிலும் பார்க்க வேண்டிய, படிக்க வேண்டிய, திருப்திப்பட வேண்டிய மாதம் ஒரு புத்தகம் இது.

ஆசிரியர்
சரத்சந்திரசட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு:
ஆர். ஷண்முகசுந்தரம்.

சதீஷ்பாபு ஒன்றும் வேண்டாமென்று சொல்ல மாட்டார். அவர் குணம் எனக்குத் தெரியும். எல்லாவற்றையும் விட பிராமணனுக்கு பிராமணனேதான் கதி. இந்த அதிகம் இரண்டு ரூபாய் வேறு யாருக்கும் கொடுத்து விடப் போவதில்லை என்று கூறிவிட்டுச் சமையல்காரன் சிரித்தான்.

பிஹாரி மௌனமாக அவன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு, "ஆனால், சாவித்திரி அங்கில்லையே" என்றான்.

சமையல்காரன் அவன் கூறியதை நம்பாமல் சிரித்துக் கொண்டு, "சரி, வேண்டாம். நீ எனக்காகச் சொல்லு; அதன் பிறகு நடப்பதை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றான்.

பிஹாரி ரொம்பக் கம்பீரமாக இடது கையிலிருந்த கஞ்சாவை வலது கைக்கு மாற்றிக் கொண்டு "சத்தியமாக அவள் அங்கு வருவதில்லை" என்றான்.

இவ்வளவு பெரிய சத்தியத்திற்குப் பிறகு சமையல்காரன் சந்தேகம் தீர்ந்து விட்டது. அவன் அவசரமாக, "அடே, இதென்ன? அவள் இங்கும் வருவதில்லையே, பின் எதற்காக ராகால் பாபு இரவு பகல் இருபத்திநாலு மணி நேரமும் சதீஷ் பாபுவை.............. சரி, நீ போய் அவளைப் பார்த்து விட்டு வா. அதன் பிறகு நான் ராகால் பாபுவிடம் பேசிக் கொள்கிறேன். பிஹாரி, என்னைச் சாதாரண பிராமணன் என்று நினைத்து விடாதே" என்றான்.

அவனுடைய பிராமணத்வத்தில் பிஹாரிக்கு அளவு கடந்த பக்தி இருந்தது. அவன் கஞ்சா சிலும்பியைப் பிராமணன் கையில் கொடுத்து விட்டு, "சரி, சதீஷ் பாபு இங்கிருந்து ஏன் போனார்? பள்ளிக்கூடம் தூரம் என்று அவர் சொல்கிறார். ஆனால் விஷயம் அதுவல்ல என்று நான் நினைக்கிறேன்" என்றான்.

சமையல்காரன் ரொம்ப சாவகாசமாக, "ஆமாம், ஏதோ வேறு விஷயம் இருக்கும்" என்றான். அதன் பிறகு இருவரும் மாறி மாறிக் கஞ்சா இழுத்தார்கள்.

பிஹாரி எழுந்து சாவித்திரி வீட்டிற்குப் புறப்பட்டான். சாவித்திரி தேக அசௌக்கிய மடைந்

திருப்பாள் என்று பிஹாரி பூரண மாக நம்பினன்.

சாவித்திரி வீட்டு வெளிக் கதவு திறந்திருந்தது. பிஹாரி நேராக உள்ளே போனுன். அங்கிருந்த எல்லாக் கதவுகளும் சாத்தப் பட்டிருந்தன. வாடகைக்கு இருப்போர் அனைவரும் தூங்கிக் கொண்டிருந்தனர். அவன் சாவித்திரி அறைக்கு எதிரில் வந்ததும் திடுக்கிட்டான். அறையின் ஒரு கதவு சாத்தப் பட்டிருந்தது. சாவித்திரி தரையில் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தாள். விபின் குடி வெறியில் படுக்கையில் படுத்துக் கொண்டிருந்தான். காலடி ஓசை கேட்டுச் சாவித்திரி திரும்பிப் பார்த்தாள். பிஹாரியைப் பார்த்ததும் அவளுடைய முகம் வெளுத்து விட்டது. ஆனல் அவள் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் வெளியில் வந்து சிரித்துக் கொண்டு, "வா, பிஹாரி, உட்காரு!" என்ருள். பிறகு அவனைச் சமையலறைக்கு அழைத்துக் கொண்டு போய் உட்காரவைத்துத் தானும் அருகிலிருந்த பெஞ்சில் உட்கார்ந்து கொண்டாள். அதன் பிறகு, "எல்லோரும் சௌக்கியமாக இருக்கிருர்களா, பிஹாரி?" என்ருள்.

சௌக்கியம்தான் என்று பிஹாரி தலையை அசைத்துத் தெரியப் படுத்தினன். அதற்குப் பிறகு சாவித்திரி வேறு ஒன்றும் கேட்கவில்லை. சிறிது நேரம் கழித்து பிஹாரி எழுந்து, "எனக்கு ரொம்ப வேலையிருக்கிறது; நான் போகிறேன்" என்ருன்.

சாவித்திரி கவலையுடன், "வந்ததும் புறப்படுகிருயே! கொஞ்சம் இருந்து விட்டுப்போ" என்ருள்.

"இல்லை, போக வேண்டும்"

சாவித்திரி அவனுடன் வெளி வாயில் வரையிலும் வந்தாள். "பிஹாரி, எல்லோரும் ரொம்ப கோபமடைந் திருப்பார்கள்?" என்ருள்.

பிஹாரி நடந்து கொண்டே, "எனக்கு என்ன தெரியும்? இப்போது நாங்கள் அங்கே இல்லையே" என்ருன்.

"அங்கில்லையா? விடுதியை மூடி விட்டார்களா?"

"இல்லை, மூடவில்லை. சதீஷ் பாபு மாத்திரம் விடுதியை விட்டு வேறு வீட்டிற்குப் போய் விட்டார், அவரோடு நானும் வந்து விட்டேன்."

"நீங்கள் என் அங்கிருந்து போய் விட்டீர்கள் பிஹாரி?"

"எத்தனையோ காரணம்" என்று கூறிவிட்டு பிஹாரி போகத் தொடங்கினன். உடனே சாவித்திரி அவனைப் பிடித்துக் கொண்டு, "பிஹாரி, கொஞ்ச நேரம் இருந்து சொல்லிவிட்டுப் போயேன்" என்ருள்.

பிஹாரி உறுதியாக, "எனக்கு நேரமில்லை" என்ருன்.

"சரி, நாளைக்கு வருகிருயா?"

"முடியாது"

அவன் முகத்தைப் பார்த்ததும் சாவித்திரி கையை விட்டு விட்டாள். அவள் மிகுந்த வேதனைப் பட்டாள். "சரி, போ, போய், இவ்விடத்திய சங்கதி எல்லாம் அவரிடம் சொல்" என்ருள்.

இந்த வார்த்தை பிஹாரியைப் புண்படுத்தியது.

"அவர் உன்னைப் பற்றிக் கேட்க விரும்பமாட்டார்" என்ருன்

"விரும்ப மாட்டாரா?"

"ஆமாம்"

"சரி, எப்போதாவது விரும்பினால், சொல்லிவிடு."

"நான் பெண்ணல்ல; எனக்கு ஈவு இரக்கம் எல்லாம் கடவுள் கொடுத்திருக்கிறார். நான் அவரிடம் ஒன்றும் சொல்லமாட்டேன்" என்று கூறிவிட்டு அவன் ஒரு பதிலையும் எதிர் பாராமல் அந்தச் சிறிய சந்தில் கிளம்பி விட்டான்.

சாவித்திரி அங்கேயே வாசல் படியில் உட்கார்ந்து கொண்டாள். அவள் உள்ளும் புறமும் எரிவது போலிருந்தது.

இன்று காலை அவள் வீட்டிலிருக்கவில்லை. காளிதரிசனத்திற்காக அவள் காளிக் கட்டத்திற்குப் போயிருந்தாள். அந்தச் சமயத்தில் விபின், குடித்து விட்டு இரண்டு நண்பர்களோடு வந்து சேர்ந்தான். மோக்ஷதா கையில் இரண்டு நோட்டுகளைக் கொடுத்துச் சாவித்திரி அறைச் சாவியை வாங்கி வீட்டைத் திறந்து உள்ளே போய் உட்கார்ந்து கொண்டான். விபின் பணம் கொடுத்து அனுப்பி இன்னும் குடி வகைகள் தருவித்தான். தானும் குடித்தான், மற்றவர்களுக்கும் கொடுத்தான். குடித்துக் குடித்து எல்லோரும் போதை அடைந்தார்கள். சாவித்திரிக்கு இவைகள் ஒன்றும் தெரியாது. குடியிருக்கும் இரண்டு பெண்கள் குடித்து விட்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். மோக்ஷதா கூடத்தில் உட்கார்ந்து கொண்டு ஆனந்தமாக அனுபவித்து *வித்யாசுந்தர் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தாள். வீடு முழுதும் எலும்புகளும், உடைந்த முட்டைகளும், மீன் செதில்களும் கால்வைக்கக்கூட இடமின்றி நிறைந்து கிடந்தன. மோக்ஷதா, சாவித்திரியைக் கண்டதும் எழுந்து வந்து கட்டி அணைத்துக் கொண்டு, "அம்மா, இம்மாதிரி பெரிய பெரிய கனவான்களை உடையவளுக்குக் கஷ்டம் எதற்கு வருகிறது? அவள் பிறர் வீட்டுக்கு வேலை செய்யப் போகலாமா? ஆனால் அம்மா, நான் உன்னுடைய ஏழை........."

அவளுடைய வாயிலிருந்து சாராய நாற்றம் வீசியது. மிகுந்த வெறுப்புடன் சாவித்திரி அவளைத் தள்ளி விட்டு, "சின்னம்மா, நீயும் குடிகாரியா? நீயும் போதையாக இருக்கிறாயா?" என்றாள்.

இதைக்கேட்டு மோக்ஷதா கோபமடைந்தாள். "போதையா ஆம், நான் போதையாகத்தானிருக்கிறேன்! மோக்ஷதா போதையாக இருக்கிறாளா என்று வீட்டிலுள்ளவர்களிடமெல்லாம் போய்க் கேட்டுப்பார்! அடீ! நானும் ஒரு காலத்திலே இரவு பகலாகச் சாராயத்திலேயே மூழ்கி எழுந்தவள் தான்! ஆனால் நீ நேற்றைய சிறுக்கி, உனக்கு இதெல்லாம் என்ன தெரியும்?" என்றாள்.

அவளுடைய கூச்சலை அடக்குவதற்காக, "ஆமாம் சின்னம்மா, நீ குடிக்க மாட்டாயே, இன்று ஏது இந்தப் புத்தி வந்தது?" என்றாள்.

கோபத்துடன், "ஏன்? எனக்குப் போதை வந்து விட்டதா? நான் சாதாரண குடிகாரியல்ல! செத்தாலும் செத்துப் போவேனேயல்லாது குடித்து விட்டு விழுந்து கிடக்கமாட்டேன்! ஒரு கிளாஸ் குடித்து விட்டு குப்புற விழுந்து கிடக்கிறாரே உன் பாபு — அவரிடம் போய்க் கேட்டுப் பாரு!" பிறகு, முந்தானை முடிப்பைக் காட்டினாள். "துளியுண்டு கொடுத்தாலே மசிந்து விடுகிறவள் நானல்ல" என்றாள்.

* பண்டைய வங்க இலக்கியத்தைச் சேர்ந்த சிருங்கார ரசம் நிரம்பிய அற்புதமான காவியம்.

சாவித்திரி திடுக்கிட்டு, "பாபு வந்திருக்கிறாரா?" என்றாள்.

"இல்லாமல் இதெல்லாம் யார் செய்தது? அவர் சொன்னவுடன் நான் குடித்து விடுவேனா? நமக்கும் மானம் மரியாதை உண்டல்லவா?"

இதற்குள் உள் கூடத்திற்குள் சண்டை யிட்டுக் கொண்டிருந்த இரண்டு பெண்களும் மோக்ஷதாவின் சத்தத்தைக் கேட்டு வந்து சேர்ந்தார்கள்.

"அடி, எங்களுக்கும் மானம் மரியாதை உண்டு. நாங்கள் யாருக்கும் குறைந்தவர்களல்ல. என்ன சாவித்திரி? நீ எங்கள் மகள் போன்றவள்; உன்னுடைய பாபு வேண்டிக் கொள்ளும் போது, வேண்டாமென்று மறுக்க முடியவில்லை. இல்லாவிட்டால்......என்று விது சொன்னாள்.

அவள் பேசி முடிப்பதற்குள் மோக்ஷதா, "சாவித்திரியின் பாபுவாகத்தான் இருக்கட்டுமே! மாப்பிள்ளையானால் தான் என்ன! முதலில் முழுசா இருபது ரூபாயை வாங்கிக் கொண்டுதான் கிளாசைக் கையிலெடுத்தேன்" என்றாள்.

இவைகளை எல்லாம் கேட்கச் சாவித்திரிக்கு வெட்கத்தால் செத்து விடலாம் போலிருந்தது. "பேசாமலிரு, சின்னம்மா!" என்றாள்.

"நான் என் பேசாமலிருப்பேன்? சொல்லவேண்டியதை நேரிலேயே சொல்லுகிறேன். உள்ளது உள்ளபடி பேசுகிறவர்களை உலகம் வாயாடி என்று சொல்லுகிறது" என்றாள். இந்தத் தடவை விதுவும் சேர்ந்து கொண்டாள். "உள்ளது உள்ளபடி பேச உனக்குத்தான் தெரியுமாடி! எனக்கும் தெரியும். மாப்பிள்ளையிடம் இரண்டு நோட்டு வாங்கிக் கொண்டுதான் சாராயம் குடித்தாய்; மூன்று........."

"உனக் கெதற்கடி பெரிய பேச்சு......"

இதற்குமேல் அவள் பேச முடியாமல் அவளுடைய வாயை சாவித்திரி தன் கையால் மூடிக் கொண்டாள். பிறகு அவளை ஒரு அறைக்குள் தள்ளி வெளியில் சங்கிலி போட்டு விட்டாள். உள்ளிருந்து கொண்டு மோக்ஷதா வாயில் வந்தபடி எல்லாம் பேசிக் கொண்டிருந்தாள்.

சாவித்திரி திரும்பி வந்து, விதுவின் தோளைப் பிடித்துக் கொண்டு "என்னை மன்னித்து விடுங்கள்" நீங்களும் பேசாதிருங்கள். எல்லாக் குற்றமும் என்னுடையது தான் என்றாள்.

அவளுடைய சாந்தமான பேச்சால் விது தணிந்து, "என் மேல் என்ன குற்றம் சாவித்திரி? மோக்ஷதாவை எனக்கு நன்றாகத் தெரியும். கொஞ்சம் குடித்தாலே ஆட்டம் போடுவாள். சரி, நீ வீட்டிற்குப் போ" என்றாள்.

சாவித்திரி பதுமை போல நின்று கொண்டிருந்தாள். அவளுக்குத் தற்கொலை செய்து கொள்ளலாமெனத் தோன்றியது. சதீஷ் இவ்வாறு மானங்கெட்டுத் திரிவானா? அவன் பட்டம் பகலில் இம்மாதிரி செய்கை செய்யக் கூடுமா? இது அவளால் நம்பக் கூட முடிய வில்லை. இந்த எண்ணங்களெல்லாம் அவளுடைய மனத்திரையிலே மாறி மாறி எழுந்தன. அவளுடைய அன்பன் அவள் கண்ணெதிரிலேயே இறந்து கிடப்பது போன்ற உணர்ச்சி உண்டாகியது. இப்போது தான் இரண்டு நாளைக்கு

முன் அவனைக் கடுமையாகப் பேசி வீட்டை விட்டுப் போகச் சொன்னாள். அவன் இதற்குள் அதை மறந்து விட்டு வெட்கமின்றி எப்படி இங்கு வருவான் என்று அவள் நினைத்தாள். அவளுடைய இரு கண்களும் சிவந்து விட்டன. ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வெளிவரவில்லை. அவளுடைய அந்தக்கரணத்தை அடிமை கொண்ட தேவதை, அவளுடைய கற்பனைச் சொர்க்கம், வாழ்வின் லட்சியம் எல்லாம் ஒரு நொடியில் சிதறிப் போய் விட்டது. சாவித்திரி மரத்துப்போய் நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருந்தாள். வீட்டுக்குள் போக அவள் கால்கள் மறுத்தன. சதீஷ் அவளிடம் இனிக் குடிப்பதில்லை என்று சத்தியம் செய்திருந்தான். இப்போது அதைக் காற்றில் பறக்க விட்டுக் குடி வெறியுடன் அவளுடைய படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கும் போது, அவன் முகத்தில் அவள் எப்படி விழிப்பாள்?

இதற்குள் கீழேயிருந்து வீட்டு எஜமானியின் குரல் கேட்டது. அவளும் இன்று வீட்டில் இல்லை. வரும்போதே அவள் எல்லா விவரங்களையும் கேள்வியுற்று மிகுந்த கோபத்துடன் வந்தாள். அங்கு சிதறிக்கிடந்த எலும்புகளையும், மீன் முட்களையும் பார்த்துக் கொண்டு பேசாமல் நின்று கொண்டிருந்தாள். பிரயாகைக்குப் போய்த் தீக்ஷை பெற்று வந்த பின் அவளுடைய ஆசாரத்திற்கு ஒன்றும் குறைவில்லை. சாவித்திரியை அந்நிலையில் கண்டு அவள், "ஏண்டி, சாவித்திரி! உன்னை நல்லவள் என்று இருந்தேனே! இது என்ன அக்கிரமம் செய்திருக்கிறீர்கள்?" என்றாள்.

"நான் வீட்டில் இருக்கவில்லை!"

"இப்போதுதான் இருக்கிறாயே, இதையெல்லாம் யார் சுத்தம் செய்வது? நானா? முடியாதம்மா, இந்த வீட்டில் இதெல்லாம் உதவாது. அவரவர் வீட்டிற்குள் உட்கார்ந்து என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். ஆனால் வீடு பூராவும் இந்த துராசாரம் செய்ய முடியாது? கால் வைக்கக்கூட இடமில்லாமல், எலும்புகளும், முட்டைகளும் நிறைந்து கிடக்கிறது. இந்த அசங்கியங்களைத் தொட்டால் என் ஆசாரமே போய்விடும்" என்று கூறிக் கொண்டு அவைகளைத் தாண்டித் தாண்டித் தன் அறைக்குள் சென்று விட்டாள். சாவித்திரியால் நிற்கக்கூட முடியவில்லை! அவள் அந்த வீடு முழுதும் சுத்தம் செய்து குளித்து விட்டு ஒரு உலர்ந்த புடவைக்காக வேறு வழியின்றித் தன் அறைக்குள் நுழைந்தாள். அறைக்குள் நுழைந்து படுக்கையைப் பார்த்ததும் பயந்து போய் அவள், "அடே! விபின் பாபு!" என்று கூச்சலிட்டாள். குடி வெறியில் நினைவிழந்து கிடந்தான். வெளி அரவம் ஒன்றும் அவனுக்குத் தெரியாது. சாவித்திரி இரண்டடி பின் நகர்ந்தாள். அவள் தேகம் முழுதும் நடுங்கியது; தலை சுழன்றது. மூர்ச்சை அடைந்து விடுவோமென்று பயந்து போய்க் கதவோடு சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு நிலைமை மாறியது. இருந்தாலும் தலை நிமிர்ந்து நேராக உட்கார முடியவில்லை. இதற்கு முன் எந்தத் துக்கத்தால் அவளுடைய இதயம் சுக்கு நூறாக வெடித்து விடும் போலிருந்ததோ, யாருடைய நடத்தையை எண்ணித் தற்கொலை செய்து கொள்ளலாமென எண்ணினாளோ, அந்தத் துக்கம் உண்மையல்ல, இவன் சதீஷ் அல்ல, இவன் வேறு மனி

தன், என்பதைக் கண்ணாரக் கண்டும் கூட அவள் மனோ வேதனை தணிந்த பாடாயில்லை. இன்னும் அதிகமாகியது. படுக்கையை நன்கு பார்ப்பதற்குக் கூட அவளுக்குத் துணிவு உண்டாகவில்லை. அவளுடைய கண்கள் பெரிய பெரிய கண்ணீர்த் துளிகளைச் சிந்தின.

ஆஹா! பெண் இதயத்தின் காதலை என்ன வென்பது! இத்தனை துக்கத்தின் மத்தியிலும், அவள் எப்போது சதீஷின் குற்ற மனைத்தையும் மனத்திற்குள்ளாகவே மன்னித்தாள். எப்போது அவனுக்குச் சேவை செய்வதற்காக, அவனுக்கு இன்பமளிப்பதற்காக ஆவல் கொண்டாள், எப்போது அவனைப் பார்ப்பதற்கு, அவனிடம் பேசுவதற்கு இச்சை கொண்டாள் என்பதெல்லாம் அவளுடைய அந்தராத்மாவிற்குக் கூடத் தெரியாது. அவளுக்கு இப்போது எங்கோ திசை தெரியாது போய்க் கொண்டிருப்பது போலிருந்தது. அதே சமயத்தில் தான் பிஹாரியும் அவளைத் தேடிக் கொண்டு வந்தான். நேரம் போனது கூட அவளுக்குத் தெரியாது. இன்னும் அவள் ஒரு சொட்டுப் பச்சைத் தண்ணீர் கூட வாயில் ஊற்ற வில்லை. அதைப் பற்றி அவள் நினைக்கவே யில்லை. ஆனால் வழியில் செல்வோர்களின் ஆர்வம் நிறைந்த பார்வை அவள் மேல் படவே அவள் திடுக்கிட்டு எழுந்து அறைக்குள் வந்து படுக்கை அருகில் வந்து நின்று கொண்டாள்.

பத்தாவது அத்தியாயம்

சதீஷ் மிகுந்த மனோவேதனை அடைந்தான். அவன் ஒன்றையும் மறக்க முடிய வில்லை. அதனால் அவன் தேகமும் நாளுக்கு நாள் மெலியத் தொடங்கியது. இது அவனுக்கு நன்கு புலப்பட்டது. அவன் பிஹாரியைக் கூப்பிட்டு, "இன்று சாயங்கால வண்டியில் ஊருக்குப் போகலாமென்று இருக்கிறேன்" என்றான்.

"உங்கள் ஊருக்குப் போகிறீர்களா? அல்லது மேற்குப் பிரதேசத்தில் உள்ள வீட்டிற்கா?"

"மேற்கே தான் போகலாமென்றிருக்கிறேன்" என்று கூறிவிட்டுச் சில அவசியமான சாமான்கள் வாங்குவதற்குப் பணம் கொடுத்து விட்டு சதீஷ் பள்ளிக் கூடத்திற்குச் சென்று விட்டான்.

பிஹாரிக்கு உண்டான சந்தோஷத்திற்கு ஒரு அளவில்லை. அவனுடைய ஊர் மிதுனபுரி ஜில்லாவைச் சேர்ந்தது. அவன் எப்போதும் மேற்குப் பக்கம் போனதே யில்லை. இன்று அங்கு போகப் போகிறான். மிகுந்த சந்தோஷத்துடன் மூட்டை முடிச்சுகளைக் கட்டத் தொடங்கினான். சமையல்காரன் சாப்பிடுவதற்குக் கூப்பிட்டான். பிஹாரி சிரித்துக் கொண்டு, "நீ போய்ச் சாப்பிடு. என் சாப்பாட்டை எடுத்து வைத்து விடு. நேரமிருந்தால் சாப்பிட்டுக் கொள்கிறேன். எனக்கு இப்போது துளி கூட நேரமில்லை" என்றான். சமையல்காரன் தன் சம்பந்தப்பட்ட விஷயத்தைப் புரிந்து கொண்டான். ஆனால் கடைசியில் கூறிய வார்த்தைகள் புரியவில்லை. ஆனால் புரியவில்லையே என்ற கவலையும் அவனுக்கில்லை.

கைவேலையை முடித்துக் கொண்டு பிஹாரி வெளியே சென்றான். கடைக்குப் போக வேண்டும். பழைய விடுதிக்குச் சென்று சமையல்க்காரப் பிராமணனை ஒருதரமாவது பார்க்க வேண்டும். சாவித்திரியை அன்றே அவன் வெறுத்து விட்டான். இன்று அவளைப் பற்றி அவன் நினைக்கவே யில்லை.

இன்று காலையிலிருந்தே சதீஷ் தலை பாரமாக இருந்தது. பனிரண்டு மணிக்குத் தலைவலியுடன் திரும்பி வந்தான். பிஹாரி வீட்டில் இல்லை. அவன் மூன்று மணிச் சுமாருக்கு வந்து சேர்ந்தான். எங்கு பார்த்தாலும் இன்புளுவென்ஸா பரவி இருந்தது. ஆகையால் சதீஷ் கவலைப் பட்டான். அடுத்த நாள் ஜுரமும் தலைவலியும் அதிகரித்தது. சாயங்காலம் சதீஷ், பிஹாரியைக் கூப்பிட்டு, "ஜுரம் தணியா விட்டால் நீ ஒருத்தனே கவனித்துக் கொள்வாயா?" என்றான்.

"அதற்கென்ன பாபு? பயப்படாதீர்கள்!"

சதீஷ் சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு, "சாவித்திரிக்கு ஏன் சொல்லி அனுப்பக் கூடாது பிஹாரி? டாக்டரைக் கூடக் கூப்பிட வேண்டும் போலிருக்கிறது" என்றான்.

என்ன காரணத்தாலோ சாவித்திரியை அழைத்து வருவதற்கு பிஹாரிக்கு விருப்பமில்லை. ஆனால் அவன் மனதிலுள்ளதை மறைத்துக் கொண்டு, "சரி, போகிறேன்" என்றான்.

அதற்குப் பிறகு ஜுரம் தணியத் தொடங்கியது. தலைவலியும் அகன்றது. இரண்டு மணிக்குப் பிறகு பிஹாரி தனியாக வந்தான். சதீஷ் சந்தேகத்துடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"அவள் வீட்டில் இல்லை" என்று பிஹாரி சொன்னான்.

"வீட்டில் இல்லையா? அந்த விடுதிக்குப் போய்ப்பார்த்து விட்டு வந்தாயா?"

"இப்போது அவள் அங்கே போவதில்லை. இரண்டு மூன்று நாட்களாக வீட்டுக்குக் கூட வருவதில்லையாம். எங்கே போனாள் என்பது யாருக்கும் தெரியவில்லை"

"அவளுடைய சின்னம்மாளுக்குக் கூட தெரியாதா?"

"தெரியாது, அவளிடமும் ஒன்றும் சொல்லி விட்டுப் போகவில்லை."

சதீஷ் பேசாமலிருந்து கொண்டான். பிஹாரி கண்ணீரை அடக்கிக் கொண்டு வெளியே வந்து நின்று கொண்டான். சின்னம்மாளிடம் கேட்டு வந்த சாவித்திரி கதையைத் தான் மனப்பூர்வமாக நம்புவதைத்தனது நோயாளி எஜமானனிடம் சொல்வதற்கு அவனுக்கு விருப்பமில்லை.

மறு நாள் டாக்டர் வந்து மருந்து கொடுத்து விட்டுப் போய் விட்டார். சதீஷ் மருந்துப் பாட்டலை எடுத்து ஜன்னலுக்கு வெளியே வீசி எறிந்தான். இதைப் பார்த்து பிஹாரி மறுபடியும் ஒரு முறை சாவித்திரியைத் தேடுவதற்கு அவள் வீட்டிற்குச் சென்றான். மோக்ஷதா சமைத்துக் கொண்டிருந்தாள். "இன்றும் வரவில்லையா?" என்று பிஹாரி கேட்டான்.

மோக்ஷதா மிகுந்த கோபத்தோடு, "இல்லையப்பா, இல்லை. இனி இங்கு வரமாட்டாள் என்று உன்னிடம் எத்தனை தரம் சொல்வது? கஷ்டப்படும் போது சின்னம்மா தேவையாக இருந்தாள். இப்போது தான் அவளுக்கு நல்ல காலமாச்சே!" என்றாள்.

சதீஷிடம் வந்து பிஹாரி, "இன்றும் சாவித்திரி வரவில்லை" என்றான்.

இரண்டு நாளைக்கப்புறம் மருந்து சாப்பிடாமலேயே ஜுரம் குணமாகி விட்டது. பிஹாரியைக் கூப்பிட்டு, "இன்று புறப்பட வேண்டும்" என்றான்.

அன்றே கல்கத்தாவிலிருந்து ஊருக்குப் புறப்பட்டு விட்டான்.

பதினொன்றாவது அத்தியாயம்

உபேந்திரன், சதீஷினுடைய வாடி மெலிந்து போன முகத்தைப் பார்த்து, "உன்னுடைய முகமே நீ டாக்டருக்குப் படிக்கிறாய் என்று சாக்ஷி சொல்லுகிறதப்பா!" என்றான்.

சதீஷ் சிரித்துக் கொண்டு, "இல்லை அண்ணா, எனக்கு ஒன்றுமில்லை" என்றான்.

"ஒன்றுமில்லையா?"

"டாக்டருக்கு என்னால் படிக்க முடியவில்லை."

உபேந்திரன், சதீஷின் அழகிய முகத்தைப் பார்த்துக் கொண்டு, "ரொம்ப நல்லதாகப் போச்சு. கிராமங்களுக்குச் சென்று அநியாயமாகப் பல உயிர்களைக் கொல்வதிலிருந்து கடவுள் உன்னைத் தப்புவித்து விட்டார்" என்றான்.

ஒரு மாதத்திற்குப் பிறகு உபேந்திரன், சதீஷைக்கூப்பிட்டுச் "சதீஷ், என்னோடு கல்கத்தாவிற்கு வருகிறாயா?" என்றான்.

சதீஷ் இரு கரங்களையும் குவித்துக் கொண்டு, "என்னை மன்னிக்க வேணும், அண்ணா! கல்கத்தா ரொம்ப அழகிய பட்டணம் தான். பார்க்க வேண்டியது தான், எல்லாம் சரிதான், ஆனால் என்னை மட்டும் அங்குக் கூப்பிடாதே" என்றான்.

சதீஷின் குரலிலிருந்த வேதனையை மறைக்க முடியவில்லை. இதைக் கண்டு உபேந்திரன் ஆச்சரியமடைந்தான். சதீஷ் அங்கு சென்று ஏதோ செய்து விட்டு வந்திருக்கிறான் என்று தீர்மானித்தான். "சரி, போகட்டும். உனக்கு உடம்புக்கும் சரியில்லை. நான் தனியாகவே போகிறேன்" என்றான்.

உபேந்திரனுடைய மனோபாவத்தைத் தெரிந்து கொண்டு சதீஷ் கவலையுடன், "எப்போ, போகிறாய் அண்ணா?" என்றான்.

"இன்றைக்கு."

"இன்றைக்கா? சரி, நானும் வருகிறேன்" என்று சொல்லி விட்டுத் தன் வீட்டிற்கு வந்து, "பிஹாரி, இன்னொரு தரம் படுக்கையைச் சுருட்டு; கல்கத்தா போக வேண்டும்" என்றான்.

பிஹாரி சிறிது வருத்தத்துடன், "எப்போ பாபு?" என்றான்.

சதீஷ் சிரித்துக் கொண்டு, "எப்போ என்ன? இன்றைக்கு ராத்திரிவண்டிக்கேதான்" என்றான்.

"சரி" என்று கூறி விட்டு முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு பிஹாரி போய் விட்டான்.

சதீஷ் அவனது கவலை யடைந்த முகத்தைப் பார்த்து மனதிற்குள்ளாகவே, "இங்கே பிஹாரிக்கு ஒரு வேலை வெட்டியும் கிடையாது. வேலைக்குப் பயந்து கொண்டு வருவதற்கே பிரியமில்லை" என்று சொல்லிக் கொண்டான். ஆனால் அந்தர்யாமி, அசரீரியாக, "சதீஷ், கிழவனுடைய மனதிலுள்ளதை உன்னால் அறிய முடியவில்லை" என்று சொல்லியது.

இதற்கு மத்தியில் ஒரு நாள் பிஹாரியிடம், சதீஷ் பேச்சு வாக்கில், "சரி, பிஹாரி இதற்குள் சாவித்திரி திரும்பி வந்திருப்பாள். அவள் எங்கு போயிருந்தாள் என்று உன்னால் சொல்ல முடியுமா?" என்றான்.

பிஹாரி சந்தேகத்துக் கிடமின்றி, "முடியாது" என்ருன்.

விரும்பியிருந்தால் அவன் எவ்வளவோ விஷயங்கள் சொல்ல முடியும். ஆனல் ஒருநாள் அவன் சாவித்திரிக்கு முன் ஆண்மைக் கர்வத்துடன் நடந்து கொண்டான். ஆகையால் அந்த கர்வத்தை எப்போதும் அவனல் விட்டுக் கொடுக்க முடியவில்லை.

கல்கத்தாவிலிருந்து வந்த அன்று சதீஷ் தன் அறைக்குள் நுழைந்ததும் இரு கரங்களையும் குவித்துக் கொண்டு, "ஆண்டவா! நீ செய்வதெல்லாம் நன்மைக்கே தான்" என்று வணங்கினன். ஆனல் எந்தக் காரியத்திற்காக அவன் ஆண்டவனை வாழ்த்தினன் என்று கேட்டால், அவனல் பதில் சொல்ல முடியாது. எவ்வளவு பெரிய பேராபத்திலிருந்து தப்பித்த பிறகு அந்த வார்த்தை வெளிப்பட்டிருக்க வேண்டும்; எவ்வளவு பெரிய மாய வலையில் அகப்படாததால் அந்த வார்த்தை வெளிப்பட்டிருக்க வேண்டும் என்பது அவன் அறிவுக்குத் தெரியாமலில்லை. ஆகையால் இந்த நன்மையை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள விரும்பினன்.

ஆனல் அது முடிந்ததா? அவனுடைய இருள் சூழ்ந்த மனம் ஒன்றையும் கருத வில்லை. சதீஷ் முன் போலவே தனது பால்ய நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு நாடகம், சங்கீதம் முதலியவைகளில் நாளைப் போக்க விரும்பினன். ஆனல் மனதின் அடித்தளத்திலிருந்து கிளம்பும் கருணைக் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போவான். எதிலும் ஈடுபட முடிவதில்லை. இன்று கல்கத்தா பயணத்தைக் கேட்டதும் அவன் மனம் சிறிது தெம்பு அடைந்தது. அன்று இரவே உபேந்திரனும், சதீஷும் மெயிலில் இரண்டாம் வகுப்பில் பிரயாணமானர்கள்.

குழல் ஊதி வண்டி கிளம்பியதும் உபேந்திரன் படுக்கையில் படுத்துக் கொண்டான். ஆனல் சதீஷ் சன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.

மெயில் வண்டி எல்லா ஸ்டேஷன்களிலும் நிற்பதில்லை. ஆறுகளையும், குளங்களையும், குன்றுகளையும் தாண்டிக் கொண்டு ரயில் வேகமாகச் சென்றது. வண்டியின் வேகத்திலே பாதை யோரம் இருந்த மரம் மட்டைகள் கணத்திற்குக் கணம் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. தூரா தூரத்திலே உள்ள மூங்கில் புதர்களின் இருண்ட சாயையும், அதற்கருகே ஓடிக் கொண்டிருக்கும் ஆற்று நீரின் தோற்றமும் தெரிந்தது.

வெளியிலுள்ள மரம்,செடி கொடிகளும், வயற்புறங்களும், மைதானங்களும் தண்ணீரற்ற குளங்களில் வெண்மையான புகையில் மிதப்பன போலிருந்தன. சதீஷ் கண்களில் நீர் நிறைந்தது. இந்த வழியில் அவன் எத்தனை தடவை வந்திருக்கிருன். சந்தடியற்ற பிரகிருதியை எத்தனை தடவை இந்த மங்கிய வெளிச்சத்திலே பார்த்திருக்கிருன். இருந்தாலும் ஒரு நாளாவது அவன் கண்ணில் இம் மாதிரி பட்டதில்லை. சகலமும் பேச்சு மூச்சற்று இறந்து கிடப்பது போலிருந்தன. எதும் எதுக்காகவும் துக்கமடைய வில்லை; ஒன்றையும் எதிர் பார்த்து ஏங்கி நிற்கவில்லை. சகலமும் அசையாது, சலனமற்று இருந்த இடத்திலேயே இருந்தன. இந்த மாறுதலில்லா பூமியைப் பார்க்கப் பார்க்க அவன் கிலேசம் அதிகரித்தது. அவன் கண்ணைத் துடைத்துக் கொண்டு பெஞ்சியில் படுத்துக் கொண்டான். ஆனல் சிறிது நேரம் கழித்துப் பெட்டியைத்

திறந்து புல்லாங்குழலை எடுத்துக் கொண்டு உபேந்திரனைப் பார்த்து, "வண்டிச் சத்தம் உன் தூக்கத்தைக் கெடுப்ப தில்லையானல், புல்லாங்குழலும் உன் தூக்கத்தைக் கெடுக்கா தல்லவா? எனக்குத் தூக்கம் வரவில்லை" என்று சொல்லி விட்டு சன்னலோரம் தள்ளி உட்கார்ந்து கொண்டு குழல் வாசிக்கத் தொடங்கினன்.

உபேந்திரன் மௌனமாகப் படுத்துக் கொண்டிருந்தான். பகவான் சதீஷுக்குப் பாடுவதற்குக் குரலும் வாசிப்பதற்குக் கையும் கொடுத்திருந்தான். இந்த விஷயத்தில் ஒன்றும் கஞ்சத்தனம் செய்ய வில்லை. சிறு வயதிலிருந்தே இக்கலையில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தான். சதீஷ் குழல் வாசிக்கத் தொடங்கினன்.

அந்த லயசுத்தமான, அழகிய சங்கீதத்தைப் புரிந்து கொள்வதற்கு அங்கு யாருமில்லை. ஆனல் ஆகாயத்திலிருந்த சந்திரன் அந்தக் குழலிசையில் கட்டுண்டு அவனைப் பின் தொடர்ந்து வந்தது. தரையில் தூங்கிக் கொண்டிருந்த தாவர வர்க்கங்களும் நித்திரை கலைந்தெழுந்தன. கொஞ்சம் கொஞ்சமாக வண்டியின் வேகம் குறைந்தது. ஸ்டேஷன் அருகில் வந்து விட்டதெனத் தெரிந்து அவனும் குழலைக் கீழே வைத்து விட்டான்.

உபேந்திரன் எழுந்து உட்கார்ந்து கொண்டான். "எனக்கு புல்லாங்குழல் மேல் தான் பிரியம். முன்னெரு நாள் நீ சிதார் வாசித்ததைக் கேட்டு உடனே போய் நானும் ஒரு சிதார் வாங்கி வந்து பணத்தை வீணக்கியது தான் கண்ட பலன்" என்ருன்.

சதீஷ் சிரித்துக் கொண்டு, "அண்ணு, என்னை மன்னித்து விடு; இனி புல்லாங்குழலும் வாங்கி விடாதே. நீ வீட்டிலுட்கார்ந்து கொண்டு புல்லாங்குழல் பழக ஆரம்பித்தால் தெருவிலுள்ளவர் அனைவரும் கோபமடைய ஆரம்பிப்பார்கள்" என்ருன்.

"சரி பழக ஆரம்பித்தால் உன் வீட்டில் வந்து பழகுகிறேன்."

இருவரும் பலமாகச் சிரித்தார்கள்.

அடுத்த நாள் மத்தியானம் ரயில் ஹவுரா ஸ்டேஷனை அடைந்ததும் உபேந்திரன், "நீ எங்கு போக வேண்டும்?" என்ருன்.

சதீஷ் ஆச்சரியத்துடன், "இதென்ன? நீ கூட்டிக்கொண்டு வந்து விட்டு, என்னை எங்கு போகிருய் என்று கேட்கிருயே?" என்ருன்.

"ஆனல் போவதற்கு இடமில்லையா?"

"இடமில்லாமலென்ன? நீ இருக்குமிடம் தான் நான் இருக்குமிடமும்."

இது விஷயமாக வேறு ஒரு பேச்சும் எழவில்லை.

ஸ்டேஷனில் இறங்கியதும் ஐரோப்பிய உடை அணிந்த ஒரு வங்காளி கனவான் உபேந்திரனுடைய கையைப் பற்றினர். இவர் உபேந்திரனுடைய நண்பர் பாரிஸ்டர், ஜ்யோதிஷாராய். தந்தி கிடைக்கவே அழைத்துப் போக வந்திருந்தார். வெளியில் அவருடைய வண்டி நின்று கொண்டிருந்தது. சாமான்களை வண்டியில் ஏற்றியதும் மூவரும் சென்று உட்கார்ந்தார்கள். பிஹாரி வண்டிக்காரனருகில் உட்கார்ந்து கொண்டான். வண்டி ரொம்ப நேரம் அநேக தெருக்களைத் தாண்டிக் கடைசியாக ஒரு பெரிய மாளிகை எதிரில் போய் நின்றது. மூன்று பேரும் இறங்கினர்கள்.

(12)

அன்று சாயங்காலம் உபேந்திரனும், சதீஷும் பதரியா கட்டடத்திற்குப் பக்கத்தில் உள்ள ஒரு சிறிய சந்தருகில் வந்து நின்று கொண்டார்கள்.

"இந்தத் தெரு என்று தான் நான் நினைக்கிறேன்" என்றான் உபேந்திரன்.

சதீஷ் சந்தேகத்துடன், "இந்தச் சந்தில் அவர்கள் ஒருக்காலும் இருக்க மாட்டார்கள். அந்த இடிந்து போன சுவரில் தொங்கிக்கொண்டிருக்கும் பலகையில் ஒரு காலத்தில் தெருப் பெயர் எழுதப் பட்டுருக்கலாம். ஆனால் இப்போது படிக்க முடியாதே. நன்கு தெரியாமல் இந்தச் சந்தில் நுழைவது மகா மோசம். இந்த வழி பாதாள லோகத்திற்குப் போகும் வழி என்று எனக்குப் படுகிறது" என்றான்.

உபேந்திரன் சிரித்துக்கொண்டு, "சரி, நீ இங்கேயே இரு. நான் போய்ப் பார்த்து விட்டு வருகிறேன்" என்றான்.

சதீஷ் முதலில் தடுக்க முயற்சித்தான். பிறகு உபேந்திரன் பின்னால் சென்றான்.

"அண்ணா! ஊர்சுற்றியாகிய எனக்கே இந்தத் தெருவில் நுழைய தைரியம் வரவில்லையே. நீ எப்படித் துணிந்து போகிறாய்?" என்றான்.

"சதீஷ், வீணாக ஊர் சுற்றுகிறவனுக்கு நல்ல மனிதனைவிட தைரியம் அதிகமா?"

சதீஷ் இதற்கு ஒன்றும் பதிலளிக்காமல் வழியை நன்கு பார்த்து நடந்தான். காலடியிலே சாக்கடை சென்று கொண்டிருந்தது. சதீஷுக்கு எங்கு கால்தவறி அதில் விழுந்து விடுவோமோ என்ற பயம். கொஞ்ச தூரம் சென்ற பிறகு சந்து ரொம்பக் குறுகலாகவும், இருளடைந்தும் போய் விட்டது. சதீஷ் பின்னாலிருந்து உபேந்திரனுடைய சட்டையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, "அண்ணா உனது உத்தேசம் என்ன? வீணாகச் செத்துப் போக வேண்டு மென்கிறாயா?" என்றான்.

உபேந்திரன் சிரித்துக் கொண்டு, "எனக்கு நன்கு ஞாபகத்திற்கு வந்து விட்டது. இன்னும் ஒரு வீட்டிற் கப்பால் பதிமூன்றாம் நெம்பர் வீடு இருக்கிறது. எட்டு வருஷத்திற்கு முன் ஒரே ஒரு தரந் தான் இங்கு வந்திருக்கிறேன். ஆகையால் முதலில் தெரிய வில்லை. இப்போது ஞாபகம் வந்து விட்டது. இதே வழி தான்" என்றான்.

சதீஷ் நம்ப வில்லை. "வழி இருக்கலாம், ஆனால் எனக்கும் உனக்கும் அல்ல. இந்தத் தெருவிலுள்ளவர்கள் யாரையாவது நாம் தொட்டு விட்டால் கூட இந்த ராத்திரி வேளையில் கூட நாம் குளித்தாக வேண்டும். இப்போது வேண்டாம் வா, திரும்பிப் போகலாம்" என்றான்.

உபேந்திரன் ஒன்றும் பேசாமல் சதீஷின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஒரு வீட்டிற்கு எதிரில் சென்று, "தீப்பெட்டியை எடுத்து ஒரு குச்சியைக் கிழித்து இது என்ன நெம்பர் என்று பார்" என்றான்.

சதீஷ் தீக்குச்சியைக் கிழித்தான். "நன்கு தெரியவில்லை. கரியில் 13 என்று எழுதியிருக்கிறது. நீ சொன்னது இதுதான் போலிருக்கிறது. வீட்டு நெம்பர் பதிமூன்றானாலும் சரி ஐம்பத்து மூன்றானாலும் சரி உனக்கு இங்கு என்ன வேலை?" என்றான்.

உபேந்திரன் பதிலளிக்காமல், "ஹாரான்! ஹாரான் சந்திரன்" என்று கூப்பிட்டான். மேலே, கீழே எங்குமே இருள் பரவியிருந்தது. யாரும் வருவதாகத் தெரியவில்லை. சதீஷ் பயந்து விட்டான். உபேந்திரன் மறுபடியும் கூப்பிட்டான்.

வெகு நேரத்திற்குப் பிறகு மேலே சன்னல் திறக்கப் பட்டது. அதன் பிறகு ஒரு பெண் "யாரது" என்று கேட்டாள்.

"கதவைத் திறக்கச் சொல்லுங்கள். ஹாரான் அண்ணா எங்கே இருக்கிறார்?" என்றான் உபேந்திரன்.

"இதோ வந்து விட்டேன், கொஞ்சம் இருங்கள்"

கதவு திறக்கப்படும் போதே விளக்கு வெளிச்சம் கதவுச் சந்தில் தெரிந்தது. உபேந்திரன் உள்ளே நுழைந்ததும் ஆச்சரியத்தால் திகைத்துப் போனான். கதவு திறந்தவள் மண் விளக்கைப் பிடித்துக் கொண்டு ஒரு ஓரத்தில் நின்று கொண்டிருந்தாள். தலையில் முக்காடு போட்டுக் கொண்டிருந்தாள். அவளுடைய கூந்தலிலிருந்து ஒரு ரோமம் கூடச் சிதறிக் கிடக்கவில்லை. அவளுடைய அழகிய முகத்திலே, இரு புருவங்களுக்கும் மத்தியில் திலகமிட்டுக் கொண்டிருந்தாள். அதற்குக் கீழே சுடர் விட்டுக் கொண்டிருந்த கண்களின் ஒளி அந்த அந்தகாரத்திலே இருவரையும் திகைக்கச் செய்தது. சதீஷ் அவளுடைய உதடுகளின் மறைவிலே புன்னகையின் ஒளி படர்ந்திருப்பதைக் கண்டான். இதைப் பார்த்து அவன் உபேந்திரனுடைய தோளை மெதுவாக அழுத்தினான். உபேந்திரனுடைய இதயத்திலே இது சுரீர் எனத் தைத்தது. அவன் சிறிது திடுக்கிட்டு,

"ஹாரான் அண்ணா, எங்கே இருக்கிறார்?" என்றான்.

"அவர் மேலே யிருக்கிறார். நடமாட முடியாது. அம்மாளும் ஏழு எட்டு நாளாக படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கிறாள். வீட்டில் நான் தான் சௌக்கியமாக இருக்கிறேன். நீங்கள் தானே உபேந்திர பாபு? நீங்கள் நாளை தான் வருவீர்களென்று இருந்தோம். சமையல் வீட்டுக்கு இங்கிருந்து கூப்பிடும் சத்தம் கேட்பதில்லை. மேலே வாருங்கள், ரொம்பக் குளிராக இருக்கிறது" என்று சொல்லி விட்டு அவள் வழி காண்பித்துக் கொண்டு படியில் மேலே சென்றாள். இரண்டு மூன்று படி மேலே ஏறிய பிறகு திரும்பி அவர்களைப் பார்த்து, "பார்த்து வாருங்கள், படி மோசமாக இருக்கும்" என்றாள்.

அவர்களுக்கும் அவள் கூறியது உண்மைதான் எனப்பட்டது. ரொம்பப் பழைய காலத்து வீடு. மேல் பாகத்தில் ஐந்து ஆறு அறைகள் இருந்தன. அவைகளில் இரண்டு விழுந்து விட்டது. மற்றொன்று அடுத்த வருஷம் விழுவதற்குத் தயாராக இருந்தது. மீதி மூன்று அறைகளில், எதிரில் இருந்த அறைக்குள் மூவரும் பிரவேசித்தார்கள். உள்ளே நுழைந்ததும் அகாலத்தில் நோயாளி வீட்டுக்கு வந்தோமே என்று பச்சாதாபம் உண்டாகியது. அந்த அறையில் கிழிந்த தலையணையிலிருந்து வெளிப்பட்ட பஞ்சுகள் நாற்புறமும் சிதறிக் கிடந்தன. அங்கிருந்த விளக்கு இவர்கள் போனதால் உண்டான காற்றால் ஆடி அசைந்தது. அறைக்குள் உடைந்துபோன நாற்காலிகளும் மேஜையும், பாட்டில்களும் இன்னும் என்னவெல்லாமோ அங்கு மிங்கும் கிடந்தன.

(தொடரும்)

மனை தத்துவம்

[வேணுபாய் பார்ஸி]

சந்தோஷமாக ஆடி அசைந்து புல் சுமையோடு வீடு திரும்பும் பொன்னி இன்று வாடி, வதங்கிய முகத்தோடு காணப்பட்டாள். வழக்கமாக அவளிடம் காணப்படும் உற்சாகமும், முகத்தில் புன்முறுவலும் இல்லை. குனிந்த தலை நிமிராது மெள்ள மெள்ளத் தன் வழி நடந்து வந்தாள். வீட்டுக்கு வந்ததும் நீண்டதொரு பெரு மூச்சு விட்டாள். பிறகு தெருவாசல்க் கதவின் மேல் சாய்ந்த வண்ணம் தலையை தொங்கவிட்டுக் கொண்டு நின்றிருந்தாள்.

அவளை அந்த நிலையில் காண அவளுடைய கணவன் பொன்னம்பலத்துக்கு அதிசயமாயிருந்தது.

'பொன்னி, என்ன? இண்ணக்கி ஒரு மாதிரியா இருக்கிறயே' என்று ஆசையோடு கேட்டான். பொன்னி பதில் பேசவில்லை, அப்படியே நெட்டுக்குத்தாய் நின்றிருந்தாள்.

பொன்னம்பலம் அன்போடு அவளுடைய கைகளைப் பற்றிப் 'பொன்னி! உனக்கு என்ன வந்திருச்சு? என்கிட்டை சொல்ல மாட்டியா? யாராச்சும் உன்னோடே சண்டை போட்டாங்களா?'' என்று பரிவோடு கேட்டான்.

பொன்னியின் கண்களிலிருந்து நீர் ஊற்றுப் போல வந்து கொண்டிருந்தது. இருந்தாலும் அவள் சமாளித்துக் கொண்டு "ஒண்ணுமில்லையே, எனக்கென்ன வந்திடுச்சு'' என்று சேலைத்தலைப்பால் முகத்தை மூடிக் கொண்டே பதில் சொன்னாள்.

"என்னை ஏமாத்தப் பாக்கிறையா? உம் மூஞ்சியிலே கண்ணாடியாட்டமாத் தெரியிதே? எம் வாட்டமா இருக்குது? என்ன நடந்திருச்சு சொல்லு''

"என்ன நடந்திருச்சு ஒண்ணுமில்லை'' என்று சொல்லித் தன் முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். மலர்ந்த தாமரையைப் போன்ற அவள் முகம் அன்று பொலிவிழந்திருந்தது. அழுதழுது அவளது அகன்ற கண்கள் பிதுங்கிக் கொண்டிருந்தன. கன்னங்கள் வீங்கிப் போயிருந்தது. துக்கமும் வெட்கமும் அதில் பிரதிபலித்தது.

பொன்னி குதிரை வண்டி ஓட்டும் பொன்னம்பலத்தின் மனைவி. ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். சேற்றில் பிறந்த செந்தாமரையைப் போல அவள் ஏழையாயிருந்தும் அதிக அழகு உடையவளாக இருந்தாள். இந்த அழகியின் அழகில் ஈடுபட்டு பல வாலிபர்கள் வெறியர்களாகி கேவலம் அவள் தரிசனம் கிடைத்தாலே போதுமென அவ்வூரில் திரிந்து கொண்டிருந்தார்கள். சிலர், ஓரிரண்டு வார்த்தைகள் பேசினல் எத்தகைய விலையானாலும் கொடுக்கத் தயாராக இருந்தார்கள்.

"ஆஹா, இந்தத் தங்கப் பதுமை அவன் கையில் அகப்பட்டதே. பொன்னம்பலம் ரொம்பக் கொடுத்து வைத்தவண்டா. அவன் மேல் இவளுக்கு உயிர். ஆனல் அவனோ

கிளியின் அருமையைத் தெரியாத குரங்காயிருக்கிருன்" என்று அவள் காதில் விழும்படி சிலர் பேசுவது வழக்கம். அப்படிப் பேசினுல் அவள் அன்பைப் பெற லாம் என்பது அவர்கள் எண்ணம் ஆனல் அவளோ இதுவரை ஒரு வனையும் கண்ணெடுத்துப் பார்த்தது கிடையாது. பேசிய தும் இல்லை.

வெள்ளி உதிக்குமுன் எழுந்தி ருந்து புல் கொண்டுவர வயற்காடு செல்வாள். சூரியன் உச்சிக்கு வருமுன் புல் சுமையோடு ஏதா வது பாட்டை முணுமுணுத்துக் கொண்டே உல்லாசமாய் வீடு திரும்புவாள். மாலையில் அதை ஊருக்குள் கொண்டுபோய் விற்று வருவாள். இது அவளுடைய அன்ருட வேலை.

தைப்பொங்கலன்று கிராமத்து இளம் பெண்கள் அனைவரும் தாங்கள் பறித்து வந்த பூக்கூடை களையெல்லாம் மத்தியில் வைத்துப் பிள்ளையார் கோவிலுக்கு முன் புறமாகக் கும்மியடித்துக் கொண் டிருந்தார்கள். பொன்னி முத லில் பாடவும், அவளை அனுசரித்து மற்ற இளம் பெண்கள் பாடிக் கொண்டே கும்மியடித்தார்கள். கிராமத்துச் சனங்கள் எல்லோ ரும் அங்கே திரண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் அந்தப் பெண்களைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். இதே வேளை யில் அவ்வூரின் இளம் ஜமீன்தார் அங்கு வந்தார். அவர் வலிவும் வனப்பும் மிகுந்த இளங்காளை. அவரைக்கண்டதும் கூட்டம் மரி யாதையாக விலகி நின்றது.

அவர் குதிரைமீது வீற்றிருந்த படியே கும்மியடிப்போரைக் கவ னித்தார். அவருடைய பார்வை பொன்னியின் மீது விழுந்தது. அவள் முக்காடு போட்டிருந்தா லும் அவளுடைய அழகிய முகம் குனிந்து நிமிரும் போது அவரு டைய கண்களுக்குத் தெரியாமல் இல்லை. கட்டுக்கோப்பான அவ ளுடைய உடம்பும், அங்க அசைவு களும், பாட்டும் அதற்குத் தகுந்த படி கைகொட்டும் இனிய சப்த மும் அவரைக் கவர்ந்தன. அதிக நேரம் அவர் பொன்னியையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந் தார். தாம் எங்கே இருக்கிருேம் என்பதையுங்கூட மறந்து போய் விட்டார். அவர் திரும்பும் போது "இவள் எனக்குக் கட்டாயம் தேவை" என்று சொன்னது சிலருடைய காதுகளில் விழாமல் இல்லை.

* * *

இளஞ்சூரியனின் பொற் கிர ணங்கள் அழகுக்கு அழகு செய்வ தைப்போல பொன்னியின் சிதறிய கூந்தலுக்கு பொன் முலாம் பூசிக் கொண்டிருந்தது. அவளோ சிரித்த முகத்தோடு சுறுசுறுப்பாக புல் அறுத்துக் கொண்டிருந்தாள். அவள் ஒருதடவை தலை நிமிர்ந்த போது அவளுக்கு எதிரில் நின்று ஜமீன்தார் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவளுக்குத் தூக்கி வாரிப் போட் டது. ஜமீன்தார் மெள்ள முன்ன கர்ந்து அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு ஆசையோடு கேட்டார். "பொன்னி! உன்னேடு கொஞ் சம் பேசவேண்டும். உத்திரவு கிடைக்குமா?" என்று கேட் டார். வெட்கத்தினுலும் கோபத் தினுலும் அவள் கன்னங்கள் சிவந்தன.

"கையை விடுங்கோ இல் லாட்டி சத்தம் போட்டிடுவே" என்று வெறுப்போடு சீறினுள்.

ஜமீன்தாருடைய போதை இன் னும் அதிகமாயிற்று. உணர்ச்சி மேலிட்டதால் கைகளை கெட்டி யாக அழுத்திப் பிடித்துக்

கொண்டே, "கண்மணி பொன்னி! உன்னைப்போன்ற ஒரு அழகிய புஷ்பம், யாருமற்ற வனாந்திரத்தில், தன் வனப்பையும் நறுமணத்தையும் நுகர்ந்து அனுபவிப்பாரின்றி வீணாக, வாடி வதங்கி கருகி மடிவது அழகல்ல. உன்னுடைய அழகில் நான் சொக்கி விட்டேன். என்னைப்பார். நான் உன் அடிமையாகி விட்டேன். என்னைத் தள்ளாதே, தயுவு செய்து ஏற்றுக் கொள்" என்று தேனொழுகப் பேசிக் கெஞ்சினார்.

ஆனால் அவள் எதிர் பாராத விதத்தில் தன் முழு பலத்துடன் திமிறித் தன் கைகளை விடுவித்துக் கொண்டுசினங்கொண்ட 'சாரைப் பாம்பைப் போல' ஒரு நொடியில் மறைந்து விட்டாள்.

தாங்கள் கண்ணுறும் எல்லா அழகிய வஸ்துக்களையும் அனுபவித்து ஆனந்திப்பதே தங்களைப் போன்ற பிரபுக்களின் ஏக போக உரிமையென ஜமீன்தார் எண்ணியிருந்தார். இது வரை அப்படித்தான் நடந்து வந்தது. இன்றுதான் அவருடையை அசட்டுக் கவுரவத்துக்குச் சரியான சாட்டையடி கிடைத்தது. கடைசியாகப் பொன்னி சென்ற திக்கில் தம்முடைய கூர்ந்த பார்வையைச் செலுத்தி விட்டுத் திரும்பினார்.

* * *

ஏமாற்றத்தோடு வீடுதிரும்பிய பொன்னியின் மனதில் அநேக விசாரங்கள் தோன்றி மறைந்தன. யோசித்து யோசித்து அவள் மூளையே குழம்பிப் போயிருந்தது. 'கடல் மடை திறந்து விட்டது போல்' அவள் கண்களிலிருந்து நீர் பெருகிக் கொண்டிருந்தது. இந்தச் சம்பவத்தைக் கணவனிடம் சொல்வதா? வேண்டாமா? சொன்னால் ஜமீன்தாரைக் கொன்றே தீர்வான் இல்லா விட்டால் அவனுக்குச் சரிப்படாது. ஆகையால் சொல்லாமல் இருப்பதே மேல் என்ற முடிவுக்கு வந்தாள்.

"ஏண்டி குட்டி, இண்ணக்கி புல்லறுக்கப் போகலையா? எல்லாப் பொண்டுகளும் போயிட்டாங்களே! விடிஞ்சு எவ்வளவு நேரமாச்சு" என்றாள் மாமியாள்.

"நானு ஒருத்தி எப்படி ஒண்டியாப் போறது?" என்றாள் பொன்னி.

"ஒண்டியா போனா? ஒன்னை புலி, கரடி வந்து தூக்கியிட்டு போயிருமோ?"

"ஒண்டியாப் போனா பயமா இருக்குது. காலிப் பசங்க தொந்தரவு........."

'வித்தாரக் கள்ளி விறகொடிக்கப்
போனாளாம்,
கத்தாழை முள்ளு கொத்தோடே
ஒடிச்சுகிச்சா"

"போடிபோ, யாருகிட்ட அளக்கரே, மத்த புள்ளைங்கோ எல்லாம் போனாங்களே அவுங்களை விட்டுட்டு ஒணக்கு மாத்தரம்...... நீ வம்புக்கு இழுத்திருப்பே. பேசாமே போயி புல்லு கட்டி கிட்டுவா? ஒண்ணுட அழகு எங்களுக்குச் சோறு போடுமோ?" என்று கத்தினாள்கிழவி.

குதிரையைக் கழுவிக் கொண்டிருந்த பொன்னம்பலத்தின் காதில் இந்தப் பேச்சுகள் விழுந்தன.

பாவம்! அவன் வீட்டை அடகு வைத்து முன்னூறு ரூபாய் கடன் வாங்கி அந்தக்குதிரையும் வண்டியையும் வாங்கியிருந்தான். அவனுக்கு அந்தக் குதிரைமேல் உயிர். பாழும் மோட்டார்

வந்து வண்டிக் காரர்கள் வாயில் மண்ணைப் போட்டது.

சாப்பாட்டுக்கே இல்லாத போது குதிரைக்குக் கொள்ளும் புல்லும் எங்கிருந்து விலை கொடுத்து வாங்க முடியும். அதனால்தான் பொன்னி தினம் புல்லறுத்து வர வேண்டியிருந்தது. அதில் பாதியை குதிரைக்கு வைத்துவிட்டு பாதியை விற்று ரெண்டு காசு சம்பாதிக்க வேணும். பொன்னிமேலே அவனுக்கு ரொம்ப ஆசை. அவள் புல்லறுக்கப் போவது அவனுக்கு இஷ்டமில்லைதான். இருந்தாலும் வேறு வழியில்லை.

"கெடக்குது, அம்மா. இண்ணக்கி ஒரு நாளக்கி அவ போயி புல்லு கொண்டாராட்டி என்ன முழுகிப் போச்சு, அவளுக்கு உடம்புக்கு சொகமில்லையோ, என்னவோ!"

தன் புருஷன் தனக்காகப் பரிந்து பேசவும் பொன்னிக்கு வெட்கமும், புண்பட்ட மனசுக்கு கொஞ்சம் சமாதானமும் சந்தோஷமும் ஏற்பட்டது.

"இல்லிங்கோ நாம் போயிட்டு வாறே. இல்லாட்டி குதிரைக்கு என்னத்தைப் போடறது. பாவம்! வாயில்லாச் சீவன். அது வலுவா இருந்தாத்தானே நமக்குச் சுவம்" என்று சொல்லி வேகமாகக் கிளம்பி விட்டாள்.

நேரமோ ஆகிவிட்டது. பொன்னி ரொம்பவேகமாக வயல் காட்டின்வழியாக நடக்கலானாள். அவளுடைய கண்கள் புல் எங்கு செழித்து வளர்ந்திருக்கிறது என்பதை ஆராய்ந்து கொண்டிருந்தன. அவளுடைய மனசு என்னவோ திக் திக் கென்று அடித்துக் கொண்டிருந்தது. "அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பயம்" என்பதைப் போல ஏதாவது இலையின் சலசலப்பைக் கேட்டாலும் நாலா பக்கமும் பயத்தோடு நோக்குவாள். காலின் கீழ் மண்ணுங் கட்டியும் முள்ளும் வேறு குத்திக் கொண்டிருந்தன. அவள் சுய ஞாபகம் இல்லாமலே வெகு தூரம் வந்து விட்டாள். கடைசியில் ஓரிடத்தில், சேலையை முழங்கால்களுக்கு மேல் மடித்து இடுப்பில் சொருகிவிட்டுச் சரசர வென்று அறுவாளின் உதவியால் புல் அறுக்க ஆரம்பித்தாள். அவளுடைய அகன்ற நெற்றியிலும் பூப் போன்ற கன்னங்களிலும் வியர்வைத் துளிகள் முத்துப் போலப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அவள் நெற்றியில் முத்தமிட்டுக் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்த சுருண்டு அழகாகத் தோன்றிய முன் கூந்தலின் சிறு பகுதிகள் அந்த வியர்வையில் சிக்கி நெற்றியுடன் ஒட்டிக் கொண்டு சிறைபட்டன.

திடீரென்று அவள் தலையில் ஏதோ தடவுவது போல இருந்தது. தலை நிமிர்ந்து பார்த்தாள். பிசாசைப் பற்றி நினைத்த மாத்திரத்தில் பிசாசே எதிரில் நிற்பது போல, அவள் யாரைப் பற்றி பயப்பட்டுக் கொண்டிருந்தாளோ, அதே ஜமீன்தார் கம்பீரமாக நின்று கொண்டிருந்தார்.

அந்த ஒரு நொடியில் அவள் நாடிகள் எல்லாம் ஒடுங்கி, உடம்பு ஒரு குலுங்கு குலுங்கிக் குப்பென்று வியர்த்து விட்டது. மறு கணம் ஒரு முடிவுக்கு வந்தவளைப் போல வெகு தைரியத்தோடு வரும் ஆபத்தை எதிர்த்து நிற்கத் தயாரானாள்.

கோபம் ஒரு பக்கம், ஆத்திரம் ஒரு பக்கம். பயம் அதற்குமேல், வெட்கம். இவ்வளவிலும் மன அமைதி கெடாமல் தைரியமாக இரண்டடி பின் வாங்கி, தலை குனிந்தபடி நின்றாள். 'மத்தாப்பு எரியும்போது சிறு நெருப்புப்

பொறிகள் உதிர்வது போல அவளுடைய நெருப்புப் போன்று சிவந்த கண்களிலிருந்து கண்ணீர் சிதறிக் கொண்டிருந்தது. கடுமையான வெய்யிலாலும் கோபத்தினுலும் சிவந்து வாடிப் போயிருந்த அவளுடைய முகத்தைக் கண்டு ஜமீன்தாரின் கல் நெஞ்சில் கூட கொஞ்சம் இரக்கம் பிறந்தது, ஓரடி முன்னே சென்று அவளுடைய தோளின் மீது தன்னுடைய வலது கையை மெதுவாக வைத்த வண்ணம், "பொன்னி, பயப்பட வேண்டாம். உன்னுடைய விருப்பம் இல்லாமல் உன்னை பலவந்தம் செய்ய மாட்டேன். இது சத்தியம். ஆனல் நான் சொல்வதை மட்டும் கேட்டு அப்புறம் உன் பிரியம் போலச் செய்; சொல்லட்டுமா ?"

பொன்னி பேசவும் இல்லே, தோளின் மேல் இருந்த கையை உதறித் தள்ளவுமில்லே ?

ஜமீன்தார் நாடகத்தைத் தொடர்ந்து நடத்தினர். "பொன்னி! உன் மீது எனக்கு எவ்வளவு ஆசை தெரியுமா. அடடா! உனக்கு அது எப்படித் தெரியப் போகிறது. உன் அழகான கண்களால் என்னை ஒரு தடவை பார். உனக்காக நான் எதையும் செய்யத் தயார். இந்த ஊருக்கே உன்னை ஜமீன்தாரிணியாக்கி வைக்கிறேன். சுகபோகங்கள் அத்தனையும் கொடுத்து உன் பாத சேவை செய்கிறேன். அன்பு, காதல் பிரேமை இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியப் போகிறது. இதைவிட உனக்கு இந்த ஜன்மத்தில் கிடைக்கக்கூடிய பாக்கியம் வேறு என்ன இருக்கப் போகிறது. நான் விரும்பும் பிச்சையை நீ எனக்குக் கொடுப்பாயா ?"

ஜமீன்தாருடைய நாடகப் பேச்சு அவளிடம் எந்தவிதமான மாறுதலேயும் உண்டாக்கவில்லே.

அவள் கண்டிப்பான குரலில் பேசினுள்.

"ஒங்களுக்கு கோவம் வராட்டி நா ஒரு வார்த்தை கேக்கட்டுமா ?"

"தாராளமாகக் கேள்! நீ என்ன கேட்டாலும் எனக்கு கோபம் வராது"

"உங்களுக்கு கலியாணம் ஆயிருச்சா ?"

"ஹூம்—ஆ—ச்—சு ஆனல் ஆகியும் ஆகாததைப் போலத்தான் என் நிலமை"

"நீங்க கொஞ்சம் யோசனே பண்ணிப் பாருங்க. எம்புருச— உங்க பொஞ்சாதியிடத்திலே. இப்படி நடந்துகிட்டா உங்க மனசு எப்படியிருக்கும். உதவியில்லாத இந்த இடத்திலே என்னே நயமாப் பேசி பயப்படுத்தி........அதைப் போலவே எம்புருசனும் உங்க பொஞ்சாதியை......யஜமான் என்னுலே பச்சை பச்சையா சொல்ல முடியலேங்க அந்த மாதிரி நடந்தா எம்புருசனே நீங்க கொண்ணுடுவீங்க. எம்புருசனும் அப்படித்தான் உங்களே................ யசமான்...... நீங்க பெரியவுங்க. படிச்சவுங்க, பணக்காரருங்க. நாங்க ஏளேங்க. படிக்காதவங்க. பணக்காரருக்கு மானம், அவமானம், ரோசம் இருக்குது பாருங்கோ, அதுமட்டும் ஏழைங்க கிட்ட சாஸ்தியா இருக்குமுண்ணு உங்களுக்குத் தெரியிலேயா ?"

பொன்னியின் வார்த்தைகள் 'பசுமரத்தாணி போல்' ஜமீன்தாரின் உள்ளத்தில் பதிந்தன. அவளுடைய தைரியத்தையும், சாதுர்யத்தையும் காண அவருக்கே ஆச்சரியமாக இருந்தது. அவருடைய கெட்ட எண்ணம் அநேகமாகப் பறந்து விட்டது. பொன்னியின் தோள் மேல் இருந்த அவருடைய

யையுங்கூட நழுவி விட்டது. ஆனல் தொட்டில் பழக்கம் பாருங்கள். கொஞ்சம் சபலம் இருக்கத்தான் செய்தது. கடைசியாகப் "பொன்னி, நீ சொல்வது சரிதான். ஆனல் எனக்கு உன்மேல் ஒரேஒரு வருத்தம். எனக்கு உன்னிடம் எவ்வளவு ஆசை என்பதைத் தெரிந்து கொள்ளாமல் ஒரேயடியாய் அநியாயம் செய்கிருயே. இப்பவும் ஒன்றும் முழுகிப் போகவில்லை. வேண்டிய அவகாசம் கொடுக்கிறேன், யோசித்துப் பதில் சொல்லு!"

"யஜமான் எம்புருசனைத் தவிர யாரிடமும் ஆசையா இருக்க முடியாது. கனவிலுங்கூட முடியாது. யஜமான் கோவிச்சுக்காதிங்க. எம் வெளி அழகே பாத்திட்டு நீங்க காம வெறியோடே என்னைப் பாக்கறீங்க. அது எம் மேலே உள்ள ஆசை அல்ல. அப்படியிருந்தாக் கூட வேண்டாங்க எசமான். நானு வேறவங்க சொத்து சாமி, என்னை மறந்து போங்க உங்க தங்கச்சியா, என்னெ நெனச்சுக்குங்க. இதுக்கு மேலே சொல்ல வாய் வல்லெயிங்கோ எசமான். உங்களுக்கு ஆயிரங் கும்புடுங்க. தயவு செஞ்சு எம் வழிக்கு இனிமே வராதிங்க. நாம் போயிவாரனுங்க."

மனிதனுக்கு வாலிபத்தில் காளையின் வலுவும், மதுவுண்டது போன்ற போதையும்இருந்து வருகிறது. போதை அதிகமானல் 'இளங்காளை பயமறியாது' என்றபடி தன்னிஷ்டம் போல் அட்டகாசங்கள் செய்கிருன். ஜமீன்தாரின் போதை பொன்னியின் குத்தலான வார்த்தைகளால் தெளிந்து விட்டது.

*　　*　　*

அவர் முற்றிலும் ஒரு புது மனிதராக மாறிவிட்டார். அவரிடம் இருந்த முன்கோபமும், காம இச்சையும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. அந்த இடத்தில் சாந்தமும், நல்லொழுக்கமும் குடி புகுந்து விட்டன. அவரிடம் பயந்து நடுங்கிக் கொண்டு தினம் பத்துத் தடவை உதைபடும் பணியாட்கள் இன்று அவரோடு நெருங்கி நண்பர்களைப் போலப் பழகினர்கள். அவர் எதிரிலே வரப் பயப்படும் ஏழைக் குடிகள் அவருடைய பந்துக்களாக விளங்கினர்கள். அவரிடம் செய்த கூலியைக் கேட்கப் பயப்பட்டவர்கள் இன்று கைநிறைய கூலி வாங்கினர்கள். ஜமீன்தாரின் இந்தப்புது மாறுதல்களைக் கண்டு ஆச்சரியப்படாதவர்களும் இல்லை, புகழாதவர்களும் இல்லை. அவருடைய ஊழியர்கள் வழக்கத்தை விட உற்சாகமாகவும் உண்மையாகவும் பாடுபட ஆரம்பித்தார்கள். இப்போது ஜனங்கள் அவரிடம் காட்டிய பத்தியையும், விசுவாசத்தையுங் கண்ட ஜமீந்தார் கூடச் சந்தோஷப் பட்டார்.

ஒரு நாள் அவசர வேலை நிமித்தம் ஜமீந்தார் கச்சேரிக்குப் போக வேண்டியிருந்தது. கார் ரிப்பேராக இருந்தது. இன்று மட்டும் என்னவோ ஜட்காவில் போகவேண்டும் என்று தோன்றிற்று. ஒரு ஆளை விட்டுப் பொன்னம்பலத்தின் வண்டியைக் கொண்டு வரச் சொன்னர்.

வண்டி வந்ததும் ஜமீன்தார் புறப்பட்டார். வண்டியில் பரப்பியிருந்த கிழிந்த ஜமக்காளத்தையும் எலும்பும் தோலுமாகப் போயிருந்த குதிரையையும் பார்த்த ஜமீன்தார் "என்னடா இது அவஸ்தை. சரியாக சவாரி அகப்படுவதில்லையா என்ன? குதிரை ஒரே எலும்புந் தோலுமாய் இருக்குதே?" என்று கேட்டார்.

"என்ன போங்க யசமான். இந்தப் பாழும் மோட்டார் வண்டிக வந்தாலும் வந்ததுங்க எங்க வகுத்திலே எல்லாம் மண்ணுப் போட்டிடுச்சுங்க. தினம் எட்டணு அம்படாரது குதிரைக் கொம்பாப் போச்சுதுங்க. மார்வாடி கிட்ட முன்னூறு ரூவா கடன் வாங்கி ரம்ப ஆசையா இந்தக் குதிரையும் வண்டியும் வாங்கிச்சுங்க. தம்பிடிக்குப் பிரயோசனம் இல்லிங்க. இதை வித்துத் தொலேச்சு தலேமுழுகலா மிண்ணு வாங்கிக்க யார் இருக்காங்க?"

"ஏண்டா, ரெண்டு காணி நிலத்தை வாங்கி உழுதாச் சுகமா இருக்கலாமே. அதை விட்டுட்டு வேலே வேலேயிண்ணு என்று அலேஞ்சா வேலே எல்லாருக்கும் அகப்படுமா?"

"எஜமான், எல்லாத்துக்கும் பணந்தானுங்க குறுக்கே வருது. மாடுக, கலப்பை, விதை இதெல்லாம் வாங்க வேணுமுங்களா? அவ்வளவு பணம் இருந்தா எங்க ஆட்டுலே எல்லாரும் கயிஷ்டப்பட வேண்டாமுங்களே."

"ஏண்டா உன் தாயார், அந்தக் கிழவி கூடவா வேலே செய்யரா?"

"இல்லே எஜமான். என் வீட்டுக்காரி தினம் புல்லறுத்து வித்து நாலு காசு கொண்டாரா. நானும் கட்டையாட்டமா உசிரோடே இருக்கேனுங்க. பொம்பிளேங்க வேலே செய்யறது எனக்குச் சுத்தமாப் பிடிக்கிலேங்க. என்ன செய்யறதுங்க. வேற வழியில்லேங்க" என்று வருத்தத்தோடு சொன்னுன்.

இதற்குள் வண்டி கச்சேரிக்குள் வந்து விட்டது. சாயங்காலம் வண்டியைக் கொண்டு வரச் சொல்லி விட்டு அவர் கச்சேரிக்குள் நுழைந்தார்.

மாலேயில் கச்சேரி கலேயும் நேரம். அநேக ஜட்கா வண்டிகளும் மோட்டார் வண்டிகளும் கச்சேரியின் முன் நின்று கொண்டிருந்தன. ஜமீன்தார் பொன்னம்பலத்தின் வண்டியை எதிர்பார்த்து ஒரு பக்கமாக நின்று கொண்டிருந்தார். இதற்குள் எங்கிருந்தோ சண்டையும் சச்சரவும் அவர் காதில் விழுந்தது.

சற்று தூரத்தில் தலேயில் புல்லுக் கட்டுடன் பொன்னி நின்று கொண்டிருந்தாள். ஜட்கா வண்டிக்காரர்கள் புல் சுமையின் விலேயைப் பற்றி அவளோடு சச்சரவிட்டுக் கொண்டிருந்தார்கள். இதைக் கண்ணுற்ற ஜமீன்தாருக்கு ஆச்சரியமும் துயரமும் உண்டாயிற்று. பொன்னியைப் போன்ற கோமளமான அணங்கின் தலேவிதி இப்படியா இருக்க வேண்டும்.

அநேக வண்டிக்காரர்கள் அவளேச் சுற்றி கேலியும் கிண்டலும் கலந்த பாஷையில் அவளேத் தொந்தரவு செய்து கொண்டிருந்தார்கள். அவளுடைய பேச்சுத் தெளிவாக அவர் காதில் விழுந்தது.

"அதெல்லா முடியாது, எட்டணுவுக்கு கொறஞ்சு கீழே எறக்க முடியாது. கடைத் தெருவுலே இதே கட்டை பத்தணுவுக்கு வித்துடுவோம். இப்பிடியே போட்டுட்டு வீட்டுக்குப் போலாமுண்ணு எட்டணுக்குத் தாறேன். வாங்குனு வாங்குங்க. விட்டா விடுங்க. கொஞ்ச நேரத்துலே முக்கா ரூவாயிக்கு வித்துக் காட்டறேன்."

"ஒஹோ! பேஷா விற்பே. உம் மூஞ்சியைப் பாத்துட்டு, சொக்கிப் போயி முக்கா ரூவா என்னு வள்ளிசா ஒரு ரூவா தந்திடு வாங்க" என்று கண்ணேச் சிமிட்டிக் கொண்டே ஒரு கிழட்டு வண்டிக்காரன் சொன்னுன்.

இதற்குள் கச்சேரி கலைந்து ஜனங்கள் 'புற்றீசல் கிளம்புவது போல' திரண்டு வந்தார்கள். சிலர் சட்காவிலும், சிலர் கார்களிலும், சிலர் கால் நடையாகவும் சென்றார்கள். இதற்குள் ஒரு பணக்கார வக்கீல், சொந்த வண்டிக்காரர், பொன்னியைக் கூப்பிட்டு, புல்லுக்கட்டை வாங்கிக் கொண்டு ஒரு ரூபாய் கொடுத்து விட்டுப் போனார். அவள் சந்தோஷத்தோடு வீடு திரும்பினாள்.

"தினம் இப்படி ஒரு ரூவா தந்து வாங்கிக்கச் சொல்லு அந்த வக்கீல் ஐயாவை. எண்ணிக்காவது குட்டி........." என்று ஒரு வண்டிக்காரன் அடித்தொண்டையில் சொல்லிக் கொண்டிருந்தான்.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த ஜமீன்தாருக்கு வருத்தம் உண்டாயிற்று. பாவம், அவள் தினசரி வாழ்வில் இத்தனை இடையூறுகள் இருக்கின்றதா? என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தார்.

"என்ன அண்ணு இந்த ஜமீன்தாரு, வெகு நேரமா அந்தப் புல்லுக்காரியைப் பாத்துக்கிட்டே நிண்ணுகிட்டு இருக்காரு" என்று யாரோ பின் பக்கமாகச் சொல்வதைக் கேட்கவும் "பூமி வெடித்துத் தன்னை அப்படியே விழுங்கி விடக் கூடாதா" என்று தோன்றிற்று அவருக்கு.

பிறகு வெளியே வந்தார். பொன்னம்பலம் தயாராக இருந்தான்.

"தீனி போட்டுக் கொண்டார நாழிகை ஆயுடுச்சுங்க. யசமான் மன்னிக்க வேணுமுங்க."

"அது கிடக்கட்டும். உனக்கு இன்று என்ன வாடகை."

"நாலு அணு காசுங்க."

"சரி, நாளையிலிருந்து தினம் காலையில் வண்டியைக் கட்டிக் கொண்டு நம் பங்களாவுக்கு வந்து விடு. தினம் ஒரு ரூபாய் தந்து விடுகிறேன். ஆனல் ஒரு விஷயம். எந்தக் காரணத்தைக் கொண்டும் உன் வீட்டுக்காரியை வீட்டுக்கு வெளியே வேலைக்கு அனுப்பக் கூடாது. உனக்கு வேண்டியதை என்னிடம் கேட்டு வாங்கிக் கொள்."

"யசமான் உங்க தயவு எங்களுக்கு இருக்கு மட்டும் என்ன கொறைச்சல். யசமாங்கிட்டசேவகம் செஞ்சு நாணயமா, கௌரமா வயிறு வளக்க வேணுமுண்ணுதானுங்க ஆசை."

"சரி சரி. சொன்னது நினைவிருக்கட்டும். அப்படி எனக்கு சபதம் செய்து கொடு. இதைப் பற்றி யாரிடமும், ஒன்றும் சொல்லக் கூடாது. தெரிந்ததா."

ஜமீன்தார் அவர் பங்களாவுக்கு வந்ததும் வண்டியிலிருந்து இறங்கி அவனிடம் ஒரு ரூபாய் கொடுத்தார். அவன் அவருக்கு ஒரு கும்பிடு போட்டு வண்டியைத் திருப்பிக் கொண்டு போனன்.

★

நாவலாசிரியர்கள்

[ராஜ்யஸ்ரீ]

நாவலாசிரியர்களெல்லாம் ஒரே பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள் என்பது என் எண்ணம். இல்லா விட்டால் எப்படி எல்லோரும் ஒரே மாதிரியாக — ஒருவரை யொருவர் 'காப்பி' யடித்தாற் போல — எழுதுகிருர்கள்? இல்லாவிட்டால் ஏன் அவர்கள் எழுதும் கதைக ளெல்லாம் காதல் கதைகளா கவே இருக்கின்றன?

நான் இது வரை படித்த கதை களில் ஒன்றிலாவது ஆடவர்களே யில்லாமலோ பெண்களே இல்லா மலோ இருந்ததில்லை.

இந்த நாவலாசிரியர்களுடைய கதா நாயகர்களெல்லாம் ஒரே வார்ப்பு. எந்தக் கதா நாயகனுவது நோயாளியாக இருந்த தாகவோ, பலமற்றவனுக இருந்ததாகவோ, அழகு குன்றியவனுக இருந்ததாக வோ, அங்கஹீனனுக இருந்ததாக வோ, நீங்கள் படித்திருக்கிறீர் களா? நீங்கள் படித்திருக்கவே முடியாது. அவர்களுடைய கதா நாயகர்களெல்லாம் அபூர்வ தெய் வப் பிறவிகள். எல்லோரும் திட காத்திரம் பொருந்தியவர்களாயும், பளபளப்பான மேனியை யுடைய வர்களாயும், ஆஜானுபாஹுக் களாயும் சாமுத்திரிகா லக்ஷணங் கள் அவ்வளவும் பொருந்தியவர் களாயும் இருப்பார்கள்!

இத்துடன் அவர்களுடைய தெய்வாம்சம் நின்று விட்டது. அவர்கள் சாதாரணமாக மனித னுல் முடியாத காரியங்களை யெல் லாம் ஒரு சிரமுமின்றி செய்து விடுவார்கள். எவ்வளவு பெரிய இடையூறு இருந்தாலும் எளிதில் வென்று விடுவார்கள். ராக்ஷஸர் களுடன் போர் புரிந்து வெற்றி பெறுவது அவர்களுக்குப் பிரமாத மான காரியமல்ல. அண்ட பேரண்டப் பக்ஷிகளையும், பெரிய பெரிய காட்டுப் பாம்புகளையும், சிங்கம், புலி கரடி முதலிய துஷ்ட ஜந்துக்களையும் ஒரு நிமிஷத்தில் கொன்று விடக் கூடிய அவ்வளவு புஜபல பராக்கிரமம் உடையவர் கள். ஐந்நூறு அடி உயரத்தி லிருந்து குதித்தாலும் அவர்களு டைய எலும்பு நொறுங்காது. அப் படி இசை கேடாக அந்தக் கதா நாயகர்கள் அடிபட்டு இறந்து விட்டாலும் அந்த சமயத்தில் ஒரு மஹரிஷி ஆகாயத்திலிருந்து வந்து குதித்து அவனைப் பிழைக்க வைத்து விடுவார்!

இந்தக் கதாநாயகர்களுக்குத் தெரியாதது இந்த உலகில் ஒன் றுமே இருக்காது. சமையல் முதல் சைகிள், மோட்டார், ஏரோப்ளேன் சவாரி வரை எல் லாம் இவர்களுக்குத் தண்ணீர்ப் பாடம்!

கதாநாயகிகளும் இம்மாதிரியே தான். அவர்களெல்லோரும் அழ கில் ரம்பை போன்றவர்கள். கண் டதும் காதல் கொள்ளத்தக்க அவ் வளவு மேனியழகை யுடையவர் கள் அவர்கள். அவர்களெல்லோ ருடைய கண்களும் கருவண்டைப் போலவே யிருக்கும்; உதடு கொவ் வைப் பழம் போன்றே இருக்கும் கூந்தல் கருமேகத்தையே ஒத்திருக் கும்; இடை துடியையே நிகர்க் கும்; பற்கள் முத்து வரிசையே போன்றிருக்கும். (கோணலாக ஒரு பல்கூட இருக்காது.) அவர் களெல்லோரும் மான் போன்ற மருண்ட விழியையுடையவர்கள்.

அவர்களெல்லோருடைய நடையும் ஒய்யார நடையாகவே இருக்கும். அன்ன நடை நடப்பவர்கள் அவர்கள். (அவசர நடை என்பதே அவர்களிடம் கிடையாது.) இவ்வளவு லக்ஷணங்களும் பொருந்தாத கதா நாயகியை நீங்கள் காணவே முடியாது.!

இதையெல்லாம்விட காதலனும் காதலியும் சந்திப்பதுதான் விநோதம். நல்ல இருட்டில் (அல்லது பூர்ண நிலாவில்) நள்ளிரவில்தான் இவர்கள் சந்திப்பார்கள். அதுவும் காதலன் நூலேணியின் வழியாக ஏறிப்போய்க் காதலியின் சயன அறையை அடைந்து அங்கேதான் சம்பாஷணையை நடத்துவான். (மாடிப்படி வழியாக ஏறிப்போன கதாநாயகன் ஒருவன் கூடக்கிடையாது) அப்பொழுது பெண்ணின் தகப்பனார் திடீரென்று அறையினுள் நுழைவார். காதலன் ஒளிந்து கொள்ளுவதற்காக அங்கே கட்டில் இருக்கவே இருக்கிறது. அந்தப் பைத்தியக்காரத் தகப்பனார் கட்டிலின் அடியில் மாத்திரம் பார்க்காமல் மற்ற இடங்களையெல்லாம் பார்த்துவிட்டுப் போய் விடுவார். (அவர் இந்த நாவலாசிரியர்களுடைய கதைகளை மாத்திரம் படித்திருந்தால் திருடனைக்கண்டு பிடிக்க எவ்வளவு உபயோகமாக இருந்திருக்கும்!)

சயன அறையில் காதலனுக்கும் காதலிக்கும் நடக்கும் சம்பாஷணையே ஒரு தினுசாகத்தானிருக்கும். அம்மாதிரி அந்தத் தெய்வீகப் பிறவிகள்தான் பேசுவார்களேயொழிய சாதாரண மனிதர்கள் பேசுவது வழக்கமில்லை. காதலன் தன் காதலியை "என் மயிலே", "குயிலே", "என் கண்ணே", "என் முத்தே" என்றுதான் கூப்பிடுவான். அவளும் அவனை "என் ஆருயிரே" என்றோ, "பிராண காந்தா" என்றோதான் கூப்பிடுவாள்! (நல்ல வேளையாக வாழ்க்கையில் இப்படி ஒருவரையொருவர் கூப்பிட்டுக் கொள்ளுவதில்லை. இப்படி ஒருவரையொருவர் கூப்பிட ஆரம்பித்தால் எல்லோரும் தூக்குப் போட்டுக்கொண்டு சாக ஆரம்பித்து விடுவார்கள்!)

இந்த நாவலாசிரியர்களுடைய கதைகளில் இயற்கைக் காட்சிகள் மலிந்து கிடக்கும், பூஞ்சோலைகளெல்லாம் ரமணீயமானதாகவே இருக்கும் தென்னை மரங்களென்ன கமுகு மரங்களென்ன, பனை மரங்களென்ன, ஆல மரங்களென்ன, அரசமரங்களென்ன, எல்லா மரங்களும் அந்தப் பூஞ்சோலையில் இருக்கும், அங்கே இல்லாத மரம் இந்த உலகத்திலேயே இருக்காது. அவைகள் எல்லாக் காலத்திலும் பூத்துக் காய்த்துப் பழுத்துத் தொங்கிக் கொண்டே யிருக்கும்!

நாவலில் வரும் நகரங்களெல்லாம் பெரிய, பெரிய நகரங்களாகவே இருக்கும் (கிராமங்களைப் பற்றிய பேச்சே இந்த நாவல்களில் இருக்காது!) அந்த நகரங்களிலுள்ள கட்டடங்களெல்லாம் அற்புதமானவையாகவே அமைந்திருக்கும். இந்த நகரங்களை வருணிக்கும் நாவலாசிரியர்கள் "மாடமாளிகைகளென்ன, கூட கோபுரங்களென்ன" என்ற ஹோதாவிலேயே அவற்றை வருணிப்பது வழக்கம். ஒரு கட்டடமாவது ஆகாயத்தைத் தொடாமல் இருக்காது!

நாவல் என்று இருந்தால் ஆறுகள் இல்லாமலே இருக்காது. அந்த ஆறுகளில் எப்பொழுதும் ஜலம் ஒன்று பிரவாகமாக ஓடும், அல்லது சலசலவென்று ஓடும். (தண்ணீரில்லாத ஆறே கிடையாது.) ஆற்றங்கரையின் இரு மருங்கிலும் மரவரிசைகள் காணப்படும். இப்படி அமையாத ஆறு

களுக்கு இவர்களுடைய நாவல்களில் இடம் கிடையாது,

ஒரு நாவல் எழுதினால் அதில் ஒரு தடவையாவது காலை, மாலை, இரவு இவற்றைப் பற்றிய வருணனைகளைப் புகுத்திவிட வேண்டுமென்பது இந்த நாவலாசிரியர்களுடைய பள்ளிக்கூடப் பாடம். எந்த நாவலை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். அதில் "காலைக் கதிரவன் தன் இளங் கிரணங்களை உலகத்தின் மீது வீசினான். பக்ஷி ஜாலங்கள் தத்தம் கூட்டைவிட்டு இரை தேடப் புறப்பட்டுக் கொண்டிருந்தன. பூவுலக மாந்தர்கள் துயில் நீத்து தத்தம் அலுவல்களைப் பார்ப்பதற்காகச் சென்று கொண்டிருந்தார்கள், "என்ற காலை வருணனையும், "அப்பொழுது கதிரவன் மேற்கு கடலில் விழுந்து கொண்டிருந்தான். அவனுடைய பொன்னிறக் கிரணங்கள் உலகத்தையே பொன்மய மாக்கி விட்டன. பக்ஷி ஜாலங்கள் தத்தம் கூட்டை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. பூவுலக மாந்தரும் தத்தம் இல்லம் நோக்கி விரைந்து கொண்டிருந்தனர்" என்ற மாலை வருணனையும், "பால்போன்ற நிலவு உலக மக்களை ஆனந்தத்தில் ஆழ்த்திக்கொண்டிருந்தது. வான வீதியில் சந்திரன் பவனி வந்து கொண்டிருந்தான். நக்ஷத்திரக் கூட்டங்கள் மின்மினிப் பூச்சிகளை போன்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டிருந்தன" என்ற இரவைப் பற்றிய வருணனையும் இல்லாமற் போனால் என்னைக் கேளுங்கள்.

இந்த நாவலாசிரியர்களுக்குக் கல்யாணம் செய்து வைப்பதில் அபாரமான ஆசை. எப்படிப் பட்ட பெரிய இடையூறுகளாயிருந்தாலும் சரி, கதாநாயகனையும் கதாநாயகியையும் ஒரு விதமான சேதமுமில்லாமல் கடைசிவரை கொண்டு வந்து அவர்களுக்குக் கடைசியில் ஒரு கல்யாணமும் செய்து வைத்துப் பார்த்தால்தான் இவர்களுக்கு மனச்சாந்தி ஏற்படும்.

ஆகவே நான் முதன் முதலில் கூறியதில் ஏதாவது தப்பு இருக்கிறதா? இந்த நாவலாசிரியர்களெல்லாம் ஒரே பள்ளிக் கூடத்தில் படித்தவர்கள்தானே?

மலர்மணம்

முகப்புப் படம்:

ஆற்றுப் பாட்டு

கலைஞன் கண்களுக்கு உலகமே ஒரு இன்பக் காவியமாகக் காட்சி அளிக்கிறது. அழகின் கதிர்கள் கலைஞன் இதயத்தைத் தொட்டதும் பாடலாகப் பொங்கி விடுகிறது அது. நாட்டை வளம் செய்யும் நதியை, இனிய கவிதையாகப் படம் பிடித்து அளித்திருக்கிறார் நமது சித்திரக் கவி "கதிரவன்."

"வசந்த"த்தில் பண்டைச் செல்வமாகிய சிலப்பதிகாரம் முக்கிய அம்சமாக வெளிவருவதை அன்பர்கள் அறிவார்கள். நாளுக்கு நாள் பாடல்களின் அழகும், வசனத்தின் வனப்பும், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது என்று அநேகம் அன்பர்களும், அறிஞர்களும் பாராட்டிப் புகழ்கிறார்கள். மீண்டும் மீண்டும் படித்துப் பரவசமடைகிறோம் என்ற மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார்கள். நமது சர். ஆர். கே. எஸ் அவர்கள் விரும்புவதும் அதுவேதான். எல்லோரும் பழந் தமிழ் சோலையின் நறுமணத்தை அனுபவிக்க வேணும் என்ற லட்சியம் கை கூடுவதைக் காண பெரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. பொருளாதாரக் கட்டுரைகளும் அவ்வப்போது ஆர். கே. எஸ். தந்து உதவுவார்கள்.

மலைமகத்துவம் என்னும் புதிய தொடர் இந்த இதழில் ஆரம்பமாகிறது. இளம் எழுத்தாளர் தா. நாகலிங்கம் தம் சொந்த அனுபவத்தையே வெகு அழகாக எழுதியிருக்கிறார். கவிதை, கட்டுரை, கதை முதலிய பல பகுதிகளிலும் சுவைபட எழுதும் நாகலிங்கத்தின் தீவிர வேகம், இதிலும் நிறைந்திருக்கிறது.

பாசரசு நவயுவ இலக்கியத்தின் இளம் பிரதிநிதி. வாழ்க்கைச் சித்திரம், கதைச் சித்திரம் முதலிய பல சித்திரங்களை ஏற்கனவே புனைந்துள்ளவர். ரிக்ஷா முனியனுடைய சோகந் தோய்ந்த வாழ்க்கைச் சித்திரத்தை இந்த இதழில் தீட்டியிருக்கிறார்.

"ராஜ்யஸ்ரீ"யின் 'நாவலாசிரியர்கள்' எப்படி வேடிக்கையாக இருக்கிறதெனப் பாருங்கள்.

மலர்களைத் தூவுவது போல் அமைந்த, கு. விசுவநாதன் அவர்கள் 'அழகின் விளையாட்டும்' வேணுபாய் பார்ஸியின், 'மனோதத்து'வமும் சிந்தனையைக் கிளறும் சக்தி படைத்தவை.

இந்த இதழ் சிறப்பு இப்படி இருக்க வருகிற "வசந்த மலரை"ப் பற்றியோ சொல்லவே வேண்டாம்! ஆகா! சித்திரை மலரை நினைத்தாலே வசந்த காலத்தின் இனிமையும் அழகும் மென்மையாக வீசத் தொடங்குகிறது. 'சுவைப்பதற்கு ஏற்ற அற்புதமான மலர்' என்பதை மட்டும் இப்போது சொல்லுகிறோம்.

— ஆசிரியர்.

ஆலப்புழை, தாம் கோஸ் பாங்கியின் வரவு செலவுக் கணக்கை மற்றோர் பக்கத்தில் காணலாம். 1943-ம் வருஷம் ஜனவரி மாதம், இது திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இது தோன்றுவதற்கு மூலகாரணமாயிருந்தவர் வர்த்தகத்துறையில் பெயர் பெற்ற திரு. ஏ. வி. தாமஸ் என்பவராவார். இப்போது பாங்கியின் சேர்மனும் அவரே. 31—12—43 வரை வசூலாயிருந்த மூலதனம் ரூ. 2 லட்சம். இன்னும் ½ லட்சத்துக்கே பங்குதாரர்கள் சேர வேண்டியிருந்தது. இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் 94 A. விதி அமுலுக்கு வராமலிருந்தால் பாங்கியின் மூலதனம் முழுவதும் வெகு சுலபத்தில் சேர்ந்திருக்கும். மீதி நின்ற தொகைக்கும் இப்போது திருவாங்கூர் சமஸ்தானத்திலேயே பங்குதாரர்கள் சேர்ந்து விட்டார்கள்.

சென்ற வருஷம், கோயமுத்தூர் ஒப்பணக்காரவீதி, 14/84 நெம்பர் கட்டடத்திலும், கள்ளிக்கோட்டையிலும், கொச்சியிலும் இந்த பாங்குக் கிளை ஸ்தாபனங்கள் ஏற்பட்டன. இவை தவிர ஆலப்புழை கடைத் தெருவிலும் ஒரு கிளை இருக்கிறது. போன டிசம்பர் 31-வ யுடன் பாங்கிக்கு ஒரு வருஷம் பூர்த்தியாயிற்று. முதல் வருஷத்திலேயே இது வெற்றிகரமாக முன்னேறியிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். இவ்வருஷத்தில் நல்ல லாபமும் கிடைத்திருக்கிறது. ரிசர்வ் நிதிக்கு 25000 ரூபாய் ஒதுக்கி வைத்திருப்பதே அதற்குத் தக்க சான்றாகும். பங்குதாரர்களுக்கு 5 சதவீதம் டிவிடெண்ட் அளிக்கப்பட்டிருக்கிறது.

சகல விதமான லேவா தேவியும் இந்த பாங்கு நடத்துகிறது. அதி சீக்கிரம் இது தட்டுத் தடையின்றி மேலோங்கி வளருமென்பதில் சந்தேகமில்லை.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் மதருஸ்

எஃகு தொழிலைச் சேர்ந்த வருங்கால வாலிபர்கள்

"மேன்மைக் கென்றே விதிக்கப்பட்ட மனிதனின் வாலிப மாகிய அகராதியில் "தோல்வி" என்ற வார்த்தையே கிடையாது."

"மெகாலே"



எஃகு தொழிலில் ஈடுபட்டிருக்கும் மனிதர்களுக்கு, வாலிபமும், ஆவலும் ஏற்ற காலமும் வேண்டிய வெகுமதிகளை அளிக்கின்றன.

வாழ்க்கை யாகிய பிரயாணத்துக்குப் புறப்படும் எந்த வாலிபன் இந்தியாவின் தொழில் முன்னேற்றத்தில் தன் வருங்கால சுகத்தையும் ஆனந்தத்தையும் காண்கிறானோ அவனே அதிர்ஷ்டசாலி.

TATA STEEL

(டாடா எஃகு)

தி டாடா அயரன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்டால் வெளியிடப் பட்டது.

தலைமை விற்பனை இலாகா: 102 A, க்ளைவ் தெரு, கல்கத்தா.

தி சென்டரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்

(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)

(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)

அதிகாரம் பெற்ற மூலதனம்	... ...	ரூ. 3,50,00,000
வாக்களிக்கப் பட்ட மூலதனம்	... ...	ரூ. 3,36,26,400
செலுத்தப் பட்ட மூலதனம்	... .	ரூ. 1,68,13,200
ரிசர்வும் மற்ற நிதிகளும்	... ...	ரூ. 1,48,32,000
டிபாசிட்டுகள் 30–6–1943ல் இருந்தபடி	...	ரூ. 72,27,68,300

தலைமை ஆபீஸ்:

மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங்களும் பெற்றது.

மானேஜிங் டைரக்டர்:- Mr. H. C. கேப்டன், J. P.

டைரக்டர்கள்:-

Sir. H. P. மோடி K. B, E. (தலைவர்)
ஹரிதாஸ் மாதவ்தாஸ்
ஆர்டிஷர் B. துபாஷ்
டின்ஷா D. ரோமர்
விதல் தாஸ் கான்ஜி
நூர்முகம்மத் M. சினய்
பர்புஜி தர்தாபாய் லாம்
தரம்ஷே முல்ராஜ் கர்ட்டாவ்
சர். ஆர்டிஷர் டலால் Kt.,
ஹார்மஸ்ஜி பிரேம்ஜி கனிஷரியட்

லண்டன் ஏஜண்டுகள்:- மெஸிர்ஸ், பர்க்லேஸ் பேங் லிமி., மிட்லண்ட் பேங் லிமி,
நியூயார்க் ஏஜண்டுகள்:- தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லா விதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—

அடோனி, ஆலப்பிளை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக் கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கடப்பை, தோணி, எர்ணுகுளம், குண்டக்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ், மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.

ஓட்டுக் கேட்டது

மனைவி: சீக்கிரமாகச் சென்று இருப்பு தீர்வதற்குள் கொஞ்சம் வாங்குங்கள்.

கணவன்: என்ன அன்பே! அரிசியா?

மனைவி: இல்லை, அரிசி நிறைய இருக்கிறது. "நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள்" வாங்கும்படி சொல்கிறேன்.

கணவன்: என் கண்ணே! நீ சொல்வது முற்றிலும் சரி. இன்று தபாலாபீசில் சில 'சர்டிபிகேட்டு' களை வாங்கி விடுகிறேன்.

சகல பண்டங்களுக்கும் போக்கு வரத்து சாதனங்கள்

கீழ்க் கண்ட ஊர்களிலிருந்து ஊர்களுக்கு லாரி மூலம் வியாபார, விவசாய பண்டங்களை வீட்டுக்கு வீடு கொண்டு போய்ச் சேர்க்க வசதிகள் இருக்கின்றன.

ஸ்ரீ ராம விலாஸ் சர்வீஸ் லிமிடெட்

202/203, மௌண்ட் ரோடு, மதராஸ்

போன்: மதராஸ் "8536" : : தந்தி: "ROAD HAUL" மதராஸ்

கிளை ஆபீஸ்கள்:

1 செரி ரோடு, சேலம்
2 ஈஸ்வரன் கோவில் தெரு, கோயமுத்தூர்
3 கண்டோன் மெண்ட், திருச்சினுப்பள்ளி
4 கிருஷ்ணராயர் தெப்பக்குளத் தெரு, மதுரை
5 ஸ்ரீ நரசிம்ம ராஜாரோடு, பெங்களூர்

மார்க்கங்கள்

1 மதராஸ் — சித்தூர் — பெங்களூர்
2 மதராஸ் — வேலூர் — சேலம் — கோயமுத்தூர்
3 மதராஸ் — திருச்சி — மதுரை — திருநெல்வேலி
4 கோயமுத்தூர் — கள்ளிக்கோட்டை
5 கோயமுத்தூர் — கரூர் — திருச்சினுப்பள்ளி
6 சேலம் — நாமக்கல் — திருச்சினுப்பள்ளி

உங்களது பணியைச் செய்ய எப்போதும் காத்துள்ளோம்.

டிரேட் மார்க்

எங்கும் புகழ் பெற்ற
கோவை, புதுமார்க்கட்
A. P. ராமசாமி செட்டியாரின்
உத்திரவாத நல்லெண்ணெய்
வாங்கி உபயோகியுங்கள்.

காலஞ் சென்ற A. P. R.

தயாரிக்குமிடம்:-

A. P. R. Oil Mills,
Fort. Ramaswamy Nayakar, St.,
Coimbatore.

R. L. சுப்பிரமணிய செட்டி
ஜெனரல் செக்ரடரி.

சுத்த தனி வசிகரம்



மைசூர் சந்தன சோப்
உனக்கு உறுதியாக
அளிப்பது அதுதான்.

அது குளிர்ச்சியுள்ளது.
மிருதுவானது. கூச்சம்
மிகுந்த சருமங்களிலும்
உபயோகிக்கத்தக்கது.

மைசூர்

சந்தன சோப்

கவர்மெண்ட் சோப் பாக்டரி,
பெங்களூர்.

THE
COCHIN TEXTILES

(Proprietors : The west coast Agencies Limited)
[Incorporated in COCHIN STATE]

MANAGING DIRECTOR:

RM. ALAGAPPA CHETTIAR,

M. A., BAR-AT-LAW, D. LITT.

TELEGRAM:
' TEXTILES, TRICHUR '

TELEPHONE
TRICHUR 40.

PUDUKAD MILLS POST. COCHIN STATE

Working Spindlage
29880 Spindles

★

MANUFACTURERS OF

BEST QUALITY SWADESHI YARN IN FINER
COUNTS 40s. 60s. & 80s. TO
SUIT THE REQUIREMENTS OF
THE CONSTITUENTS.

★

Also manufacturers of the Cneese, Cone and Doubled Yarn.

அதிக உணவைச் சுமந்து செல்ல
அதிக ரோடுகள் தேவை



501 ஸோப்பு சிறு துண்டு துக்கடாக்களை யெல்லாம் சேர்த்துக் கொதிக்கும் நீரில் கரையவைத்து அந்த ஸோப்பு ஜலத்தைப் பாட்டிலில் ஊற்றி வையுங்கள். மேலும் உபயோகிக்கலாம்.



ஸோப்பை எப்பொழுதுமே ஜலம் பட்ாதபடிரப்பர் அல்லது ஒயர்ட்ரே யின் மேல் வைத்திருங்கள்.



அழுக்கெல்லாம் இளக, துணிமணிகளை வெந்நீரில் நன்கு ஊற வையுங்கள்.



துணிகள் மீது ஸோப்பை லேசாகத்தேயுங்கள். அழுத்தமாகத்தேய்க்க வேண்டாம். ஸோப்பும்துணிகளும் நீடித்துநிற்கும்

உங்கள் ஸோப்பு நீடித்து நின்று வருகிறதா?

மற்ற எத்தனையோ ரகங்களைப் போலன்றி 501 ஸோப்புகள் நீடித்துழைக்கின்றன. காரணம் அவற்றில் அதிக ஸோப்பு உள்ளதனுல் தான். சிக்கனம் அதிமுக்கியமான இந்நாட்களில் நீங்கள் உங்கள் சலவைக் காரியத்தில் கீழ்வரைந்துள்ள அல்ப விஷயங்களை சற்றுக் கவனத்துடன் பின்பற்றி வருவீர்களானுல் ஸோப்புகளை இன்னும் நீடித்து நிற்கக் செய்ய முடியும்.

501 ஸோப்புகள்

நீளக் கட்டிகளாகவும் கியூபுகளாகவும் டாப்லெட்டுகளாகவும், சீவல்களாகவும் கிடைக்கும். கூட, எல்லா மெல்லிய ஆடைகளுக்கும் உபயோகிக்க 501 ஸ்பெஷல், ஃபில்க் ப்ளேக்குகள் இவையும் கிருமி நாசமான கார்போலிக்கும் கார்ட்போர்ட் பெட்டிகளிலும் விற்கப் படுகின்றன.

மேலும் முக்கியமாக:

உங்கள் தேவைக்கு அதிகமாக ஸோப்பு வாங்கவே வாங்காதீர்கள்.

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா:
பெரிய கடைத் தெரு, பாலக்காடு.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்,
டாடாபுரம் & பம்பாய்.

எல்லா நலங்களும் பெற

எல்லா தேசங்களும் தங்கள் தலைவர்களையே எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய எண்ணங்களெல்லாம் யுத்தத்திற்குப் பின் புனர் அமைப்புத் திட்டங்களிலும் எல்லா நலங்களும் பெற, என்ன செய்வது என்ற முக்கிய பிரச்சனையிலுமே சிந்தை லயித்திருக்கிறது.

குடும்பத் தலைவரும் பாதுகாப்பாளருமான உங்களுக்கு உங்கள் மனைவி மக்கள் சந்தோஷமாகவும் சௌக்கியமாகவும் வாழ்வதெப்படி என்பதிலேயே கவனம் சென்றிருக்கிறது. நீங்கள் எப்போதாவது உங்களுடைய அன்புக்குகந்தவர்கள் எல்லா நலங்களும் பெற என்ன செய்வது என்பதைப் பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

வாழ்க்கை எப்போதுமே உங்களுக்கு இன்பகரமாயிராது. உங்கள் உயிருக் குயிரானவர்களிட மிருந்து விதி திடீரென சதி செய்து பிரித்து விடலாம். அப்போது மரணத்திற்குப் பின் பிரச்சனை எழுகிறது. அப்போது யார் அவர்களைக் காப்பாற்றுவார்கள்? உங்களுடைய சந்ததியின் நல் வாழ்வுக்காகவும் கல்விக்காகவும் யார் நிதி சேகரித்து வைத்திருக்கிறார்கள்?

எங்களைக் கலந்து ஆலோசித்தால் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்து உதவத் தயாராயிருக்கிறோம்.

★

தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பனி

லிமிடெட்

தலைமை ஆபீஸ்: **பம்பாய்**

சென்னை கிளை: **4 & 5 முதல் லைன் பீச், சென்னை**

★

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்லீன், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹமதாபாத்
எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

AV 1

★

A. N. Marudachalam Chettiar

AND

A. Krishnaswamy Chettiar

AGENTS

Messers. Burmah Shell Oil Storage & Distributing Co., of India Ltd.

COIMBATORE

B O C

BOC

Grades

DEPENDABLE

FIRM

FOR

Shell

Grades

THE PRODUCTS OF BURMAH SHELL

MOTOR SPIRITS : MOTOR OILS

GREASES : INDUSTRIAL

LUBRICANTS OF EVERY

DESCRIPTION

★

Fuel Oils : Candles : Shelltox

Etc., Etc., Etc.



T.V.S. முன்னிற்கிறது!



T. V. S. கியாஸ் பிளாண்டுகள் மூன்று வருஷகாலமாக விற்பனையாகி வருகின்றன. இந்தியாவில் இன்று 5,000-க்கு மேல் உபயோகத்திலிருக்கின்றன- இதன் சிறந்த உழைப்பையும், சிக்கனச் செலவையும் கண்டு, கார், டிரக் சொந்தக்காரர்கள் பூரண திருப்தி அடைந்திருக்கின்றனர். தமது வெகுநாளைய அனுபவத்தால்தான் T. V. S இஞ்சினீயர்கள் தலைசிறந்த கியாஸ் பிளாண்டுகளைத் தயாரிப்பது சாத்தியமாகிறது.

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாக காண்பிக்கும்படி டிஸ்ட்ரிப்யூடர்களிடம் கேளுங்கள்.

பிரதான அம்சங்கள்

ஸ்டார்டிங் அதிசுலபம்:—சீக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.

சமகனம்:—டயர் தேய்வு குறைவு. பிரேக்கிற்கு பந்தோபஸ்து அதிகம்.

மும்முறை வடிகட்டும் வசதி:—சுத்தமான கியாஸ். மேற்பார்வை செலவு குறைவு.

மிகவும் நம்பிக்கையானது:—ஆரம்பத்திலிருந்து முடிவுவரை நம்பிக்கையான உழைப்பு.

நேர்த்தியான தோற்றம்:—மற்றெல்லா பிளாண்டுகளையும்விட சிறந்ததோற்றம்.

வாங்கு முன் கியாஸ் பிளாண்ட் மாதிரிகளைப் பாருங்கள்.

T·V·S

T.V. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ், லிமிடெட்

மதுரை & சென்னை.

TVSK-7TM

19794
600 008

சிறந்த ஆபரணங்களுக்கும்
வைரங்களுக்கும்
P.A. ராஜசெட்டியார் & பிரதர்
கடைத்தெரு, கோயமுத்தூர்
போன் 218A - தபால்பெட்டி 139 - தந்தி "ராஜா"

Regd. No. M. 4519 VASANTHAM March-1944

சென்ட்ரல் ஸ்டுடியோஸ் லிமிடெட்

கோயமுத்தூர்

5 APR 1944
MADRAS

நவீன யந்திர சாதனங்களைக் கொண்டு தென் இந்தியா
விலேயே மிகப் பிரக்யாதி வாய்ந்த அநேகம்
தமிழ்ப் படங்களைத் தயாரித்த இணையற்ற
ஸ்டுடியோ!

★

இப்பொழுது தயாராகி வரும் படங்கள்

★

ஹரிதாஸ் — ராயல் டாக்கீஸ்
ஜகதலப்பிரதாபன் — பக்ஷிராஜா பிலிம்ஸ்
வால்மீகி — சென்ட்ரல் ஸ்டுடியோஸ்
சாலிவாகனன் — பாஸ்கர் பிக்சர்ஸ்

மற்றும் இரு அற்புதமான
→ தமிழ்ப் படங்கள் ←

★

Printed at the Vasanta Mills Press, and Published by A. Krishnaswamy at 4/12. A. Tric[illegible]ad, Coimbatore. Editor: R. Thirugnanasambandam